REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK


2024 மார்ச் 19 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 92 இல. 68 | Tuesday 19, March, 2024 | 16பக்கங்கள் | 50/-








யார் என்ன சொன்னாலும் குறைந்த விலைக்கு பொருட்களை கொள்வனவு செய்ய முடிவது காகில்ஸ் இல் மட்டுமே

காகில்ஸ் ஃபுட்சிட்டி வலையமைப்பின் ஊடாக அனைவரும் நாளாந்தம் தேவைப்படும் சகல பொருட்களையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள முடிவதுடன் அத்தியாவசிய பொருட்கள் பலவற்றுக்கும் குறைந்த விலையையும் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலதிக தகவல்கள் 03 ஆம் பக்கத்தில்


## கொழும்பில் போக்குவரத்து கட்டுப்பாட்டுக்கு

# நகர் பிரதேசங்களை உள்ளடக்கி புதிய 'நகர போக்குவரத்து பிரிவு'

### புதிதாக ஆரம்பிக்க பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை

கொழும்பு மற்றும் அதனை அண்டிய நகர் பிரதேசங்களில் போக்குவரத்தை கட்டுப்படுத்தும் வகையில் 'நகர போக்குவரத்து பொலிஸ்' (City Traffic Police) என்ற பெயரில் புதிதாக பொலிஸ் பிரிவொன்றை உருவாக்குவதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பிலிருந்து கடவத்தை, கட்டுநாயக்கா, கடுவெல, மொரட்டுவை, கொட்டாவை, பிலியந்தலை வரை காணப்படும் அனைத்து பொலிஸ் பிரிவுகளையும் உள்ளடக்கி இப் புதிய பொலிஸ் பிரிவை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய நகர போக்குவரத்து (City Traffic Police) பொலிஸாரின் அதிகார பிரதேசமாக மேற்குறிப்பிட்ட பொலிஸ் பிரிவுகள் கணிக்கப்படுமென்றும் உயர் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய பொலிஸ் பிரிவை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் கொழும்பு நகர போக்குவரத்துப் பொலிஸ், மேல் மாகாண தெற்கு மற்றும் மேல் மாகாண வடக்கு ஆகிய

06






02 மத்திய அதிவேக நெடுஞ்சாலை; அமைச்சர் நேரில் சென்று பார்வை

நிர்மாணப் பணிகள் குறித்து கலந்துரையாடல்

VAT 02 பெறுமதி சேர் வற் வரியை 15 வீதமாக குறைக்க நடவடிக்கை

அடுத்த மாதம் முதல் சாத்தியம்

## தினகரனின் 92ஆவது பிறந்த நாள் விழா



தினகரன் நாளிதழ் நேற்று தனது 92 ஆவது பிறந்த தினத்தை கொண்டாடியது. லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். 92 ஆவது வருடத்துக்கான பிறந்த நாள் கேக், லேக் ஹவுஸ் தலைவர் மற்றும் அமைச்சரினால் வெட்டப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட பணிப்பாளர் சபையினரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## 'கடல் சாரணர்கள்' படையணியை நிறுவுவதற்கு அமைச்சரவை பத்திரம்

### அமைச்சர் டக்ளஸ் நேற்று சமர்ப்பிப்பு




வடக்கு கடற்பரப்பில் இந்திய கடற்றொழிலாளர் அடிக்கடி சட்டவிரோதமாக கடற்றொழிலில் ஈடுபடுவதைக் கண்காணிப்பதற்காக "கடல் சாரணர்கள்" எனப்படும் தன்னார்வப் படையை நிறுவுவதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை கடற்றொழில் அமைச்சு சமர்ப்பித்துள்ளது.

வடக்கு கடற்பரப்புக்குள் இந்திய கடற்றொழிலாளர்கள் அத்துமீறி பிரவேசிப்பதைத் தடுப்பதற்காக, நிறுவப்படவுள்ள கடல் சாரணர் பிரிவுக்கு அனுமதி கோரி அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

06

## தனியார் கடன் தொகை ரூ. 97.5 பில்லியனிலிருந்து ரூ. 52.2 பில்லியனாக குறைவு



இலங்கையின் தனியார் கடன் தொகை 2024 ஜனவரியில் 97.5 பில்லியன் ரூபாவிலிருந்து 52.2 பில்லியன் ரூபாவாக குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புள்ளிவிபரங்களில் தெரியவந்துள்ளது.

இலங்கையின் தனியார் கடன் டிசம்பர் மாதத்தில் 97.5 பில்லியன் ரூபாவாகவும் நவம்பரில் 62.9 பில்லியனாகவும் அதிகரித்த பின்னர், 2024 ஜனவரியில் 52.2 பில்லியன் ரூபாவாக குறைவடைந்துள்ளது.

06

## சுகாதாரத் துறையினரின் வேலை நிறுத்தம் 7 நாட்களுக்கு இடைநிறுத்த தீர்மானம்

சுகாதாரத் துறையினர் இன்று காலை 6.30 மணிக்கு ஆரம்பிக்கவிருந்த சுகாதார ஊழியர் பணிப்புறக்கணிப்பை மேலும் 7 நாட்களுக்கு இடைநிறுத்த சுகாதார சேவை ஊழியர் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளரின் கையொப்பத்துடன் 18.3.2023 அன்று சுகாதார அமைச்சர் விடுத்த எழுத்துமூலக் கோரிக்கைக்கு அமைவாக இன்று கூடிய சுகாதார தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் குழுவினால் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

06

## கோப் குழுவிலிருந்து எரான் எம்.பி இராஜினாமா

லோரன்ஸ் செல்வநாயகம்



ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளு மன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன பொது நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்ற குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து (கோப் குழு) இராஜினாமா

06

## போதைப்பொருள், பாதாள கோஷ்டியை ஒழிப்பதற்கான யுத்தமே 'யுக்திய'

### முதல் மூன்று மாதங்களில் உரிய இலக்கின் தூரத்தை கடக்க முடிந்தது

போதைப்பொருட்கள் மற்றும் பாதாள உலகக் குழுக்களை நாட்டிலிருந்து முழுமையாக ஒழிப்பதே யுக்திய இராணுவ நடவடிக்கையின் நோக்கமென பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் (17) நடைபெற்ற பொலிஸ் பிரஜைகள் குழுவினருடனான சந்திப்பிலே, அவர் இதனை தெரிவித்தார். பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான்

06



## ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 19-20 |
|---|---|
| ஸஹர் முடிவு | 04.46 |
| ஸுபஹ் | 05.01 |
| சூரிய உதயம் | 06.16 |
| ழுஹர் | 12.20 |
| அஸர் | 03.33 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

## ஐரோப்பிய பாதுகாப்பு முகவரமைப்பின் சர்வதேச ஒத்துழைப்பு கூட்டம் இன்று



ஐரோப்பிய பாதுகாப்பு முகவர் அமைப்பின் EASA எட்டாவது சர்வதேச ஒத்துழைப்பு கூட்டம் (CAASL) இன்று (19) கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் அனுசரணையுடன் கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.


மூன்று நாட்களுக்கு நடைபெறும் இந்த கூட்டத்தில் ஐரோப்பிய அமைப்பின் ஆசிய பசுபிக் மற்றும் ஏனைய நாடுகளைச் சேர்ந்த உள்ளூர் சிவில் விமான சேவை நிறுவனங்களின் உள்நாட்டு

06

## அதிக வெப்ப நிலையால் நீர்ப்பாவனை 15 வீதம் அதிகரிப்பு

### வீண் விரயம் வேண்டாமென அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



நாடளாவிய ரீதியில் நிலவும் கடும் வெப்ப நிலை காரணமாக நீருக்கான கேள்வி அதிகரித்து, நீர் பாவனை 10 வீதத்திலிருந்து 15 வீதமாக அதிகரித்துள்ளதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை

06

## தாய்லாந்து சொகுசு கப்பல் கொழும்பு வருகை



தாய்லாந்து சொகுசு கப்பல் நேற்று 1100 பயணிகளுடன் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. பல நாடுகளையும் சேர்ந்த பயணிகள் இக்கப்பலில் வருகை தந்திருந்தனர். நாட்டின் முக்கிய பல பகுதிகளுக்குச் சென்ற இவர்கள் பின்னர் நேற்று மாலையே இக்கப்பலில் மாலைதீவு நோக்கிப் புறப்பட்டனர். இக்கப்பலில் அவுஸ்திரேலியா, ரஷ்யா மற்றும் ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த பலர் வந்திருந்தனர்.

## மலையகத்தில் மரக்கறி விலைகளில் வீழ்ச்சி

### 2,000 ரூபா கரட் 280 ரூபாவுக்கு விற்பனை



மலையக பகுதிகளில் மரக்கறி வகைகளின் விலைகள் குறைவடைந்துள்ளன. கெப்பெட்டிபொல பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் (18) ஒரு கிலோ கரட் 280 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

ஒரு கிலோ போஞ்சி 150 ரூபாவாகவும், ஒரு கிலோ

06

## காத்தான்குடியில் 735 மதன மோதக லேகியத்துடன் 35 வயது நபர் கைது



யுக்திய விசேட போதையொழிப்பு நடவடிக்கையின் கீழ், காத்தான்குடி பொலிஸாரால் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில், 735 மதன மோதக லேகியங்களுடன் 35 வயது நபரொருவர் டெலிகொம் வீதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய இந்நபர் கடந்த (17) வாகனத்துடன் கைதானார். இவரிடமிருந்து 735 லேகிய பக்கெட்டுக்கள்

06

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
திනකරන්
2024 மார்ச் 19 செவ்வாய்க்கிழமை

**தொழுகை நேரம்**

சுபஹ் - 05.01
லுஹர் - 12.20
அஸர் - 03.33
மஃரிப் - 06.22
இஷா - 07.31

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் பங்குனி 06
ராகுகாலம் : பகல் : 03.18 - 04.48வரை
சுபநேரம் : காலை : 10.48 - 12.48வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# மேல் மாகாண சுகாதார துறையினரின் வருடாந்த இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

மேல் மாகாணத்தில் வருடாந்த சுகாதார துறையினரின் இடமாற்றங்கள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க, மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ரொஷான் குணதிலக்க இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

மேல்மாகாணத்தில் வருடாந்த இடமாற்றங்கள் முறைசாரா முறையில் நடைபெறுவதாக குற்றஞ்சாட்டி மேல்மாகாண வைத்தியசாலை ஊழியர்கள் (18) நகர அபிவிருத்தி அமைச்சின் பொது மக்கள் தினத்திற்கு வந்து முறைப்பாடுகளை முன்வைத்தனர். மேல் மாகாணத்தைச் சேர்ந்த சுமார் 300 மருத்துவமனை ஊழியர்கள் அமைச்சரைச் சந்தித்தனர்.

முறைசாரா முறையில் வருடாந்த இடமாற்றங்கள் இடம்பெற்றதாக இவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இதையடுத்து மேல்மாகாண ஆளுநர் எயார் வைஸ் மார்ஷல் ரொஷான் குணதிலக்கவை மேல்மாகாண ஆளுநர் அலுவலகத்திற்குச் சென்று அமைச்சர் சந்தித்தார்.

இதன்போது உண்மைகளை விளக்கிய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், இந்த வருடாந்த இடமாற்றங்களை மேற்கொள்வதில் தொழிற்சங்கங்களின் கோரிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதாக தெரிவித்தார். சில சுகாதார தொழிற்சங்கங்கள் ஊழியர்களின் கோரிக்கைகளை புறக்கணித்து வருவதாக கலந்துரையாடலில் கலந்து கொண்ட ஊழியர்கள் தெரிவித்தனர். நிறுவனங்களின் தலைவர்களுக்கும் ஊழியர்களுக்கும் இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்தி, சுகாதார சேவையை சீர்குலைத்து அரசாங்கத்தை தர்மசங்கடத்தில் ஆழ்த்துவதற்கு சில சுகாதார சங்கங்கள் செயற்படுவதாக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு தெரிவித்தார்.

பெரும்பான்மையான சுகாதார ஊழியர்களின் கோரிக்கையை கருத்தில் கொண்டு இந்த இடமாற்றங்களை தற்காலிகமாக ரத்து செய்து முறைப்படி நடைமுறைப்படுத்துமாறு ஆளுநரிடம் அமைச்சர் கேட்டுக் கொண்டார். இதனை ஏற்றுக்கொண்ட ஆளுநர், இந்த இடமாற்றங்களை தற்காலிகமாக இரத்து செய்தார்.




# ரமழானின் இரவு வணக்கம்

நபி (ஸல்) அவர்கள் புனித ரமழானில் நின்று வணங்குவதோடு ஏனையோரையும் அதற்கு ஆர்வமூட்டக்கூடியவர்களாக இருந்தார்கள். இதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. அல்லாஹுத்தஆலா அவனது அருள்மறையில் இரவு வணக்கம் குறித்து பின்வருமாறு குறிப்பிட்டிருக்கின்றான்.

'அவர்களுடைய விலாக்களைப் படுக்கைகளிலிருந்து (தூக்கத்தைத் துறந்து) உயர்த்தி அவர்கள் தங்களுடைய இறைவனை அச்சத்தோடும் நம்பிக்கை ஆர்வத்தோடும் பிரார்த்தனை செய்வார்கள். மேலும் நாம் அவர்களுக்கு அளித்ததிலிருந்து (தானதர்மங்களில்) செலவும் செய்வார்கள்'. (32:16).

'அவர்கள் செய்த (நற்)கருமங்களுக்குக் கூலியாக மறைத்து வைக்கப்பட்டுள்ள கண் குளிர்ச்சியை (மறுமையின் பேரின்பத்தை) எந்த ஓர் ஆன்மாவும் அறிந்து கொள்ள முடியாது'. (32:17).

மேலும் நபி (ஸல்) அவர்கள் ரமழானில் இரவு வணக்கத்தில் ஈடுபடுவது தொடர்பில் குறிப்பிடும் போது, 'யார் ரமழானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும், இரவு வணக்கத்தில் ஈடுபடுகின்றாரோ அவரது முன் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன என்றார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி)

மற்றுமோர் ஹதீஸில் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், 'யார் லைலத்துல் கத்ர் எனும் மகத்துவ மிக்க இரவில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நின்று வழிபடுகிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும். யார் ரமழானில் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பார்த்தும் நோன்பு நோற்கிறாரோ அவருடைய முந்தைய பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிடும்' என்றும் கூறியுள்ளார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி).

எனவே, ரமழானின் இரவு நேரங்களில் வீண்விளையாட்டுக்களில் ஈடுபடுவதை முற்றாகத் தவிர்த்து இரவு வணக்கங்களில் ஈடுபட்டு அல்லாஹ்வின் இறையருளைப் பெறுவோம்.

முப்தி எ.எச்.எம் மின்ஹாஜ்
(காஷிபி, மழாஹிரி) நிந்தவூர்

# தவக்கால சிந்தனை



## பாராட்டுதலை எதிர்பாராத பிறர் பணி

தவக்காலத்தில் வருகின்ற புனித யோசேப்பின் பெருவிழாவானது நம்பிக்கை, தாழ்ச்சி, தந்தைக்குரிய பரிவு போன்ற விழுமியங்களால் பின்னிப்பிணைக்கப்பட்டு குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

புனித யோசேப் ஏழ்மையான தச்சுத் தொழிலாளியாக, கடவுளின் திட்டத்திற்கு கீழ்ப்படிந்தவராக மனமாற்றத்திற்குரிய தவக்காலத்தில் நாம் எண்ணிப் பார்க்கக் கூடியவராகத் திகழ்கிறார்.

தவக்காலப் பின்னணியில் புனித யோசேப்பின் அமைதியான துணிவு, தளர்ச்சியுறாத நம்பிக்கை போன்றவை வழிகாட்டும் ஒளியாகத் திகழ்கிறது. கடவுளின் அறிவுறுத்தலுக்கு அவரது கீழ்ப்படிதலானது,அதிலும் குறிப்பாக திருக்குடும்பத்தினை பாதுகாப்பதிலும் பராமரிப்பதிலும் அவர் காட்டிய அக்கறையானது நாமும் நமது வாழ்வின் நிச்சயமற்ற துன்பங்கள் நிறைந்த சூழ்நிலைகளில் கடவுளின் திட்டத்திற்கு நம்மையே வழங்க அழைப்பு விடுக்கிறது.

தவக்காலமானது விடுக்கின்ற அழைப்பு யாதெனில் நாமும் புனித யோசேப்பைப் போன்று கடவுளின் அருட்செல்வத்திற்கு நம்மையே முழுமையாகக் கையளிப்பதுடன் நமது பாதைகள் நிச்சயமற்றதாக இருந்தாலும் நம்பிக்கை நம்மை வழிநடத்தும் என்கிற உறுதியுடன் முன்செல்வோம் என்பதாகும்.

மேலும் பாதுகாவலராக, பராமரிப்பாளராக புனித யோசேப்பின் பணியானது அடுத்தவர்கள் மட்டிலான அதிலும், குறிப்பாக ஒதுக்கப்பட்டோர் தேவையில் இருப்பவர்கள் மட்டிலான பரிவினை எடுத்துரைக்கிறது.

தவக்காலமானது புனித யோசேப், மரியா, இயேசுவை பாதுகாத்தது போன்று நாமும் நமது வாழ்வில் நாம் பின்பற்ற வேண்டிய அடுத்தவரைப் பராமரித்தல் என்பதைக் குறித்து சிந்திக்க, தியானிக்க அழைக்கிறது.

இக் காலமதில், நாம் எவ்வாறு எமது குடும்பங்கள், சமூகங்கள், உலகம் என்கிற பரந்த குடும்பத்திற்கு நம்மாலான பராமரிப்பினை வழங்கலாம் எனச் சிந்திக்க வேண்டும்.

அவரது அமைதியான அர்ப்பணமானது தாழ்ச்சியின் முக்கியத்துவத்தை ஞாபகமூட்டுகிறது. அவரது தாழ்ச்சி கடவுளின் திட்டத்தினை மிகுந்த அன்போடு நிறைவேற்ற உதவியது. தவக்காலமானது நமது வாழ்வின் முக்கிய வாய்ந்தவைகள் எவை என்பதை அசைபோட்டுப் பார்க்க அழைப்புத் தருகிறது.. அங்கீகாரத்தையும் பாராட்டுதலையும் எதிர்பாராது அடுத்தவர்களுக்கு பணி புரிவோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்டப் பகுதிக்கு அமைச்சர் விஜயம்



பொத்துஹெர முதல் கலகெதர வரையிலான அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் பொத்துஹெரயிலிருந்து ரம்புக்கன வரையான பகுதிக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன விசேட கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். பொதுஹெர லிஹினிகிரிய பிரதேசத்தில் அமைந்துள்ள இத்திட்டத்தின் அலுவலகத்திற்கு விஜயம் செய்த அமைச்சர், தற்போதைய வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாக, அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர், தற்போது நிர்மாணப்பணிகள் நடைபெற்று வரும் பொத்துஹெர இடை பரிமாற்ற நிலையம், வதகட, துருவியன பூல்கொல்ல, தொம்பேமட போன்ற பல இடங்களையும் அமைச்சர் தலைமையிலான அதிகாரிகள் பார்வையிட்டனர். மொத்தம் 32.45 கி.மீ தூரம் கொண்ட இந்த மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்டம் நான்கு மாற்றுப்பாதைகளைக் கொண்டுள்ளது. 2022ஆம் ஆண்டுக்கு முன்னர் 29 பில்லியன் ரூபா செலவில் இந்தப் பகுதியை நிர்மாணித்து முடிக்க திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்ததால், டொலரின் பெறுமதி உயர்ந்து, தற்போது 52 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக செலவிட வேண்டி உள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.



# சமூக, பொருளாதார நிலைமைகளை மேம்படுத்த ஜப்பான் 3,300 கோடி ரூபா நிதியுதவி

*லோரன்ஸ் செலவநாயகம்*

ஜப்பானிய அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின்கீழ் 1600 மில்லியன் யப்பான் யென்களை (3300 கோடி ரூபா) வழங்குவதற்கு ஜப்பான் தீர்மானித்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் கொழும்பில் கைச்சாத்தானது.

இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கத்திற்கிடையில் நிலவும் இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் நாட்டின் சமூக மற்றும் பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தும் நோக்கில் ஜப்பானிய அரசாங்கம் இந்த நிதியுதவியை இலங்கைக்கு வழங்குகிறது.

இது தொடர்பான ஆவணங்கள் பரிமாற்றம் மற்றும் ஒப்பந்த கைச்சாத்து நிகழ்வில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் நிதி, பொருளாதார மேம்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளர் கே. எம். மஹிந்த சிறிவர்தன கைச்சாத்திட்டுள்ளார்.

அத்துடன் ஜப்பானிய அரசாங்கத்தின் சார்பில் இலங்கையிலுள்ள ஜப்பானியத் தூதுவர் மிசுகோஷி ஹிதெயகி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

# 'ஜயகமு ஸ்ரீலங்கா' திட்டத்தின் மூலம் இளைஞருக்கு தொழிற்துறை பயிற்சி

**www.glocal.lk ஊடாக இன்றே பதிவு செய்யலாம்**

ஜயகமு ஸ்ரீலங்கா திட்டத்தின் மூலம் திறமைமிக்க இளைஞர்களை உருவாக்குவதற்காக SMART YOUTH CLUB ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதனூடாக அனைத்து தொழித்துறைகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாக தொழில் மற்றும்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

இத்திட்டத்தின் ஊடாக ஹோட்டல் முகாமைத்துவம், நீர்க் குழாய் பொருத்துதல், வர்ணம் பூசுதல் மற்றும் வெல்டிங் போன்ற தொழித்துறைகளுக்கு பிரதேச மட்டத்தில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

இதற்காக ஜனாதிபதி நிதியம் நிதி உதவியளிக்கிறது. ஆர்வமுள்ளவர்கள் பதிவுகளை இன்றே www.glocal.lk என்ற இணையத்தளத்தில் மேற்கொள்ளமுடியும்.

இளைஞர்களை ஒன்றிணைப்பதால் பொருளாதாரப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்று நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்றும் அமைச்சர் மனுஷ தெரிவித்தார்.

# பெறுமதி சேர் வரியை 15 வீதமாக குறைக்க விரைவில் நடவடிக்கை

## அடுத்த மாதமளவில் சாத்தியமாகும்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொலைநோக்கு செயற்பாட்டினால் நாடு தற்போது பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டு வருகிறது. இதனால் மக்களின் வாழ்கை ஓரளவில் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது.

இந்நிலமையை தொடர்ந்து அடுத்த மாதம் முதல் பெறுமதி சேர் (Vat) வரியை 15 வீதமாக கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

'ஜெயகமு ஸ்ரீலங்கா' 06 ஆவது வேலைத் திட்டத்தின் இரண்டாம் நாள் நிகழ்வு பொலன்னறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் (17 )அமைச்சரின் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் மனுஷ நாணயக்கார இவ்வாறு தெரிவித்தார். இங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர்,

மஹாதீர் மஹ்மூத் போன்ற தலைவருடன் ஒப்பிட்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்று,நாட்டை சிறப்பாக வழிநடத்தி தொலைநோக்கு தலைவர் என்பதை ரணில் விக்கிரமசிங்க நிரூபித்துள்ளதாகவும் அமைச்சர் மனுஷா தெரிவித்துள்ளார்.

காசியப்ப மன்னரால் வடிவமைக்கப்பட்ட சீகிரியா ஓவியம் டொலர்களை இன்றும் நாட்டுக்கு ஈட்டித்தருகிறது.

அவ்வாறே பராக்கிரமபாகு மன்னன் பொலன்னறுவையில் பராக்கிரமபாகு சமுத்திரத்தை நிர்மாணித்து நீர்ப்பாசனத் தொழித்துறையை ஆரம்பித்தார். டி.எஸ். சேனநாயக்கவினால் ஆரம்பிக்கப்பட்ட கல்ஓயா திட்டத்தினால் நாடு வளம்பெற்று அரிசியில் தன்னிறைவு அடைந்துள்ளது.

மக்கள் பதவியை விட்டு வெளியேற்றியபோது, நாட்டைக் முன்னேற்ற முடியாது என்றபோதும், பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி தென்னகோன் கொல்லப்பட்டபோதும், வீடுகளுக்குத் தீ வைத்து சேதங்களை ஏற்படுத்திய போதும் ரணில் விக்கிரமசிங்க மூலம்தான் இந்த நாட்டைக் கட்டியெழுப்ப முடிந்துள்ளது.

நாட்டைக் கட்டியெழுப்பிய தொலைதூர தலைவர் என்பதைப் ரணில் விக்கிரமசிங்க மீண்டும் நிரூபித்துள்ளார்.

மஹாதீர் மஹ்மூத் போன்ற ஒரு தலைவர் கொண்டு வரப்பட்டார். அனால் அவர் பொருளாதார ரீதியில் தவறான முடிவுகளை எடுத்ததால் அதனை எதிர்கொள்ள முடியாத நிலைக்கு தள்ளப்பட்டோம்.

கருத்துக்களால் நாம் ஏமாற்றப்படாமல் சரியான தலைவரை தேர்ந்தெடுக்க வேண்டும். நாட்டில் மகிழ்ச்சியை உண்டாக்க வழிவகுக்க வேண்டும்.

பொலன்னறுவையில் எத்தனை சுற்றுலாப் பயணிகள் உள்ளனர்? சிறிய விஷயங்களில் மகிழ்ச்சியைக் காண வேண்டும். ஒரு சிறிய பட்டாம்பூச்சியின் இறக்கைகள் படபடப்பதால் புயல் உருவாகலாம்.

இந்த நாட்டை கட்டியெழுப்ப நாம் ஒவ்வெருவரும் எம்மில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

இதுதான் உண்மையான பொருளாதாரப் போராட்டம். அந்தப் போராட்டத்தை அரசு என்ற ரீதியில் முன்னெடுத்துச் செல்ல ஆரம்பித்துள்ளோம்.

# நாட்டில் நிகழும் படுகொலைகள் கட்டுப்படுத்த புதிய நடவடிக்கை

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல் கும்பல்களை ஒடுக்குவதற்கு புதிய நடவடிக்கையை ஆரம்பிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோன் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி ஆகியோரின் நேரடி மேற்பார்வையின் கீழ், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தற்போது அதிகளவில் மனிதப் படுகொலைகள் சம்பவங்கள் இடம்பெற்றுவரும் மேல் மற்றும் தென் மாகாணங்களில் இந்த நடவடிக்கை உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி இப்பகுதிகளில் 20 ஆயுதம் தாங்கிய அதிரடி பொலிஸ் படையணிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளன.

இதேவேளை, அனைத்து கிராமிய சேவை பிரிவுகளிலும் ஸ்தாபிக்கப்பட்ட சமூக பொலிஸ் பிரிவை மேலும் பலப்படுத்தி அதனூடாக தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமென பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பாரிய பொறுப்பு கிராம மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு குழுக்களுக்கு உண்டெனவும் பொலிஸ் மாஅதிபர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சமூகப் பொலிஸ் பிரிவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# இலங்கையரின் உடல்கள் கனடாவில் நல்லடக்கம்; பெருந்தொகையானோர் பங்கேற்பு

கனடாவின் ஒட்டாவா Barrhaven பகுதியில் படுகொலை செய்யப்பட்ட இலங்கையர் 05 பேர் மற்றும் அவர்களது நண்பரின் இறுதிக் கிரியைகள்,பலரின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் நடைபெற்றதாக கனடாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது. கொல்லப்பட்ட 06 இலங்கையரின் இறுதிக்கிரியைகள் கடந்த (17) பிற்பகல் ஒட்டாவாவில் நடைபெற்றன.

பலரின் கண்ணீருக்கு மத்தியில் இது நடைபெற்றது.

இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கு இரங்கல் குறிப்புகள் எழுதும் வாய்ப்பும் வழங்கப்பட்டது. இப்படுகொலையிலிருந்து தப்பித்த தந்தை தனுஷ்க விக்கிரமசிங்கவும் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தார்.



யார் என்ன சொன்னாலும்
குறைந்த விலையில் வழங்குவது
காகில்ஸ் மட்டுமே
ரூ.265 வெள்ளை சீனி 1kg
ரூ.305 மைசூர் பருப்பு 1kg
ரூ.255 பொன்னி அரிசி (இறக்குமதி செய்யப்பட்ட) 1kg
ரூ.202 வெள்ளை நாட்டரிசி (உள்நாடு) 1kg
ரூ.169 சிகப்பரிசி (உள்நாடு) 1kg
ரூ.194 வெள்ளை அரிசி (உள்நாடு) 1kg
ரூ.495 கடலை 1kg
ரூ.595 சோயா மீட் 1kg
ரூ.545 மை சொய்ஸ் மெக்கரல் 425g
ரூ.31 தக்காளி 100g
ரூ.25 போஞ்சி 100g
ரூ.34 கத்தரிக்காய் 100g
ரூ.62 கோவா 100g
ரூ.32 பப்பாளி 100g
ரூ.42 கோழிகூட்டு வாழைப்பழம் 100g
ரூ.198 வெள்ளை தலபத் 100g
ரூ.198 சிகப்பு தலபத் 100g
ரூ.85 சூரை மீன் (சிறியது) 100g
Best Buys
பொருட்கள் பலவற்றிற்கு 30% வரை விசேட சேமிப்பு
2024 ஏப்ரல் 30 வரை
சாதாரண விலை ரூ.3,900 எங்களின் விலை ரூ.3,510 சஸ்டஜன் (வெனிலா) 400g
சாதாரண விலை ரூ.450 எங்களின் விலை ரூ.396 கொகா கோலா 2L
சாதாரண விலை ரூ.1,100 எங்களின் விலை ரூ.880 நெஸ்கபே கிளாசிக் 50g
சாதாரண விலை ரூ.420 எங்களின் விலை ரூ.357 மெகி நூடுல்ஸ் (பெமிலி மீல் பெக்) 335g
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.650 எங்களின் விலை ரூ.585 பிரிமா கொத்து மீ (ஹொட் என்ட் ஸ்பைசி) 5 இன் 1 பெக்
சாதாரண விலை ரூ.430 எங்களின் விலை ரூ.387 கிஸ்ட் தக்காளி சோஸ் (ஸ்குயிஸ் போத்தல்) 370g
சாதாரண விலை ரூ.980 எங்களின் விலை ரூ.882 கிஸ்ட் அப்சலூட் அப்பிள் ஜூஸ் 1L
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.540 எங்களின் விலை ரூ.486 கிஸ்ட் மாம்பழ நெக்டா 1L
சாதாரண விலை ரூ.700 எங்களின் விலை ரூ.630 கிஸ்ட் கிப்ஃட் அஸ்ரோனமன்ட் 400g
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.1,550 எங்களின் விலை ரூ.1,395 கிஸ்ட் மெஜிக் குக்கி அஸ்ரோனமன்ட் 330g
சாதாரண விலை ரூ.1,600 எங்களின் விலை ரூ.1,360 அஸ்ட்ரா 1kg
சாதாரண விலை ரூ.380 எங்களின் விலை ரூ.323 பெப்சி / 7 up 1.5L
சாதாரண விலை ரூ.380 எங்களின் விலை ரூ.323 யானை நெக்டோ / ஜின்ஜர் பியர் / ஒரேன்ஜ் பார்லி 1.5L
சாதாரண விலை ரூ.250 எங்களின் விலை ரூ.200 கின்லி கிளப் சோடா 1.5L
சாதாரண விலை ரூ.600 எங்களின் விலை ரூ.540 உபுல் பேரீச்சம் பழம் 300g
சாதாரண விலை ரூ.1,230 எங்களின் விலை ரூ.1,077 போர்ச்சூன் கொக்கோபைன் தேங்காய் எண்ணெய் 1L
சாதாரண விலை ரூ.1,650 எங்களின் விலை ரூ.1,238 லிப்டன் சிலோன்டா தேயிலை 450g
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.2,170 எங்களின் விலை ரூ.1,953 பைனஸ்ட் சிக்கன் புரேக்வஸ்ட் சொசேஜ் 1kg
சாதாரண விலை ரூ.1,290 எங்களின் விலை ரூ.1,161 கோல்டி கொச்சி சிக்கன் சொசேஜ் 600g
சாதாரண விலை ரூ.820 எங்களின் விலை ரூ.656 கோலோ அசல் தேங்காய் பால் பவுடர் 300g
சாதாரண விலை ரூ.410 எங்களின் விலை ரூ.349 க்ளோசப் டூத் பேஸ்ட் (Red Hot) 120g
சாதாரண விலை ரூ.660 எங்களின் விலை ரூ.528 லக்ஸ் சோப் (மல்டி பெக்) 400g
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.700 எங்களின் விலை ரூ.560 ராணி சோப் (சந்தனம்) 5 in 1, 350g
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.700 எங்களின் விலை ரூ.560 கொஹோம்ப சோப் (ஒரிஜினல்) 5 in 1, 350g
rewards சலுகை மேலதிக 10%
சாதாரண விலை ரூ.545 எங்களின் விலை ரூ.491 பெம்ஸ் சுப்பீரியர் (ஹெவி ஃப்ளோ) 16s
சாதாரண விலை ரூ.270 எங்களின் விலை ரூ.243 பெம்ஸ் கொட்டன் பீல் விங்க்ஸ் 10s
சாதாரண விலை ரூ.880 எங்களின் விலை ரூ.748 சன்லைட் கெயார் பேர்ல்ஸ் (லிக்குயிட் டிட்றிஜன்ட்) 1L
rewards சலுகை மேலதிக 5%
சாதாரண விலை ரூ.480 எங்களின் விலை ரூ.408 ஹார்பிக் ப்ரெஷ் (ப்ளோரல்) 500ml
சாதாரண விலை ரூ.1,490 எங்களின் விலை ரூ.1,192 சேர்ப் எக்சல் மெட்டிக் லிக்குயிட் (டொப் லோடட்) 1L
நிபந்தனைகளுக்கு உட்பட்டது.
மரக்கறிகள், பழங்கள், கடலுணவு மற்றும் அத்தியாவசிய பொருட்களுக்கான சலுகைள் 2024 மார்ச் 19 மட்டுமே.
முன்னறிவித்தலின்றி இவ்விலைகள் மாறுப்படலாம்.
இருப்பு உள்ளவரை மட்டுமே.
ரிவோட்ஸ் அங்கத்தவர்களுக்கு ஊக்குவிப்பு காலத்தில் ஒரு பொருளின் 5 தொகுதிகளை கொள்வனவு செய்ய முடியும்.
Cargills FOOD HALL
Cargills XPRESS
Cargills food city

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் பங்குனி மாதம் 06ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரமழான் பிறை 08

### குறள் தரும் சிந்தனை

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்

பயனற்றதாக ஒருநாள்கூடக் கழிந்து போகாமல், தொடர்ந்து நற்செயல்களில் ஈடுபடுபவருக்கு வாழ்க்கைப் பாதையைச் சீராக்கி அமைத்துத் தரும் கல்லாக அந்த நற்செயல்களே விளங்கும்.

# மாணவர்கள் எதிர்கொள்கின்ற உபாதைகளை தவிர்க்க ஏற்பாடு

நாட்டில் கடும் உஷ்ணம் நிலவிக் கொண்டிருக்கின்றது. இதன் தாக்கத்தை மக்கள் உணரக் கூடியவர்களாக உள்ளனர். இந்நிலையில் தற்போதைய கடும் உஷ்ண காலநிலையைக் கருத்தில் கொண்டு அடிக்கடி நீரைப் பருகுமாறும், கடும் வெயில் நிலவும் சந்தர்ப்பங்களில் வெயிலில் நடமாடுவதையும் தொழில்களில் ஈடுபடுவதையும் தவிர்த்துக் கொள்ளுமாறும் நிழலில் ஒய்வு எடுத்துக் கொள்ளுமாறும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போதைய கடும் உஷ்ணம் மிக்க காலநிலை எதிர்வரும் சில வாரங்களுக்கு நீடிக்க முடியும் என்று குறிப்பிட்டுள்ள வளிமண்டலவியல் திணைக்களம், 'மேல், வட மேல், வடமத்தி மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, மொனறாகலை, ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களின் சில பிரதேசங்களிலும் 3945 செல்சியஸ் வரை வெப்பநிலை காணப்பட முடியும்' என்றும் குறிப்பிட்டுள்ளது.

கடும் உஷ்ணத்தினால் ஏற்படக்கூடிய தாக்கங்களும் பாதிப்புக்களும் சாதாரணமானவையோ, குறைத்து மதிப்பிடக் கூடியவையோ அல்ல. அதனால் கடும் உஷ்ணத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், தாக்கங்கள் குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை பரவலாக உணரப்பட்டிருக்கிறது.

அப்படி இருந்தும் வழமை போன்று பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பல பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்று வருகின்ற அதேநேரம், இன்னும் பல பாடசாலைகளில் ஒத்திகைகளும் பயிற்சிகளும் நடந்து கொண்டிருக்கின்றன.

ஆனால் கடந்த காலங்களில் கடும் உஷ்ண வேளையில் விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்கள் மயங்கி விழுந்துள்ள சம்பவங்கள் பதிவாகியுள்ளன. கடும் உஷ்ணம் காரணமாக இந்நாட்டில் ஓரிரு மரணங்கள் கூட ஏற்பட்டுள்ளன. ஆனால் இந்தியாவின் சில மாநிலங்களில் கடும் உஷ்ணம் நிலவும் போது வருடா வருடம் உயிரிழப்புக்கள் பதிவாவது குறிப்பிடத்தக்கது.

இந்நாட்டின் பாடசாலைக் கல்வித் திட்டத்தின் கீழ் முதலாம் தவணையில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவது வழமையாகும். மாணவர்களின் ஆளுமையை மேம்படுத்தி திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் இப்போட்டிகள் நடாத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆனால் வருடத்தின் ஆரம்பப் பகுதியில் அண்மைக் காலமாக கடும் உஷ்ண காலநிலை நாட்டில் நிலவி வருகின்றது. இது உடலாரோக்கியத்திற்கு ஏதுவான காலநிலை அல்ல. மருத்துவர்களின் கருத்தும் அதுதான். இது முற்றிலும் உண்மையானதாகும். கடும் உஷ்ண காலநிலை நிலவும் போது உடலில் நீரிழப்பு அதிகம் ஏற்படும். அதன் விளைவாக மிகவும் பாரதூரமான ஆரோக்கிய ரீதியிலான விளைவுகளுக்கு முகம்கொடுக்க நேரிடும். அந்தப் பாதிப்புக்கள் பக்கவாதமாகவோ அல்லது உயிராபத்து மிக்கதாகவோ அமைந்திடலாம்.

ஆன போதிலும் இவற்றை எல்லாம் கவனத்தில் கொள்ளாது நாட்டின் பல பாடசாலைகளில் இல்ல விளையாட்டுப் போட்டிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறித்தும் ஒத்திகைகளும் பயிற்சிகளும் நடாத்தப்பட்டு வருவது குறித்தும் கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்தவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதனை அடிப்படையாகக் கொண்டு அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த, நாட்டில் தற்போது நிலவும் கடும் உஷ்ண நிலையைக் கருத்தில் கொண்டு பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளை தமிழ்_ சிங்கள புத்தாண்டின் பின்னர் நடாத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளார். அதனை அடிப்படையாகக் கொண்டு அனைத்து பாடசாலைகளதும் அதிபர்களுக்கும் கல்வி அமைச்சினால் சுற்றிக்கையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் 'தமிழ் சிங்கள புத்தாண்டு விடுமுறையின் பின்னரும் முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கைகள் தொடரும் என்பதால் அக்காலப்பகுதியில் இல்ல விளையாட்டுப் போட்டிகளை நடாத்த முடியும்' என்றும் சுட்டிக்காட்டியுள்ளார் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்.

இந்நாட்டு பாடசாலை மாணவர்களின் நலன்களை முன்னிலைப்படுத்தியே கல்வி அமைச்சர் இந்நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறார். இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும். அதனால் கடும் உஷ்ணம் நிலவும் போது விளையாட்டுப் போட்டிகளில் ஈடுபடுவதால் ஏற்படக்கூடிய உபாதைகளை தவிர்த்துக் கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அதனால் வருடத்தின் ஆரம்பப் பகுதியில் இலங்கைக்கு நேரே சூரியன் உச்சம் கொடுக்கும் காலமும் அமைந்திருப்பதோடு, இக்காலப்பகுதியில் கடும் உஷ்ண காலநிலை நிலவும் சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதனால் எதிர்காலத்தில் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளை முதலாம் தவணை தவிர்ந்த தவணைகளில் நடாத்துவது குறித்து கவனம் செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் ஆராய்ந்து தீர்மானங்கள் எடுக்கப்படல் வேண்டும். அதுவே காலத்தின் அவசியத் தேவையாகும்.

editor.tkn@lakehouse.lk

# இந்திய தேர்தல் திகதி அறிவிப்பையடுத்து அரசியல் கட்சிகள் அனைத்தும் களத்தில்!

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், அரசியல் கட்சிகள் அனைத்தும் பிரசாரங்களில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இந்திய நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 19 ஆம் திகதி ஆரம்பமாகி ஜுன் 1 ஆம் திகதி முடிவடைகின்றது.




தமிழகத்தில் எப்படியாவது 10 ஆசனங்களையாவது வென்றுவிட வேண்டும் என்ற முனைப்புடன் பா.ஜ.க முனைப்புக் காட்டி வருகிறது.. இதுகுறித்த முக்கிய வியூகம் ஒன்றையும் அக்கட்சி வகுத்துள்ளது.

இந்த முறை அ.தி.மு.கவுடனான கூட்டணிக்கு பா.ஜ.க கடுமையாக முயற்சித்தது. பல மாத காலம் காத்திருந்தது. டெல்லியிலிருந்து சில சிரேஷ்ட தலைவர்களே வந்து பேச்சுவார்த்தை நடத்தினார்கள். போதாக்குறைக்கு ஜி.கே. வாசன் போன்ற தோழமைக் கட்சித் தலைவர்களும் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியும் பலனில்லை. இறுதிவரை, பா.ஜ.கவுடனான கூட்டணி கிடையாது என்பதில் எடப்பாடி பழனிசாமி உறுதியாக இருந்து விட்டார்.

எனவே, பாஜக துணிச்சலாகப் போட்டியிடத் தயாராகி வருகிறது. இதற்காகவே, பிரதமர் மோடி, அடிக்கடி தமிழகம் வந்து கொண்டிருக்கிறார். எனினும், தமிழகத்தில் காலூன்ற அ.தி.மு.கவின் தயவும் பா.ஜ.கவுக்கு தேவையாக இருப்பதாகவே தெரிகிறது.

பா.ஜ.கவை பொறுத்தவரை தமிழகத்தில் கோவை, தென்சென்னை, கன்னியாகுமரி, நீலகிரி உட்பட 6 தொகுதிகளில் பலமாக உள்ளது.

இந்த 6 தொகுதிகளிலுமே அ.தி.மு.கவும் பலமாக உள்ளது.

பா.ஜ.க கூட்டணிக்கு பல்வேறு அமைப்புகள் ஆதரவுகளை திரண்டு தந்து கொண்டிருக்கின்றன. அந்தவகையில், பா.ஜ.கவுக்கு வாக்களிக்க பிராமணர் சங்கம் ஆதரவு தந்துள்ளது. நாட்டின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சியை கருத்தில்கொண்டு, நரேந்திர மோடியை 3 ஆவது முறையாக பிரதமராக பதவியேற்க செய்யவும், தாமரை சின்னத்தில் வெற்றி பெறச்செய்யவும் இச்சங்கத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

கொங்குநாடு முன்னேற்ற கழகமும் தன்னுடைய ஆதரவை பா.ஜ.கவுக்கு தெரிவித்துள்ளது. பா.ஜ.கவுக்கு பல்வேறு தரப்பில் ஆதரவுகள் குவிந்து வருகின்றன என்றாலும், அ.தி.மு.கவின் உதவியையும் மறைமுகமாக வேண்டுவதாக தகவல்கள் கசிந்து வருகின்றன.

## பா.ஜ.கவின் செல்வாக்கு தமிழகத்தில் படிப்படியாக அதிகரிப்பு

# மாண்புறும் ரமழான் மாதம்



அஃலன் வஸஹ்லன் யா ரமலான்,
அஃலன் வஸஹ்லன் யா ரமழான்!
மாண்புறும் ரமழானே, மாண்புறும் ரமழானே
வாஞ்சை மிகும் ரமழானே, தருக அருள் தருக!
வஞ்சகர் செய்த _படுபாவக் கறையினை சுட்டெரிக்க
_ வந்த சுடர்மிகும் ரமழானே!
உன் வரவால் உலகமே _ சுடர் விடுகிறதே ஓ ரமழானே!
முதல் பத்தில் றஃமத்தையும்
அடுத்த பத்தில் மஃபிறத்தையும்
கடைசிப் பத்தில் நரக விடுதலையையும் _தந்த
புனிதமிகு ரமழானே, அருள் தருக!
நானிலம் சிறக்க, நபி வழி நடக்க,
நாயக அருள் கிடைக்க _ வந்த நல்ரமழானே
தருக அருள் தருக!
நல்வழி நாம் நடந்து நானிலம் போற்றிடவே
நலமாக நாம் வாழ _ வந்த நல்ரமழானே _
நீ அருள் தருக!
பாவக்கறை சூழ
பாவிகள் வாழும் _ காலமிதே
பாவக்கறை போக்க
பகிர்ந்தளிக்கும் நல் _ மாதமிதே
ரமழானே தருக, அருள் தருக!
ஏழை எளியோர் துயர் துடைக்கவே
கணக்கிட்டு ஸகாத் வழங்க வந்துதித்த_ மாதமிதே
ரமழானே தருக அருள் தருக!
ஆயிரம் மாதங்களை _விட சிறந்த நல் மாதமிதே
ஒற்றைப்பட்ட நாட்களிலே
ஒழிந்த லைலதுல் கதிர் இரவை தேடுகின்ற _
நல் மாதமிதே ரமழானே தருக, அருள் தருக!
வானவராம் ஜிபிரீல் வான்மறை வழங்கிய
இறைவேதம் ஓதுகின்ற _இனிய நல்ரமழானே
தருக, அருள் தருக!

**சாமஸ்ரீ தேசமான்ய எம்.ஏ.எம்.ஹஸனார்...**
ஜே.பி

# அபுதாபி இந்துக் கோயிலுக்கு பக்தர்கள் பெருமளவில் வருகை



அபுதாபி பாப்ஸ் அமைப்பு சார்பில் துபாய்அபுதாபி ஷேக் ஜாயித் சாலையில் உள்ள அல் முரக்கா பகுதியில் 27 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமான இந்துக் கோயில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த பிரமாண்டமான இந்துக் கோயிலை கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி அமீரகத்துக்கு சுற்றுப்பயணம் செய்திருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைத்தார்.

அபுதாபியில் புதிதாகத் திறக்கப்பட்ட இந்துக் கோயிலை அமீரகத்தில் வசித்து வரும் பொதுமக்கள் கடந்த 1 ஆம் திகதி முதல் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை பொதுமக்கள் வழிபாடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அபுதாபி, துபாய் உள்ளிட்ட அமீரகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் அதிகமாக வருகை தருகின்றனர். இதனால் கோயில் முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. கார் நிறுத்தும் இடங்களில் அதிகமான வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. கோயிலுக்கு வரும் பக்தர்களை வரவேற்க கோயில் நிர்வாகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## வியப்பளிக்கும் பிரமாண்டமான கட்டட நிர்மாணம்!





கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. கோயிலுக்கு பக்தர்கள் உற்சாகத்துடன் வருகை தருகின்றனர்.

இந்தக் கோவிலை பார்வையிட வருகை தருகின்ற பொதுமக்கள் பலரும் "அமீரகத்தில் இத்தகையதொரு பிரமாண்டமான கோயிலைப் பார்ப்பது மிகவும் அற்புதமாக இருக்கிறது" எனக் கூறினர்.

# யாழ்ப்பாணத்தில் பேரனுக்காக சின்னஞ்சிறிய முச்சக்கர வண்டி தயாரித்த பாசம் மிகுந்த தாத்தா!



தாத்தா ஒருவர் தனது பேரனுக்காக யாழ்ப்பாணத்தில் தயாரித்த உலகிலேயே மிகவும் சிறிய முச்சக்கரவண்டி தற்போது அச்சிறுவனது விளையாட்டுப் பொருளாக மாறியுள்ளது

மேற்படி 'தாத்தா' தனது பேரனின் முதலாவது பிறந்தநாளுக்கு பரிசளிப்பதற்காக மிகவும் சிறிய முச்சக்கர வண்டி ஒன்றினை அவரது முயற்சியினால் தயாரித்துள்ளார்.

இந்த முச்சக்கர வண்டி உருவத்தில் சிறியதாக இருந்த போதிலும், முற்றிலும் சாதாரண முச்சக்கர வண்டி போலவே தோற்றமளிக்கிறது. இதற்கு மோட்டார் பொருத்தினால் இயங்கக் கூடியவாறு இருக்கும் என இதனைத் தயாரித்தவர் கூறுகின்றார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "இவ்வாறானதொரு சின்னஞ்சிறிய முச்சக்கர வண்டியை தயாரித்துத் தருமாறு கூறி பலர் என்னுடன் தொடர்பு கொண்டனர். அவ்வாறு தயாரித்து கொடுப்பதாக இருந்தால் என்னால் உடனடியாக தயாரித்துக் கொடுக்க முடியாது. சிறிது நாட்கள் அவகாசம் வழங்க வேண்டும். ஏனெனில் முச்சக்கர வண்டிகள் திருத்தம் மற்றும் ஏனைய வேலைகளுக்கு எனது வாடிக்கையாளர்கள் என்னிடம் வருவார்கள். அவர்களது வேலைகளை செய்துவிட்டு நேரம் கிடைக்கும் போதே இதனை செய்து கொடுப்பேன்.

இதனை செய்வதற்கு எனக்கு 25 நாட்கள் தேவைப்பட்டன. சிறுவர்களுக்கான ஏனைய வாகனங்கள் கடைகளில் விற்கப்படுகின்றன. ஆனால் சிறுவர்களுக்கான முச்சக்கர வண்டி விற்பனை செய்யப்படுவதில்லை. என்னுடைய வேலையும் முச்சக்கர வண்டி திருத்துவதுதான். எனவேதான் இத்தகைய சிறிய முச்சக்கர வண்டியினை என்னால் தயாரிக்க முடிந்தது. எனது கையாலேயே இந்த முச்சக்கர வண்டியினை தயாரித்து முடித்துள்ளேன். இதற்கு எனது மகன்மாரும் உதவி செய்தார்கள்.





கடையில் விற்பனை செய்யப்படும் சிறுவர்களுக்கான வாகனங்கள் பிளாஸ்டிக்கில் தயாரிக்கப்படுவதால் அது இலகுவில் உடைந்துவிடும். ஆனால் இது இரும்பு மற்றும் தகரத்தினால் உருவாக்கப்பட்டது. ஆகையால் இலகுவில் உடையாது. பல ஆண்டுகளுக்கு பாவனையில் இருக்கும். இதனை உருவாக்க ஒரு இலட்சத்து எழுபத்து ஐயாயிரம் ரூபா செலவாகியுள்ளது" என்றார்.

இதேவேளை இந்த முச்சக்கர வண்டியைப் பார்வையிடுவதற்கு ஏராளமானோர் வருகை தருகின்றனர்.



# குருத்தோலை ஞாயிறுடன் ஆரம்பமாகும்

# பரிசுத்த வாரம்

தவக்காலத்தின் இறுதி வாரம் பரிசுத்த வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த வாரத்தை ஆரம்பிக்கும் சிறப்பு நிகழ்வாக உலகெங்கிலும் உள்ள கிறிஸ்தவர்கள் குருத்தோலை ஞாயிறு தினத்தை சிறப்பிக்கின்றனர்.

குருத்தோலை ஞாயிறு தினத்தன்று நம் ஆண்டவராகிய இயேசு கழுதை மேல் அமர்ந்து ஒலிவ மலையிலிருந்து எருசலேமிற்குள் பிரவேசிக்கும்போது மக்கள் அணி அணியாகத் திரண்டு குருத்தோலைகளை கைகளில் ஏந்தி "தாவீதின் குமாரனுக்கு ஓசான்னா" என்று முழங்கி வெற்றி ஆர்ப்பரிப்புடன் அவரை வரவேற்கின்றனர்.

இந்த நிகழ்வு ஒவ்வொரு வருடமும் கிறிஸ்தவர்களால்தவக்காலத்தில் கடைசி ஞாயிறு தினத்தில் சிறப்பிக்கப்படுகின்றது.

தவக்காலம் விபூதிப் புதனுடன் ஆரம்பித்து 40 நாட்கள் உபவாச நாட்களாக கடைபிடிக்கப்பட்டு இறுதி வாரம் பரிசுத்த வாரமாக அனுஷ்டிக்கப்படுகிறது. இந்த வாரத்தில் பெரிய வியாழன், புனித வெள்ளி, அல்லேலூயா சனி,உயிர்த்த ஞாயிறு என தவக்காலத்தில் முக்கியமான தினங்கள் உள்ளடங்குகின்றன.

அந்த வகையில் எதிர் வரும் வாரம் முழுதும் நம் ஆண்டவர் இயேசுவின் இலட்சியப் பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பைக் கொண்டாடும் வகையில் திருச்சபை எமக்கு அழைப்பு விடுக்கின்றது.

குருத் தோலை ஞாயிறு வெற்றியின் அடையாளமாக கொண்டாடப்படுகிறது. இயேசு கிறிஸ்து வெற்றி ஆர்ப்பரிப்போடு எருசலேமில் பிரவேசிக்கும் போது "தாவீதின் மகனுக்கு ஓசன்னா! ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப் பெறுக! உன்னதத்தில் ஓசான்னா" என்று மக்கள் வாழ்த்தொழி பாடி ஆர்ப்பரிக்கின்றனர்.

இதன்போது எருசலேம் நகரம் பரபரப்பப்படைகிறது.

அதுவரை அவ்வாறான ஒரு நிகழ்வு எருசலேமில் இடம் பெறவில்லை. இப்படியான ஒரு நிகழ்வை எவருமே நிகழ்த்திக் காட்டியிருக்க முடியாது என சொல்லுமளவுக்கு அந்த நிகழ்வு அமைந்தது. இந்த நிகழ்வு ஆட்சியில் இருப்போரையும் ஆதிக்க மனப்பான்மை கொண்ட யூதர்களையும் ஆட்சியாளர்களின் அடிவருடிகளையும் ஆட்டம் காண செய்தது.

அதே சமயம், யூத சமுதாயத்தில் பிரிவினைவாதங்களால் கட்டுண்டு கிடந்த ஏழை எளிய மக்களுக்கு இந்த நிகழ்வு விடுதலை தரும் நம்பிக்கை நிகழ்வாக



அமைந்தது.

இயேசுவை சிமியோன் எருசலேம் ஆலயத்தில் வைத்து குழந்தையாக தமது கரங்களில் ஏந்தி "இதோ இந்த குழந்தை இஸ்ரேல் மக்களில் பலரின் வீழ்ச்சிக்கும் எழுச்சிக்கும் காரணமாக இருக்கும்;எதிர்க்கப்படும் அடையாளமாகவும் இருக்கும்" என கூறிய அந்த அர்த்தம் பொதிந்த வார்த்தைகள் இந்த இடத்தில் நிறைவேறுகிறது.

அந்த வகையில் குருத்தோலை ஞாயிறு வேறுபாடுகளற்ற சமத்துவ சமுதாயத்தை படைக்கவும், அதற்கான இலட்சியப் பாதையையும் புலப்படுத்துகிறது.

குறித்தோலை ஞாயிற்றுக்கிழமை நற்செய்தி வாசகம் இயேசுவின் இலட்சிய மரணத்தை நம் கண்முன் நிறுத்துகிறது.

எப்போதும் உண்மையான அன்புதான் அனைத்துத் தியாகச் செயல்களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. உண்மை அன்பிலிருந்துதான் தியாகம் ஊற்றெடுக்கின்றது. அந்தத் தியாகத்திலிருந்தான் இலட்சிய மரணம் பிறக்கிறது. ஆனால், இன்றைய உலகில் அன்பு என்பது வர்த்தகப் பொருளாகிவிட்டது.

"நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" என்று கூறும் இயேசு, "தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை" என்ற வார்த்தைகள் வழியாக அதனை வாழ்ந்து காட்டுகின்றார் ( யோவா 15:1213).

இயேசு தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி முடித்த பிறகு, "ஆண்டவரும் போதகருமான நான் உங்கள் காலடிகளைக் கழுவினேன் என்றால் நீங்களும் ஒருவர் மற்றவருடைய காலடிகளைக் கழுவக் கடமைப்பட்டிருக்கிறீர்கள்.

நான் செய்தது போல நீங்களும் செய்யுமாறு நான் உங்களுக்கு முன்மாதிரி காட்டினேன்" ( யோவான் 13:14:15) என்று கூறுவதன் வழியாகப் பணிவையும், துணிவையும், தியாக அன்பையும் இலட்சிய வாழ்வின் ஆணிவேர்களாக எடுத்துக்காட்டி அதனையே வாழ்வாக்கவும் அழைப்பு விடுக்கின்றார்.

இயேசுவின் திருமுழுக்கின்போதும் உருமாற்றத்தின்போதும் இறை தந்தையின் குரலைக் கேட்கின்றோம். அதனைத் தொடர்ந்து இயேசுவின் பணிவாழ்வு முழுவதும் இறை தந்தையின் உடனிருப்பைக் பார்க்கின்றோம். யூதத் தலைவர்களில் ஒருவரான நிக்கதேமு தன்னை சந்திக்க வந்தபோது, தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார் என்றும் உலகிற்குத் தண்டனைத் தீர்ப்பளிக்க அல்ல, தம் மகன் வழியாக அதை மீட்கவே கடவுள் அவரை உலகிற்கு அனுப்பினார் (யோவான் 3:16) என்றும் கூறி இறைத்தந்தையின் தியாகமிக்க அன்பை வெளிப்படுத்துகிறார் இயேசு.

**எல்.செல்வா...**

கெத்சமனித் தோட்டத்தில் நமதாண்டவர் இயேசு கைது செய்யப்பட்டது முதல் கல்வாரியில் தனது இன்னுயிரை ஈந்தது வரை அவர் அனுபவித்த அத்தனை துயரங்களும் இறைத்தந்தையின் கண்முன்பாகத்தான் நிகழ்ந்தன. முப்பது வயதில் தொடங்கிய இயேசுவின் பயணம் வெறும் மூன்றே ஆண்டுகளில் அதாவது, முப்பத்து மூன்று வயதில் நிறைவு பெற்றது.

ஒடுக்கப்பட்டவர்களின் சார்பாக நிலைப்பாடு எடுத்ததும், அதை செயலாக்கம் செய்ததும்தான் இயேசுவின் மரணத்திற்கு முக்கிய காரணங்கள்.

இயேசு தனது பணிவாழ்வு முழுவதும் எதிர்ப்புகளைத்தான் அதிகம் சந்தித்தார். அதுவும் தனது சொந்த இனமான யூத இனத்தில் நிலவிய அத்தனை அநியாயங்களையும் அவர் துணிச்சலுடன் தட்டிக்கேட்டார். அவர்களுக்கு மிகப்பெரும் சவாலாக அமைந்தார். எதிரிகள் குறித்தோ அல்லது எதிர்ப்புகள் குறித்தோ அவர் ஒருபோதும் மனம் தளர்ந்ததில்லை.

ஒரு சமத்துவ சமுதாயம் படைக்க விரும்பிய இயேசுவின் இலட்சிய வழியில் நாமும் பயணிப்போம். அதற்கான அருள்வரங்களுக்காக புனித வாரத்தில் இறைவனிடம் மன்றாடுவோம்.










# தவக்கால 'பசம்' கீத நிகழ்வு

தவக்காலத்தை சிறப்பிக்கும் வகையில் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் கொழும்பு கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட தவக்கால 'பசம்' கீத நிகழ்வின் காட்சிகள். இந்த நிகழ்வுக்கு காலி மறை மாவட்ட ஆயர் ரேமண்ட் விக்ரமசிங்க ஆண்டகை தலைமை வகித்தமை குறிப்பிடத்தக்கது.

படங்கள் உதவி: நித்தில்ஷிசான்



# புனித யோசேப்பு கன்னி மரியாளின் கணவர் திருவிழா இன்று



கத்தோலிக்க திருச்சபையானது இன்றைய தினம் புனித யோசேப்பு கன்னி மரியாளின் கணவர் திருவிழாவைக் கொண்டாடுகிறது.

புனித சூசையப்பர் அல்லது யோசேப்பு இயேசு கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையும் புனித கன்னி மரியாளின் கணவருமாவார். நாசரேத்தில் வாழ்ந்து வந்த யோசேப்பு தச்சுத் தொழில் செய்து வந்தார்.

திருச்சபையில் புனிதர்கள் வரிசையில் புனித கன்னி மரியாளுக்கு அடுத்தபடியாக புனித யோசேப்பு மதிக்கப்படுகின்றார். கிறிஸ்தவ வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் இவர் புனிதராக போற்றப்படுகின்றார். கத்தோலிக்க திருச்சபையில் இவருக்கு இரண்டு விழாக்கள் சிறப்பிக்கப்படுகின்றன. மார்ச் 19ஆம் திகதி புனித யோசேப்பு கன்னி மரியாளின் கணவர் என்ற திருவிழாவும் மே முதலாம் திகதி புனித யோசேப்பு தொழிலாளர்களின் பாதுகாவலர் என்ற திருவிழாவும் நினைவு கூரப்படுகின்றது. சூசையப்பரோ தன்னுடைய மனைவியாகிய மரியாளை முழுமையாக அறிந்தவர், அவரை முழுமையாக ஏற்றுக்கொண்டு அன்புசெய்தவர். அப்படிப்பட்ட ஒருவரின் விழாவையே . இன்று திருச்சபையானது மரியாளின் கணவர் தூய சூசையப்பரின்/ விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது.

இப்போது ஒரு சாதாரண குற்றத்திற்காக தங்களுடைய மனைவியை விவாகரித்து செய்யும் கணவன்மார்களுக்கு மத்தியில், யோசேப்பு தனக்கு திருமண ஒப்பந்தம் செய்திருந்த மரியாள் திருமணத்திற்கு முன்பாகவே கருவுற்றிருந்தது தெரியவந்ததும் அவளை இகழ்ச்சிக்கு உள்ளாக்க விரும்பவில்லை. மாறாக மறைவாக விலக்கிவிடத் தீர்மானிக்கிறார். வானதூதர் கபிரியேல் யோசேப்பிற்குக் கனவில் தோன்றி நிகழ்ந்தவற்றையெல்லாம் சொல்கிறபோது அவர் திறந்த மனநிலையோடு அதனை ஏற்றுக்கொள்கிறார்.

யோசேப்பிடம் இருந்த அந்த திறந்த மனநிலை ஒவ்வொரு கணவன்மார்களிடமும் இருந்தால் குடும்பத்தில் பாதிப் பிரச்சனை குறைந்துவிடும். இன்றைக்கு கணவன்மார்களிடம் தன்னுடைய மனைவியைக் குறித்த திறந்த மனநிலை – உண்மையை ஏற்றுக்கொள்ளும் நிலை – இல்லாததனால்தான் எல்லாப் பிரச்சனைகளும், குழப்பங்களும் பூதாகாரம் எடுக்கின்றன

யோசேப்பிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளக்கூடிய அடுத்த பாடம் அவர் தாழ்ச்சியுள்ள/அகந்தையற்ற கணவராக விளங்கினார் என்பதுதான்.

யோசேப்பு ஒரு சிறந்த பொறுமைசாலியாகவும், பிடிவாதகுணமற்றவராகவும் இருந்திருக்கலாம். ஏனென்றால் திருமணத்திற்கு முன்பாக மரியாள் கருவுற்றபோதும் சரி, ஏரோது குழந்தை இயேசுவைக் கொல்ல நினைத்தபோதும் சரி, எகிப்துக்குத் தப்பியோடிய போதும் சரி, எருசலேம் ஆலயத்தில் காணாமல் இயேசு போனபோதும் சரி மிகவும் பொறுமையாக இருக்கின்றார். தான் கொண்ட கருத்தான் சரி என்ற பிடிவாதக்குணத்தோடு இல்லாமல், உண்மையத் திறந்த மனநிலையோடு ஏற்றுக்கொள்ளவும் செய்கிறார். யோசேப்பு ஒரு சிறந்த கணவனாக இருந்ததோடு மட்டுமல்லாமல், இயேசுவுக்கு ஒரு சிறந்த (வளர்ப்புத்) தந்தையாகவும் விளங்கினார். அறிவையும், ஞானத்தையும் நமக்குப் புகட்டியவர்.

இயேசுவின் போதனையைக் கேட்டு மக்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள் என்றால், அதில் யோசேப்பின் பங்கு மிக முக்கியமானது. யோசேப்பு ஒரு சிறந்த கணவராகவும் இருந்ததோடு மட்டுமல்லாமல், ஒரு சிறந்த தந்தையாகும் விளங்கினார் என்று சொன்னால் அது மிகையாகது. எனவே நாம் யோசேப்பைப் போன்று திறந்த மனத்தினராக, தாழ்ச்சி உள்ள கணவராக, பொறுமையுள்ளவராக, சிறந்த தந்தையாக வாழ அழைக்கப்படும் அதே தருணத்தில், நாமும் நம்மோடு வாழும் தந்தையைப் பேணிப் பராமரிக்க, அவருக்குப் பெருமை சேர்க்க, அவர் உள்ளம் குளிரும்படியான வாழ்வு வாழ அழைக்கப்படுகின்றோம்.

ஆதலால் மரியாளின் கணவர் யோசேப்பின் விழாவைக் கொண்டாடும் இந்த வேளையில் நாம் நமது குடும்பங்களில் வாழும் தந்தையின் உள்ளம் குளிர நடந்துகொள்வோம். யோசேப்பிடம் விளங்கிய பண்புகளை நமதாக்குவோம். அதன்வழியாக இறையருள் பெறுவோம்

**அருட்தந்தை மரிய அந்தனி...**

# தினகரனின் 92 ஆவது பிறந்த நாள் விழா















## 'கடல் சாரணர்' படையணியை...

'அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா நேற்று இப்பத்திரத்தை அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வருவதைத் தடுக்கும் கடற்படையின் தற்போதைய முயற்சிக்கு உதவுவதற்கே, இந்த கடல் சாரணர் படையணி உருவாக்கப்படவுள்ளது. வடமாகாண கடற்றொழிலாளர் சங்கங்களூடாக அச்சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சாரணர் படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களென அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய இழுவை படகுகள், தற்காலத்தில் இலங்கையின் கடல் எல்லைக்குள் அதிக எண்ணிக்கையிலும், பாரிய கடற்றொழில் படகுகளிலும் அடிக்கடி நுழைவது, உள்ளூர் கடற்றொழிலாளர்களின் ஒட்டுமொத்த வாழ்வாதாரத்தை பாதித்துள்ளது.

குறைந்தபட்சம் 500 இந்திய அடிமட்ட இழுவை படகுகள், இலங்கை கடல் எல்லைக்குள் நுழைகின்றன. ஒவ்வொரு படகும் 1,000 கிலோ மீன்கள் மற்றும் இறால்களை பிடிப்பதாகவும் அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சட்டவிரோத இழுவைப் படகு மூலம் இலங்கைக்கு நாளாந்தம் சுமார் 350 மில்லியன் ரூபா வரையில் இழப்பு ஏற்படுகிறது.

## கோப் குழுவிலிருந்து...

செய்துள்ளார். அவர் தாம் கோப் குழுவிலிருந்து இராஜினாமா செய்துள்ளதையடுத்து நேற்று சபாநாயகருக்கு தனது இராஜினாமா கடிதத்தை சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

நேற்று கொழும்பில் இடம்பெற்றுள்ள ஊடகவியலாளர் சந்திப்பின்போது சபாநாயகரிடம் தாம் இராஜினாமா கடிதத்தை கையளித்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோப் குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு அவர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில், குறிப்பாக நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுவதால் கோப் குழுவின் உறுப்பினராக செயல்படுவதில் அதிருப்தி ஏற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அதிக வெப்ப நிலையால்...

தெரிவித்துள்ளது. இதன் காரணமாக அத்தியவசியமற்ற நடவடிக்கைகளுக்காக நீரை பயன்படுத்துவதை தவிர்க்குமாறும் அத்தியாவசிய தேவைகளுக்கு மிகவும் சிக்கனமாக நீரை பயன்படுத்துமாறும் நீர் வழங்கல் அதிகார சபை பொதுமக்களை கேட்டுள்ளது.

மேற்படி சபையின் பிரதி பொது முகாமையாளர் அனோஜா களுஆரச்சி அதுதொடர்பில் நேற்று தெரிவிக்கையில், வரட்சியால், நீர் பாவனை அதிகரிப்பதால், அதிக வெப்பமான பிரதேசங்களில் பகல் வேளைகளில் நீர் விநியோகத்தை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த நிலை தொடர்ந்தால் நீர் விநியோகத்தை நிறுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டி வரும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீர் குறைவடைகின்றமை மற்றும் நீருக்கான தட்டுப்பாடு ஏற்படும் சந்தர்ப்பங்களில் வழங்கப்படும் முறைப்பாடுகள் தற்போது 30 வீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் தற்போது உச்ச அளவில் நீர் பகிர்ந்தளிக்கும் ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## சுகாதாரத் துறையினரின் வேலை நிறுத்தம்...

சுகாதார அமைச்சும் சுகாதார ஊழியர் சங்க கூட்டமைப்பும்; இணைந்து தயாரித்த தொழில்நுட்ப அறிக்கையை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நிதி அமைச்சின் பதில் தாமதமடைந்ததினால் இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையை ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலுக்கு ஒருவாரகால அவகாசம் வழங்குமாறு சுகாதார அமைச்சர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக அனைத்து தரப்பினரின் பங்களிப்புடன் பணிப்புறக்கணிப்பை தற்காலிகமாக இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டதாக சுகாதார சேவை ஊழியர் சங்க கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர் திரு. ரவி குமுதேஷ் மேலும் தெரிவித்தார்.

## போதைப்பொருள், பாதாள கோஷ்டியை...

அலஸின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

யுத்தத்தில் வெற்றி பெற்ற நாட்டை போதையிலிருந்து மீட்பதற்கான யுத்தமே யுக்திய செயற்றிட்டமென பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் குறிப்பிட்டார்.

யுக்திய நடவடிக்கையின் முதல் மூன்று மாதங்களுக்குள் உரிய இலக்கின் குறிப்பிட்ட தூரத்தை அடைய முடிந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் சில மாதங்களுக்குள் இந்த நிலைமையை முழுமையாக முடிவுக்குக் கொண்டு வந்து, மக்கள் நிம்மதியாக வாழக் கூடிய சூழலை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்தார்.

இதனிடையே, யுக்திய நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட தினம் முதல் பல்வேறு கடுமையான தீர்மானங்களை மேற்கொண்டு வந்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் இதன்போது தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்காக 107 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டது.

24 மணி நேரமும் செயற்பாட்டிலிருக்கும் 107 என்ற துரித இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி, முறைப்பாடுகளை செய்ய முடியும்.

இந்தச் சேவை முற்றிலும் தமிழ் மொழியில் செயற்படுத்தப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

## இன்றைய பலன்கள்

(19.03.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பிள்ளைகள் மேற்படிப்புக்காகவும் வெளிநாடு செல்லும் வாய்ப்பிற்காகவும் முயற்சித்தவர்களுக்கு அது கைகூடும். உத்தியோகத்தில் சிலருக்கு ஊதிய உயர்வின் காரணமாக இடமாற்றம் செய்யும் வாய்ப்பு அமையும்.

**ரிஷபம் :**
அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புக்கள் கிடைக்கும். பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு மேல் இடத்தில் அனுகூலம் உண்டு.

**மிதுனம்:**
மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிப்பீர்கள். நண்பர்களின் நன்மதிப்பை பெறும் வாய்ப்பு உண்டு. உத்தியோகம் தொழிலில் உயர்நிலையை அடைய சந்தர்ப்பங்கள் கைகூடிவரும்.

**கடகம்:**
தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றலாமா என்று சிந்திப்பீர்கள். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு. பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேல் இடத்திலிருந்து நிர்ப்பந்தம் அதிகரிக்கும்.

**சிம்மம்:**
புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள். வாழ்க்கை துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் வருமானமும் அதிகரிக்கும்.

**கன்னி:**
உத்தியோகத்தில் கூடுதலாக உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். கடன் சுமை குறைவது போல் தோன்றினாலும் ஒரு கடனை அடைக்க மற்றும் ஒரு கடன் வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

**துலாம்:**
குடும்பத்தில் உள்ளவர்கள் உங்கள் மீது குறை சொல்வார்கள். ஆடை ஆபரணங்கள் வாங்கி மகிழ்வீர்கள். வீடு மாற்றம், இடமாற்றம் திருப்தி அளிக்கும்.

**விருச்சிகம்:**
பயணங்கள் அதிகரிக்கும். நண்பர்கள் நல்ல தகவல்களை கொண்டு வந்து சேர்ப்பர். தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும்.

**தனுசு:**
வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணங்களால் நன்மை கிடைக்கும். பெண்வழி பிரச்சனைகள் நல்ல முடிவுக்கு வரும். பிறர் போற்றும் அளவிற்கு வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ள முன் வருவீர்கள்.

**மகரம்:**
ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். குலதெய்வ பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சம்பள உயர்வு பற்றிய தகவல் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:**
பொது வாழ்வில் இருப்பவர்களுக்கு பொறுப்புகளும் பதவிகளும் கிடைக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியை கைகூடும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**மீனம்:**
அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து அழகு பார்ப்பீர்கள். வெளிநாடு செல்லும் முயற்சியில் அனுகூலம் உண்டு. பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பாராட்டும் புகழும் கூடும்.

## காத்தான்குடியில் 735 மதன மோதக...

மீட்கப்பட்டன. இவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மலையகத்தில் மரக்கறி...

லீக்ஸ் 180 ரூபாவாகவும், ஒரு கிலோ தக்காளி 250 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விவசாயிகள் தெரிவிக்கையில், மரக்கறிகளின் விலைகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி காரணமாக மரக்கறி உற்பத்தி செலவுகளை ஈடுசெய்ய சிரமமாக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

## நகர் பிரதேசங்களை உள்ளடக்கி...

பொலிஸ் பிரிவுகளை இல்லாதொழித்து இந்த புதிய செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் அதற்காக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. புதிய நகர போக்குவரத்து (City Traffic Police) பொலிஸ் நிலையத்தை ஸ்தாபிக்கும் சமகாலத்தில் இந்த போக்குவரத்து பிரிவுக்கு பொறுப்பான நிர்வாக பிரதேசத்திலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களிலுமுள்ள பொலிஸ் போக்குவரத்து பிரிவு அதிகாரிகள், மேல் மாகாண போக்குவரத்து பிரதி பொலிஸ் மா அதிபரின் கீழ் செயற்படவுள்ளதாகவும் அந்த பொலிஸ் உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

## தனியார் கடன் தொகை...

அதேசமயம் மத்திய வங்கியின் கடன் ஒட்டுமொத்த பணவோட்டமாக இருந்ததாகவும் பண ஸ்திரத்தன்மை மற்றும் இருப்புக்கள் தொடர்பான உத்தியோகபூர்வ புள்ளிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நுகர்வுப் பொருள் இறக்குமதியுடன் கடன் தொகை தொடர்புபட்டிருப்பதால் பொருட்கள் விற்கப்படும்போது கடன்களும் தீர்க்கப்பட்டுவிடும்.

மத்திய வங்கிக் கடன் தொகை இந்த ஆண்டில் 58.8 பில்லியன் ரூபாவாகக் குறைந்துள்ளது. இது வெளித்துறையை ஸ்திரமாக வைத்திருக்க உதவியுள்ளதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

## ஐரோப்பிய பாதுகாப்பு முகவரமைப்பின்...

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சுமார் 100 பேர் கலந்துகொள்ளவுள்ளனர்.

துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூட்டத்தை ஆரம்பித்து வைக்கவுள்ளார். துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் செயலாளர் கே.டி. எஸ்.ருவான்சந்திர உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பலர் இதில்,கலந்துகொள்ளவுள்ளனர்.

முதலாவது கூட்டம் 2008 இல் நடத்தப்பட்டது. இது விமான அதிகாரிகளுக்கான சர்வதேச தளமாக செயற்பட்டு வருகிறது. பிராந்திய ஒத்துழைப்பில் ஆர்வமுள்ள பிராந்திய நிறுவனங்கள் இந்த இமைப்புடன் இணைந்து செயல்பட்டுவருகின்றன.

அனுபவங்கள் மற்றும் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்ளவும், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் தர நிலைகளில் சமீபத்திய முன்னேற்றங்களைப் பற்றி விவாதிக்கவும், சர்வதேச ரீதியில் பாதுகாப்பான மற்றும் நிலையான விமானப் போக்குவரத்தை மேம்படுத்தவும் வாய்ப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தினகரனின் 92 ஆவது பிறந்த தின நிகழ்வுகள்


















National Lotteries Board
ஞாயிறு 2024.03.17
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5422
ரூ. 23,317,452.00
V 0 4 9 7 9 4

3664 2024.03.17 ரூ. 70,218,884.56
I 33 35 57 77 I
92528

Mega Power
1770 2024.03.17
09347
ரூ. 427,449,310.00
O 20 15 23 25 53
ரூ. 10,000,000.00
ரூ. 10,000,000.00

VIP
2024.03.17
0248
Y 6 8 2 6 6 9
Y
ரூ. 27,075,824.00


2024.03.17 731 ரூ. 3,092,566.76
07 19 36 61
52815
14

தன நிதானய
1452 2024.03.17
ரூ. 84,516,481.12
E 02 05 06 65 E
64775




கொழும்பு கொட்டாஞ்சேனை சாயி நாதன் சரணாலயத்தின் அழைப்பின் பேரில் இலங்கைக்கு வருகை தந்த, சென்னை கோபுரம் டிவி புகழ் சீரடி சிறப்புச் சொற்பொழிவாளர் பிரசாத் கணேஷ் கடந்த ஞாயிற்றுக்கிழமை, கொழும்பு புதுச்செட்டித் தெரு சீரடி சாய்பாபா ஆலயத்தில் நடைபெற்ற விசேட ஆர்த்தி பூஜையில் கலந்துகொண்டார். இதன்போது, ஆலய பிரதம அறங்காவலர் எஸ்.என்.உதயநாயகன், சொற்பொழிவாளரை பாராட்டி கௌரவித்தார். இந்நிகழ்வில், சாயிநாதன் சரணாலயத்தின் தர்மகர்த்தா ஈஸ்வரன் கணேஷ் தெய்வநாயகம் மற்றும் அவரது பாரியார் மருத்துவ கலாநிதி மருதினி தெய்வநாயகம் ஆகியோரும் பங்கேற்றனர். (படங்கள்: எஸ்.ராமதாஸ்)

# வெளிநாடுகளில் வாழும் இந்தியர் வாக்களிக்க வாய்ப்பு வேண்டும்?



இந்தியாவின் எதிர்வரும் பொதுத்தேர்தலில் வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் வாக்களிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்று இலங்கை இந்திய தொடர்பாளர் மணவை அசோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள கோரிக்கையில், இந்தியாவின் பொதுத் தேர்தலுக்கு திகதி அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதனையிட்டு வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

என்றாலும் இந்திய குடியுரிமை பெற்றுள்ள பலர் இலங்கை உட்பட உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். என்றாலும் அவர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ள இன்னும் வாய்ப்பளிக்கப்படாதவர்களாக உள்ளனர். ஆனால் இந்திய குடியுரிமை பெற்றுள்ள ஒவ்வொரு பிரஜையும் தம் தாயகத்தின் தேர்தலில் வாக்களிப்பதில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றனர்.

அதனால் வெளிநாடுகளில் வாழும் இந்திய குடியுரிமை பெற்றுள்ளவர்கள் இத்தேர்தலில் வாக்களிப்பதற்கு வசதி அளிக்க வேண்டும். குறிப்பாக அவர்கள் வாழும் நாடுகளிலாவது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது தொடர்பில் இந்திய தேர்தல் ஆணையாளரும் மத்திய அரசாங்கமும் விஷேட கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# கிழக்கின் குரல்



## சிறுநீரக நோயை கட்டுப்படுத்த அரசாங்கம் கூடுதலான நிதி ஒதுக்கீடு

(ஒலுவில் விசேட நிருபர்)



இலங்கையில் அதிகரித்துக் காணப்படும் சிறுநீரக நோயை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளதோடு, வைத்தியசாலைகளிலும் சிறுநீரக நோயாளர்களுக்கான சிகிச்சைப் பிரிவுகளை நவீனமயப்படுத்தி வருவதாக, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

சிறுநீரக நோய் தொடர்பான கண்காட்சி அம்பாறை சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது பிராந்தியத்தில் சிறுநீரக நோயாளர்கள் நாளாந்தம் அதிகரித்து வருகின்றனர். இதற்கு கூடுதலான நிதி செலவிடப்படுகின்றது சிறு வயதிலிருந்தே சீரான உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதோடு, சுத்தமான குடிநீரை பருகுவதன் மூலம் நீரினால் ஏற்படக்கூடிய நோய்களை தவிர்க்க முடியும். இந்நோயினால் இலங்கையில் நாளாந்தம் கூடுதலான மரணங்கள் ஏற்படுகின்றன.

பொது மக்கள் அருகாமையிலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சென்று தங்களுடைய சிறுநீரகங்களை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரசாங்கம் சுகாதாரதுறைக்கு கூடுதலான நிதியை ஒதுக்கீடு செய்து மக்களின் நலன்கருதி பல்வேறு வேலைத் திட்டங்களையும் அறிமுகப்படுத்தி வருகின்றது.

பொத்துவில், அக்கரைப்பற்று, அம்பாறை, மாஹாஓயா மற்றும் தெஹியத்தக்கண்டிய ஆகிய வைத்தியசாலைகளிருந்து சிறுநீரகநோய் தொடர்பான காட்சிகள் வைக்கப்பட்டிருந்தன.

சிறுநீரக நோய் தொடர்பான ஆரம்ப அறிகுறிகள் அதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் சிறுநீரகம் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அம்பாறை பிராந்திய இராணுவ கட்டளைத்தளபதி மேஜர் ஜென்ரல் விபுல சந்திர சிறி, அம்பாறை பொது வைத்தியசாலை சிறுநீரக விசேட வைத்தியர் நிபுணர் நியோமி, வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஆளுநர் செந்தில் தொண்டமான் மூவின மக்களையும் மதித்து செயற்பட கூடியவர்

பௌத்தமத தேரர்கள் பாராட்டு




கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மூவின மக்களையும் மதித்து செயற்பட கூடியவர் எனவும், கடந்த காலங்களை விட தற்போது கிழக்கு மாகாணத்தில் மூவின மக்களுக்கும் ஒரே விதமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் பௌத்த மத தேரர்கள் பாராட்டியுள்ளனர்.

மல்வத்து மகாவிஹார அணுநாயக்க மற்றும் யக்கல விக்கிரமாரச்சி ஆயுர்வேத பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் வணக்கத்துக்குரிய நியங்கொட தர்மகீர்த்தி ஸ்ரீ சங்கரக்கித விஜிதஸ்ரீ தேரரின் கௌரவிப்பு மற்றும் சன்னஸ்பத்ர விருது வழங்கும் நிகழ்வு என்பன நேற்றுமுன்தினம் (17) அம்பாறை,அரந்தலாவ சர்வதேச பௌத்த கலாசார நிலையத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

ஆளுநரின் ஒவ்வொரு செயற்பாடுகளும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் இருப்பதாகவும், மூவின மக்கள் மத்தியிலும் ஆளுநருக்கு அதிக மரியாதை காணப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ,கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க உட்பட 150 பௌத்த மதகுருமார்கள் கலந்துகொண்டனர்.

## வெள்ளரி பழத்துக்கு அதிக கிராக்கி



(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

உஷ்ணத்தை தவிர்க்கும் வெள்ளரிப்பழத்திற்கு (புட்டரிப்பழம்) அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் பெரும் கிராக்கி நிலவுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவில் பயிரிடப்படும் வெள்ளரிப் பழம் அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர், ஒலுவில், அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களிலுள்ள மக்களால் அதிகளவில் கொள்வனவு செய்யப்படுகின்றது.

இவ்விரு மாவட்டங்களிலும் அதிக உஷ்ணம் நிலவுவதாலும், முஸ்லிம் மக்களால் புனித நோன்பு நோற்கப்படுவதாலும் இப்பழத்திற்கு அதிக கிராக்கி நிலவுவதுடன் அதிகவிலைக்கும் விற்பனை செய்யப்படுகின்றது.

## பாதுகாப்பு வழங்கக் கோரி திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு

பொதுமக்கள் அசௌகரியம்

(காரைதீவு குறூப் நிருபர்)




திருக்கோவில் ஆதார வைத்தியசாலை வைத்தியர்களின் பணிப்பகிஷ்கரிப்பினால் அப்பிரதேச மக்கள் பெரும் அசௌகரியங்களை அனுபவித்துவருகின்றனர்.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 32 ஆயிரம் தமிழ் மக்கள் வைத்திய சேவையின்றி பாதிக்கப்பட்டுள்ளனர். அவசர சிகிச்சைகளுக்காக அப்பிரதேச மக்கள் அக்கரைப்பற்று வைத்தியசாலைக்கு செல்லவேண்டிய துர்பாக்கிய நிலை எற்பட்டுள்ளது. ஒரு வாரத்துக்கு முன்னர் மரதன் ஓடிய மாணவனின் மரணத்தை தொடர்ந்து அங்கு வைத்தியசாலை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதன்போது வைத்தியசாலை கண்ணாடிகள் பெயர்ப் பலகைகள் சேதமாக்கப்பட்டன.

இதனையடுத்து தங்களுக்கு பாதுகாப்பில்லை எனக் கூறி வைத்தியர்கள் வெளியேறினர்.

இதனால் அன்றிலிருந்து நேற்று(18) திங்கட்கிழமை வரை ஒரு வாரகாலமாக வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. அங்கே எவ்வித வைத்தியசேவைகளும் நடைபெறவில்லை.

இதுதொடர்பில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன், வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர், பிரதேச செயலாளர் உள்ளிட்ட பல அமைப்புகள் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருகின்றனர்.

இதேவேளை அரச வைத்தியர்கள் சங்கத்தினர் தங்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

மாணவனின் மரணம் மற்றும் ஆர்ப்பாட்டம் தொடர்பாக திருக்கோவில் பொலிஸார், வலயக்கல்வி அலுவலகம் மற்றும் வைத்தியசாலை வட்டாரங்கள் விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளன. இருந்தபோதிலும் கடந்த ஒரு வாரமாக வைத்திய சேவை முற்றாக பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.



மூதூர் கிளிவெட்டி முத்துமாரியம்மன் ஆலய பங்குனி உத்தர மகோற்சவத்தின் 03 ஆம் நாள் திருவிழாவில் அம்பாள் சிம்மவாகனத்தில் எழுந்தருளி அடியார்களுக்கு அருள்காட்சி வழங்குவதையும் பூஜை நிகழ்வுகள் நடைபெறுவதை படங்களில் காணலாம். (படங்கள்: தம்பலகாமம் குறூப் நிருபர்)

## இறக்காமம் பிரதேச சபை புதிய செயலாளராக சம்சுதீன் சிஹாப்தீன் நியமனம்

(இறக்காமம் தினகரன் நிருபர்)



இறக்காமம் பிரதேச சபையின் புதிய செயலாளராக சம்சுதீன் சிஹாப்தீன் கடந்த வியாழக்கிழமை (14) உத்தியோகபூர்வமாக தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

அக்கரைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் எல்.எம்.இர்பான் பதில் செயலாளராக கடமையாற்றி வந்த நிலையிலேயே அவ்வெற்றிடத்திற்கு இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

முகாமைத்துவ உதவியாளராக கடந்த 2008ஆம் ஆண்டு இணைந்து கொண்டு 16 வருடத்தை பூர்த்தி செய்த இவர் கடந்த 2023ஆம் வருடம் நடைபெற்ற முகாமைத்துவ சேவை அதிசிறப்பு பரீட்சையில் சித்தியடைந்து முதன் முறையாக இறக்காமம் பிரதேச சபையின் செயலாளராக கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச அரசியல் பிரமுகர்கள், ஊர் நலன் விரும்பிகள்,பிரதேச சபை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## வருடாந்த பரிசளிப்பு விழா



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

பட்டிருப்பு வலயக் கல்வி வலயத்துக்குட்பட்ட திருப்பழுகாமம் விபுலாந்த வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா திருப்பழுகாமம் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் சி.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பட்டிருப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் சி.சிறிதரன் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது மேலும் பட்டிருப்பு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான திருமதி.ஜெ.பிரியதர்சன், பு.திவிதரன், நேசகஜேந்திரன் மற்றும் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

## இலங்கை கல்வித்துறை, கல்விசார ஊழியர்கள் அதாஉல்லா எம்.பியிடம் மகஜர் கையளிப்பு

விரைவில் தீர்வு பெற்றுத்தருவதாக அதாஉல்லா எம்.பி தெரிவிப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லாவைச் சந்தித்த கல்விசாரா ஊழியர்கள் தங்களது பிரச்சினைகளை எடுத்துக்கூறியதுடன் உரிய தீர்வைப் பெற்றுத் தருமாறும் கோரினர்.இச்சந்திப்பு அண்மையில் கிழக்கு வாசலில் நடந்தது.

கல்விசாரா ஊழியர்களின் கடமை நேரங்களில் காவலாளி தவிர்ந்த ஏனையோருக்கு நேர மாற்றம் கொண்டு வரப்படல், கஷ்டப்பிரதேசம் மற்றும் அதிகஷ்ட பிரதேசங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கல், பாடசாலை காவலாளிகளுக்கு அரச பொது விடுமுறை தினங்களில் விடுமுறை வழங்கல் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் இவர்கள் கையளித்தனர்.

கல்வி அமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரை உடனடியாக சந்தித்து கல்விசார ஊழியர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுத் தருவதாக அதாஉல்லா எம்.பி. இதன்போது உறுதியளித்தார்.

## சவூதி அரேபிய மன்னரின் விருந்தினராக

# இலங்கையின் 10 பேருக்கு உம்ரா கடமையை நிறைவேற்ற சந்தர்ப்பம்

பல மொழிகள், பல நிறங்கள், பல துறைகள் சார்ந்த ஆளுமைகளுக்கு உம்ரா என்ற திட்டம் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. சவூதி மன்னரின் விருந்தினர்களாக சென்றவர்களில் இலங்கையைச் சேர்ந்த 10 பேர்களில் நானும் ஒருவன்



என்ற வகையில் சவூதி அரேபியாவுக்கு எனது நன்றிகளை தெரிவிக்கிறேன்.

சவூதி அரேபியா வசதியற்றவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவுவது போன்று துறைசார்ந்த ஆளுமைகளையும் கண்ணியப்





படுத்துவதற்கு பல திட்டங்களை செய்து வருகிறது. அவைகளில் முக்கிய திட்டமான சவூதி அரேபியாவில் 1000 பேர்களுக்கு உம்ரா என்ற திட்டம் பலரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்த நிகழ்வு வரவேற்பு முதல் இறுதிவரை நன்கு திட்டமிடப்பட்டதாக இருந்தது.

மன்னரின் விருந்தினராக சென்றவர்களுக்கு தேவையான உச்சகட்ட வசதிகளையும் சவூதி அரேபியா வழங்கியது. அதற்கென்று தனியான அலுவலகங்கள் திறக்கப்பட்டிருந்தன. பல குழுக்களாக பிரிக்கப்பட்டு தங்குமிடம், போக்குவரத்து, உபசரிப்பு, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு என தமது பொறுப்புக்களை எவ்வித குறைகளும் இன்றி கலந்துகொண்ட அனைவரையும் திருப்திப்படுத்தக் கூடிய முறையில் சேவைகளை வழங்கினர். முக்கிய இடங்களுக்கு அழைத்துச் செல்லும் போது அரச மரியாதையுடனே அழைத்துச் செல்லப்பட்டோம். இலவசமாக சிம் அட்டை, இஹ்ராம் ஆடை, சொகுசான போக்குவரத்து ஆகியன வழங்கப்பட்டன. இலங்கையிலிருந்தும் 10 பேர்களுக்கு இம்முறை உம்ரா செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. மன்னரின் வழிகாட்டலின் கீழ் சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சு இதனைப் பொறுப்பேற்று செய்தது. இதற்கான முன்னேற்பாடுகள் சவூதி அரேபியா தூதரகத்தினால் செய்யப்பட்டதுடன் இலங்கையில் இருந்து சென்ற 10 பேர்களையும் ஆரம்பம் முதல் இறுதி வரை இலங்கையின்





சவூதி அரேபிய தூதுவர் மற்றும் அதிகாரிகள் பின் தொடர்ந்துகொண்டே இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

உலக நாடுகளிலிருந்து பல துறைசார்ந்த ஆளுமைகள் செனறதின் ஊடாக பல அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தையும் இப்பயணம் வழங்கியிருந்தது. இந் நிகழ்ச்சி இரண்டாக பிரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. முதல் பகுதி மதீனாவுடன் தொடர்பான விடயங்கள் என்றும் இரண்டாம் பகுதி மக்காவுடன் தொடர்பான விடயங்கள் என்றும் பிரித்து அட்டவணை வழங்கப்பட்டது. மதீனா, மக்கா இரு புனித நகரங்களிலும் ஐந்து நட்சத்திர ஹோட்டல் சகல வசதிகளுடன்



வழங்கப்பட்டது. 1000 பேர்களையும் நான்கு கட்டங்களாக பிரித்து இறுதி பகுதியினர் 250 பேர்களில் இலங்கையைச் சேர்ந்தவர்கள் உள்ளடக்கப்பட்டிருந்தனர். இறுதி விருந்தினர்களில் 17 நாடுகளைச் சேர்ந்தவர்கள் பங்குபற்றினர். மக்கா மஸ்ஜிதுல் ஹராம் மற்றும் மதீனா மஸ்ஜிதுன் நபவி ஆகிய இரு புனிதஸ் தலங்களின் இமாம்களையும் சந்திக்கும் சந்தர்ப்பம் மன்னரின் விருந்தினராக சென்ற அனைவருக்கும் வழங்கப்பட்டது.





மூன்று உலமாக்கள் இரண்டு அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் பத்திரிகையாளர்கள் என 10 பேர்கள் இலங்கையிலிருந்து தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இத்திட்டத்தின் ஏற்பாடுகளை சவூதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சு நன்கு திட்டமிட்டு செய்திருந்தது.

இலங்கையிலிருந்து கலந்துகொண்ட யாத்திரிகர்களுக்கான முன்னேற்பாடுகளை இலங்கையின் சவூதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அவர்களின் வழிகாட்டலில் சவுதி தூதரகம் செய்தது. கலந்து கொண்ட அனைவரும் சவூதி அரேபியாவின் இத்திட்டத்தை பாராட்டியதுடன் பல இலட்சக்கணக்கான மக்களை நிர்வகிப்பது, சவூதி அரேபிய இராணுவத்தினர் புனித பூமியை தரிசிப்பவர்களுடன் நடந்து கொள்ளும் மனிதாபிமான செயற்பாடுகள் மற்றும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கும் விஸ்தரிப்புக்கள் கட்டுமான பணிகள் போன்றவற்றை ஆச்சரியத்துடன் நோக்கினர். கலந்து கொண்ட அனைவரும் சவூதி மன்னர் மற்றும் சவுதி அரேபிய இஸ்லாமிய விவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி அவர்களுக்கும் தமது நன்றிகளை தெரிவித்தனர்.

**மௌலவி பௌசுல் அலவி**
**தாருள் ஈமான் நிறுவனம்**

---

## நகர்வலம்

## ஜனாதிபதி தேர்தலில் பொதுஜனபெரமுன வேட்பாளர் ஒருவரை நிறுத்தும்

### முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் சார்பில் வேட்பாளர் ஒருவரை நிறுத்த தீர்மானித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன வெற்றி பெறுவது நிச்சயம் என்றும் அவர் உறுதியாக தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என தெரிவித்துள்ள அவர், எனினும் அந்த வேட்பாளர் இதுவரை பெயரிடப்படவில்லை என்றும் எவ்வாறெனினும் எதிர்காலத்தில் நடக்கவுள்ள தேர்தல்களில் ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன வெற்றி பெறுவது உறுதி என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## காலநிலைக்கு ஏற்ப நீர்ப்பாசன விவசாய திட்டம் மேலும் நீடிப்பு

### 25 மில்.அமெரிக்க டொலர் நிதி ஒதுக்கீடு

காலநிலைக்கு ஏற்ப நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தை (CSIAP Climate Smart Irrigated Agriculture Project) மேலும் ஒரு வருடத்துக்கு நீடிப்பதற்காக 25 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கீடு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

விவசாயம் மற்றும் பெருந்தோட்டத் தொழில் அமைச்சின் கீழ் வெளிநாட்டு நிதியில் இந்தத்திட்டப் பணி இந்த ஆண்டு நிறைவடைய இருந்த போதும் இவ்வாறு நீடிக்கப்பட்டுள்ளது.

காலநிலையினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் விவசாயம் மற்றும் நீர்ப்பாசனத்தை மேம்படுத்துவதை இலக்காக்கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டத்தில் அம்பாறை, வவுனியா, அனுராதபுரம், அம்பாந்தோட்டை, மொனராகலை, குருணாகல், போன்ற மாவட்டங்களில் சிறிய ஏரிகள் மற்றும் கால்வாய்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் அந்த பகுதிகளில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தேவையான தொழில்நுட்பம் மற்றும் அறிவும் விவசாயிகளுக்கு வழங்கப்படுவதுடன் உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.



இத் திட்டம் இவ்வருடத்தில் நிறைவடையவிருந்த போதிலும்,இதனை தொடர்ந்து இந்தவருடமும் நீடிப்பதற்காக விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர அமைச்சரவைக்கு ஆலோசனையை முன்வைத்தார். இத்திட்டத்தின் பணிகளை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிக்க 25 மில்லியன் டொலர்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கவுள்ளதாக அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார். ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் ஜுல்பள்ளம் மற்றும் கவுந்திஸ்ஸபுர விவசாய தொழில் முனைவோர் கிராமங்களில் இளம் விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. இதுதொடர்பான நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

## உலக அமைதி, பொருளாதார சுபீட்சத்துக்கு மக்காவில் விஷேட துஆ பிரார்த்தனை

**மக்காவிலிருந்து மர்லின் மரிக்கார்**

உலக அமைதி, சமாதானத்திற்காகவும் மக்களின் பொருளாதார சுபீட்சத்திற்காகவும் மக்காவிலுள்ள கஃபதுல்லாஹ்வில் விஷேட துஆ பிரார்த்தனை நடாத்தப்பட்டுள்ளது.

கஃபதுல்லாஹ்வின் இமாம்களில் ஒருவரான அஷ் ஷெய்க் கலாநிதி யாஸிர் அத்தோஷரி ரமழான் நோன்பு கால வித்ரு தொழுகையின் நிறைவிலான குனூத்தின் போது இப்பிரார்த்தனையை நடாத்தினார்.

உம்ரா கடமையை நிறைவேற்றுவதற்காக உலகின் பல நாடுகளில் இருந்தும் கஃபதுல்லாஹ்வில் ஒன்றுகூடியுள்ள முஸ்லிம்கள் இந்த துஆ பிராத்தனையில் கலந்து கொண்டனர். குறிப்பாக சவுதி அரேபியாவின் மன்னரும் இரண்டு பள்ளிவாசல்களின் பாதுகாவலருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ் ஆல் சஊத்தின் விருந்தாளிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உம்ராவை மேற்கொள்ள அழைக்கப்பட்டிருந்த பத்து இலங்கையர் உள்ளிட்ட அனைவரும் இந்த துஆ பிரார்த்தனையில் பங்குபற்றினர்.



அஷ் ஷெய்க் கலாநிதி யாஸிர் அத்தோஷரி, தமது துஆ பிரார்த்தனையில் சவூதி அரேபிய மன்னர் மற்றும் இளவரசர் உள்ளிட்ட அனைத்து மக்களது நல்வாழ்வுக்கும் நீண்ட ஆயுளுக்கும் உலக அமைதி சமாதானத்திற்காகவும் பலஸ்தீனில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் விரைவில் நீங்கிடவும் அங்குள்ள மக்கள் முகம் கொடுத்துள்ள உணவு உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கான அவலங்கள் முடிவுக்கு வந்திடவும் இறைவனிடம் பிரார்த்தனை செய்தார்.

அத்தோடு நாடுகளுக்கு இடையில் ஏற்பட்டுள்ள முருகல்கள் நீங்கிடவும் நாடுகள் மத்தியில் அமைதி சமாதானம் ஏற்படவும் மக்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதார அசௌகரியங்கள் நீங்கி வளமான வாழ்வைப் பெற்றிடவும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து பாதுகாப்பு பெற்றிடவும் எல்லா மக்களதும் ஆரோக்கிய வாழ்வுக்கும் அவர் துஆ பிரார்த்தனை செய்தார்.



ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்திற்கு இவ்வருடத்தின் ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் ஆறு அதிசொகுசு சுற்றுலாப்பயணிகள் கப்பல்களிலிருந்து 6000 சுற்றுலாப் பயணிகள் ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகத்தினூடாக இலங்கையை வந்தடைந்துள்ளனர். வருகை தந்த சுற்றுலாப்பயணிகள் கப்பலொன்றை படத்தில் காணலாம்.

படம் - ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

## பெங்களூர் கிரிக்கெட் போட்டியின் வர்ணனையாளராக நிஸ்மி பங்கேற்பு

**(வெலிகம தினகரன் நிருபர்)**

இந்தியா பெங்களூர் நகரின் பெங்களூர் பிரண்ட்ஸ் விளையாட்டுகழக ஏற்பாட்டில் இம்மாதம் 22, 23, 24 ஆகிய திகதிகளில் நடைபெற இருக்கும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கு இலங்கையிலிருந்து மும்மொழிகளிலும் கிரிக்கெட் வர்ணனை செய்யக் கூடிய திறமை கொண்ட றுகுனு பல்கலைகழக சிரேஷ்ட விரிவுரையாளர் முஹம்மது நிஸ்மி வர்ணனையாளராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். இவர் வெலிகம கல்பொக்கையைச் சேர்ந்தவராவார்.



## கரைத்தீவு பிரதேசத்தில் பள்ளிவாசல் திறப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் கரைத்தீவு பிரதேசத்தில் புனரமைக்கப்பட்ட ஜாமிஉல் இல்ம் மஸ்ஜித் கடந்த வெள்ளிக்கிழமை (15) தொழுகைக்காக வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது.புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு மேற்படி மஸ்ஜிதை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எச்.எம். நியாஸ், பாராளுமன்ற உறுப்பினரின் கற்பிட்டி இணைப்பாளர் யூ.எம். ஜின்னா, வன்னாத்திவில்லு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட மும்மத சமயத் தலைவர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டனர்.


மேலும், புதிதாக திறந்துவைக்கப்பட்ட மஸ்ஜிதின் மலசல கூட கட்டட நிர்மாணப்பணிகளுக்காகவும் பாராளுமன்ற உறுப்பினர் நிதியுதவி வழங்கியுள்ளார். இப்தார் நிகழ்வும் ஏற்பாடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது



தினகரனின் 92 வருட பிறந்ததினத்தை முன்னிட்டு கண்டி நகரில் அமைந்திருக்கும் இந்து சிரேஷ்ட பாடசாலையில் தினகரனின் பிறந்த தின விழா கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் பிரதம அதிதியாக கண்டி இந்து இளைஞர் மன்றத்தலைவர் பாலசுப்பிரமணியம் வைத்தீஸ்வரன் மற்றும் பாடசாலை அதிபர் பி.சிவக்குமார் ஆகியோர் கலந்து கொண்டு கேக்கை வெட்டினார்கள். ஊடகவியலாளர் டி.வசந்தகுமார், மன்றத்தலைவர் பாலசுப்பிரமணியம் வைத்தீஸ்வரனுக்கும் சமூக சேவையாளர் எம்.தீபனுக்கும் அதிபர் பி.சிவக்குமாருக்கும் தினகரன் பத்திரிகைகளை கையளித்தார். பாடசாலையின் தமிழ் ஆசிரியை ஒருவர் தினகரன் பத்திரிகையின் வரலாற்றைக் கூறினார். (படம் :நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

# பலாங்கொடை தேயிலை தோட்டங்களில் குளவிக் கூடுகளால் அச்சுறுத்தல்

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**



பலாங்கொடை தேயிலை தோட்டங்களில் குளவிகளால் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிவருவதாக தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மரக்கிளைகளில் கூடு கட்டி வாழ்ந்து கொண்டிருந்த குளவிகள் தற்போது தேயிலைச்செடிகளை ஆக்கிரமிக்க ஆரம்பித்துள்ளதாக தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பலாங்கொடை பிரதேசத்தில் குளவிகள் தேயிலைச் செடிகளில் கூடு கட்டி இருப்பதால் தேயிலைச்செடிகளை சுத்தம் செய்வதில் சிக்கல்களை எதிர்நோக்குவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக கொழுந்து பறிப்பதற்கு முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இராசகலை, மாரதென்ன, பின்னவலை, மெத்தகந்த, குருபெவில, வெலேகும்புர, வேவல்வத்த, வெவேவத்த, சமனலவத்த, ஊவெல்ல ஆகிய பிரதேசங்களில் இப்பிரச்சினை நிலவி வருவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## இசைத்துறை வாய்ப்பு

வளர்ந்துவரும் இளங் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதை பிரதான நோக்கமாகக் கொண்டு தலைநகரில் கடந்த 44 ஆண்டுகளாக இயங்கி வரும் புதிய அலை கலை வட்டம் இவ்வாண்டில் முற்றிலும் பெண்களுக்கான இசைக்குழுவொன்றை ராகப்ரியா என்ற பெயரில் அரங்கேற்றவுள்ளது.

இதில் இலைமறை காய்களாக இருக்கும் இசைத் துறை ஆர்வலர்களுக்கு வாய்ப்பளிக்க தீர்மானித்துள்ளனர். எனவே பாடல் துறையில் ஆர்வமுள்ள பாடகர்கள் பாடகிகள் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். மேலதிக விபரங்களை பெற 076 2002701,077 6274099,077 7412604,077 7111905 என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்பு கொள்ளவும்.

# மலைச்சாரல்

## மாத்தளை மாவட்டத்தில் கடும் வரட்சி; சேனைப்பயிர்செய்கை பாதிப்பு



**(மாத்தளை சுழற்சி நிருபர்)**

மாத்தளை மாவட்டத்தில் கடும் வரட்சியுடனான காலநிலை நிலவுகின்றது.

இதனால் பெருமளவான பயிர் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வரட்சியான காலநிலையை தொடர்ந்து லக்கல பிரதேசத்தில் சுமார் 500 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கைப் பண்ணப்பட்டுள்ள சேனைப்பயிர்ச்செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

லக்கல பிரதேசத்தில் நாரகமுவ,ஹதுகமுவ, மாரக, லேடியங்கல, அயன்ரன மூரே உட்பட பல பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள குரக்கன்,போஞ்சி,தானியப்பயிர்கள் போன்ற சேனைப்பயிர்செய்கைகள் போதிய நீர் வசதியின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சேனைப்பயிர்செய்கையாளர்கள் முறைப்பாடு செய்து வருகின்றனர்.

## இரத்தினக்கல் தோண்டிய இளைஞர் ஆற்றில் பாய்ந்து மரணம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி சமன் தேவாலயத்துக்கு அண்மித்ததாக களுகங்கையில் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்ந்து கொண்டிருந்த குழுவினர் அச்சத்தில் பொலிஸாரை கண்டு ஆற்றில் குதித்து தப்பிச்செல்ல முயற்சிகையில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நேற்று (18) களுகங்கையில் கரை ஒதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி சமகிபுர பிரதேசத்தை சேர்ந்த 25 வயதான கசுன் அசேல என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

ஆற்றில் குதிக்க வேண்டாம் என பொலிஸார் சத்தமிட்டு அறிவுறுத்திய போதிலும் அனைவரும் ஆற்றில் குதித்ததால் இவரும் ஆற்றில் குறித்ததாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. இரத்தினபுரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் .



புனித நோன்பு ரமழான் மாதத்தை முன்னிட்டு சவூதி அரேபியா அரசினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட ஒரு தொகுதி பேரீச்சம் பழங்கள் முஸ்லிம் கலாசார திணைக்களத்தின் ஊடாக மாத்தளை மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு நேற்றுமுன்தினம் பகிர்ந்தளிக்கப்பட்டன. மாத்தளை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 63 பள்ளிவாசலுக்கு 20கிலோ என்ற அடிப்படையில் பேரீச்சம் பழங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. அந்தவகையில் மாத்தளை கொங்காவல ஜும்மா பள்ளிவாசலில் பேரீச்சம் பழம் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முஸ்லிம் கலாசாரத் திணைக்கள மாத்தளை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ரஹ்மதுல்லாஹ் இதில் கலந்து கொண்டு பேரீச்சம் பழங்களை பள்ளி நிர்வாக சபையிடம் கையளித்தார்.

(படம்: மாத்தளை சுழற்சி நிருபர்)

# நெடுந்தீவில் கைதான தமிழக மீனவர் 21 பேருக்கும் விளக்கமறியல் உத்தரவு

**(யாழ்.விசேட நிருபர்)**



இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்ட 21 தமிழக மீனவர்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு கடற்பரப்பில், நேற்றுமுன்தினம் இரண்டு படகுகளில் மீன்பிடிநடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 21 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர், கடற்றொழில் நீரியல் வளதிணைக்களத்தினர் ஊடாக , ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அதனைதொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளையடுத்து, 21 பேரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

# வடக்கின் உதயம்

## கிளிநொச்சி கல்மடு நகர் மக்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு

**(பரந்தன் குறூப் நிருபர்)**



கிளிநொச்சி கல்மடு நகர் றங்கன் குடியிருப்பிலுள்ள எழுபதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் பிரதேச மக்களின் போக்குவரத்து தேவையை கருத்திற் கொண்டு புதிய பஸ் சேவையொன்று நேற்றுமுன்தினம் காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கண்டாவளை கல்மடு றங்கன் குடியிருப்பு பகுதியிலிருந்து தினமும் 70க்கும் மேற்பட்ட மாணவர்கள் இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை, இராமநாதபுரம் மேற்கு பாடசாலை , இராமநாதபுரம் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மத்திய கல்லூரி ஆகியவற்றுக்கு கற்றல் தேவைகளுக்காக நாளாந்தம் கால்நடையாக பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் சென்றுவருகின்றனர். இப்பகுதிக்கான போக்குவரத்து வசதியை ஏற்பாடு செய்து தருமாறு தொடர்ச்சியாக பிரதேச மக்களால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் நேற்றைய தினம் பிரதேச மாணவர்களின் நன்மைகருதி தனியார் போக்குவரத்து சேவையொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைவாக நேற்றைய தினம் பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டது.

## கசிப்பு விற்பனை அதிகரிப்பு

**(முல்லைத்தீவு குறூப் நிருபர்)**

முல்லைத்தீவு சுதந்திரபுரம் கிராமத்தில் கசிப்பு விற்பனை அதிகரித்துவருவதால் குடும்ப வன்முறைகள் அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கிராமத்தின் பாடசாலை சூழலில் கசிப்பு விற்பனை செய்யப்படுவதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளது. கசிப்பு விற்கப்படும் இடங்கள் தொடர்பாக பொதுமக்களால் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட போதிலும் இதுவரை எந்தவித சட்ட நடவடிக்கைகளும் எடுக்கவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாகவே கசிப்பு விற்பனை அதிகரித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

## வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி 2 கோடி ரூபா பணமோசடி

**(கரவெட்டி தினகரன், யாழ்.விசேட நிருபர்கள்)**

வெளிநாடுகளுக்கு அனுப்புவதாக கூறி வடமாகாணத்தில் கடந்த 2023ஆம் ஆண்டு 254 கோடி ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பில் 139 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ் மற்றும் காங்கேசன்துறை பிராந்தியத்திற்கு உட்பட்ட பகுதியில் 51 கோடி ரூபா பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. அதுதொடர்பில் 44 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் 15 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 46 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 17 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் 08 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 116 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 33 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 20 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 5 கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்டுள்ள நிலையில், அது தொடர்பில் 5 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றதன் அடிப்படையில் 04 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிசார் தெரிவித்தனர்.

வெளிநாடுகளுக்கு ஆட்களை அனுப்பி வைப்பதாக கூறி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் மக்கள் விழிப்படையும் போதே, இவ்வாறான மோசடியான நபர்களிடம் இருந்து தமது பணத்தினை பாதுகாத்து கொள்ள முடியும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதி மரணம்

**(வவுனியா விசேட நிருபர்)**



வவுனியா, சமனங்குளம் பகுதியில் தோட்ட கிணற்றில் தவறி விழுந்து இளம் யுவதியொருவர் உயிரிழந்துள்ளதாக சிதம்பரபுரம் பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

சம்பவத்தில் வவுனியா, சமனங்குளம் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய தவரூபன் லக்சிகா என்ற யுவதியே உயிரிழந்துள்ளார்.

வவுனியா, சமனங்குளம் பகுதியில் வசித்து வரும் இளம் யுவதியொருவர் நேற்றுமுன்தினம் (17.03) மாலை கிணற்று மோட்டரை போட்ட போது அதன் குழாய் கழன்றமையால் அதனை பூட்ட முயற்சித்த போது கிணற்றுக்குள் தவறி விழுந்துள்ளார்.

தொடர்ந்து மோட்டர் இயங்கிக் கொண்டிருப்பதை அவதானித்த அயல் வீட்டார் கிணற்றடிக்கு சென்று பார்த்த போது இளம் யுவதி கிணற்றில் விழுந்து கிடப்பதை அவதானித்துள்ளனர்.

இதனையடுத்து அயலவர்களின் உதவியுடன் யுவதி மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்த போது அவர் மரணமடைந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஹெரோயினுடன் கைதான இளைஞனை பொலிஸ் தடுப்பு காவலில் வைக்க உத்தரவு

**(யாழ்.விசேட நிருபர்)**

யாழில் ஹெரோயினுடன் கைதான இளைஞனை பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுக்க மல்லாகம் நீதவான் நீதிமன்றம் அனுமதியளித்துள்ளது. சங்கானை பகுதியில் 23 வயதுடைய இளைஞன் ஒருவர் 2 கிராம் மற்றும் 100 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரை விசாரணைகளின் பின்னர் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய பொலிஸார், இளைஞனிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அதனால் இளைஞனை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதிக்க வேண்டுமென விண்ணப்பம் செய்தனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த நீதிமன்றம் இளைஞனை பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்ய அனுமதித்தது.

## இசைப்பேழை வெளியீட்டு நிகழ்வு

**(சாவகச்சேரி விசேட நிருபர்)**

கைதடி வடக்கு கயிற்றசிட்டி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தான புகழ்பாடும் "கலியுக வரதன் கானங்கள்" இசைப்பேழை வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி இரவு 7 மணிக்கு ஆலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய தர்மகர்த்தா க.பிரதீபன் தலைமையில், பிரம்மஸ்ரீ முத்துகுமார கணேசக்குருக்களின் ஆசியுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பி. முத்துலிங்கமும், சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் சி. செந்தில்வேலும்,கௌரவ விருந்தினர்களாக செ.தவகுமரன், வி.நிதூசன், க.சிவபாதம், இ.கந்தசாமி மற்றும் க.தங்கராசா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

"கலியுக வரதன் கானம்" வெளியீட்டுரையை செந்தமிழ் சொல்லருவி ச.லலீசனும், ஏற்புரையை கலியுக வரதன் கானம் பாடலாசிரியர் மற்றும் தயாரிப்பாளர் கே.என். பாலசுப்பிரமணியனும் ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

108

### நிஸான் கார் விற்பனைக்கு

HR-9999 NISSAN PRIMARA, 2001, CAR கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958. 019234


117



### வேன்கள் விற்பனைக்கு

591414 TOYOTA LH119, 1993 VAN கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 019220

118



### ஜீப்புகள், பிக்கப்புகள் விற்பனைக்கு

PH-4158 FORD RANGER, 2016, CAB கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 019242

119



### பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

LI-1175 TATA 1615, 2010, LI-4662 TATA 1615, 2011, LORRIES கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பி னான் ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714 5 42 958. 019230

122



### மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

AAU-5697 BAJAJ, 2014, THREEWHEEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810, 0705999 163. 019223

ABH-695 5 PIAGGIO, 2 015, THREE WH EEL கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே. 0711210 810, 0705999 163. 019214

Repeat Your ad For Better Offers

# பிழை திருத்தம் அறிவித்தல்

## கல்வி அமைச்சு, கிழக்கு மாகாணம்

## வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

மேற்படி தலைப்பில் கடந்த 2024.03.18ம் திகதி தினகரன் நாளிதழில் பிரசுரமான விளம்பரத்தில் முதலாம் பந்தியில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் **தரம் I** எனவும் அட்டவணையின் இரண்டாம் நிரலில் வெற்றிடம் நிலவும் வலயங்கள் - மட்டக்களப்பு **மத்தி** எனவும் திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

விளம்பரத்தின் ஏனைய விடயங்களில் மாற்றங்கள் இல்லை.

**செயலாளர்,**
**கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள், முன்பள்ளி கல்வி, தகவல் தொழில்நுட்பக் கல்வி, இளைஞர் விவகாரம், புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சு, கிழக்கு மாகாணம்.**

SUNDAY OBSERVER adz it's what you want | வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Kurunegala District

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

Ibbagamuwa - 037 22 59 508
6202 - Hiriyala Agencies - Dehelgamuwa, Ibbagamuwa.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

# இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
# போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சு

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| பாலவினி பட்டுமன்த்பார, பாரக்கிரமபார மாவத்த, கந்தளாய் நீர்ப்பாசன பொலிஸ் SSP அலுவலக வீதியின் மேம்படுத்தல் |
| அபேசிங்ஹ பார முல்லிபொதான பாலம அசல சிட மாவத்தயின் மேம்படுத்தல் |
| உள்ளகவீதி, கல்லூரி வீதியின் கொங்கிறீட் மேற்பரப்பு ஆண்டான்குளம் பாசல் மாவத்தையின் மேம்படுத்தல். |
| பதவி சரிபுர உள்ளக வீதியில் கிரவல் மேற்பரப்பின் மேற்படுத்தல் |
| மொரவெவ உள்ளக வீதியின் கிரவல் மேற்பரப்பின் மேம்படுத்தல் |

தேசிய போட்டி விலைமனு முறைமையின் கீழ் மேற்படி வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024.03.19 முதல் 2024.04.01 வரை RDA மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளம் www.rda.gov.lk ஐப் பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக்குழு,**
**பிரதம பொறியியலாளரின் அலுவலகம், RDA திருகோணமலை**

# பெறுகை அறிவித்தல்

## துணி கொள்வனவு செய்தல் — 2024

## டி சொய்சா மகளிர் மருத்துவமனை - கொழும்பு-08

டி சொய்சா மகளிர் மருத்துவமனையில் 2024ம் ஆண்டிற்காக துணி கொள்வனவு செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. அவ்விலைமனுக்கள் எம்மால் வழங்கப்படும் ஆவணத்தின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

2024.03.19 முதல் 2024.04.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 தொகையை வைத்தியசாலையின் காசாளரிடம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை நிதிப் பிரிவிற்கு சமர்ப்பித்து விலைமனுக்கள் வழங்குவதற்கு தேவைப்படும் ஆவணத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும். பற்றுச்சீட்டை விண்ணப்பிப்பதுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பங்களும் 2024.04.10 மு.ப. 10.00 இற்கு முன்பு கீழேயுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கணக்காளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் துணிகளை கொள்வனவு செய்தல் - 2024 என்று குறிப்பிடுதல் வேண்டும். சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் 2024.04.10 மு.ப. 10.00 இற்கு திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிராதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தை அழையுங்கள் (தொ.பே.இல: 011-2697315/ 2696224 - 25) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிரகரிக்கும் உரிமை பிரதேச பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**டி சொய்சா மகளிர் மருத்துவமனை,**
**கொழும்பு-08.**

# இலங்கை துறைமுக அதிகாரசபை

## வெற்றிடங்கள்

**பின்வரும் பதவிகளுக்காக இலங்கை துறைமுக அதிகாரசபை தகுதிபெற்ற தனிநபர்களை தேடுகிறது.**

### 1. தலைமை முகாமையாளர் பதவி (சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தி) சிரேஷ்ட மட்ட முகாமைத்துவம் 1 (SLM 1)

a) **தகைமை:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வர்த்தக நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்/ முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு பட்டம் ஒன்றில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றின் சந்தைப்படுத்தலில் அங்கத்துவம்.

அத்துடன்

சிரேஷ்ட முகாமைத்துவ திறனில் புகழ்பெற்ற நிறுவனம்/களில் சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தக அபிவிருத்தியில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

சந்தைப்படுத்தல் அபிவிருத்தியில் அனைத்து அம்சங்களின் பரந்த அறிவுடன் சந்தைப்படுத்தல், ஏற்பாட்டியல், கடல்சார் பொருளாதாரம் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவத்தில் மேம்பட்ட திறன்களை பெற்றிருத்தல் வேண்டும்.

சந்தைப்படுத்தல் வர்த்தக அபிவிருத்தி தொடர்பில் துறைமுக கப்பல்துறை மற்றும் ஏற்பாட்டியலில் அனுபவம் பெற்ற அபேட்சகர்களுக்கு அனுகூலமாக அமையும்

b) **ஊதியம்:**
சம்பளப் பிரிவு : 3:1 (SLM 1)
அடிப்படை சம்பளம் : ரூபா 105,765/-
ஆண்டு ஊதிய உயர்வு : ரூபா 1,900/-
கொடுப்பனவுகள் உட்பட மொத்தச் சம்பளம் தோராயமாக ரூபா 182,000/- (p.m.)

### 2. தலைமை முகாமையாளர் பதவி (தகவல் அமைப்புகள்) - சிரேஷ்ட மட்ட முகாமைத்துவம் 1 (SLM 1)

a) **தகைமை:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து தகவல் தொழில்நுட்பத்தில் (IT) பட்டப் பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை நிறுவனம் ஒன்றில் இருந்து தகவல் தொழில்நுட்பத்தில் அங்கத்துவம்

அத்துடன்

சிரேஷ்ட முகாமைத்துவ திறனில் புகழ்பெற்ற நிறுவனம்/களில் தகவல் அமைப்புகளில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் தகைமைக்கு பின்னரான அனுபவம்.

முறைமை வடிவமைப்பு, மேம்படுத்தல், திட்ட முகாமைத்துவம், மற்றும் அமைப்புகளின் இற்றை நிலை (State-of-the-art) அறிவு, பயன்பாடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள் உட்பட அதிக சிக்கற்பாடுடைய தகவல் அமைப்புகளை செயற்படுத்தல் தொடர்பிலான அனைத்து அம்சங்களினதும் மேம்பட்ட தொழில்நுட்ப அறிவை பெற்றிருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப அமைப்புகளுடன் தொடர்புபட்ட கப்பல்துறை, ஏற்பாட்டியல் மற்றும் துறைமுகங்களில் அனுபவம் பெற்ற அபேட்சகர்களுக்கு அனுகூலமாக அமையும்

b) **ஊதியம்:**
சம்பளப் பிரிவு : 3:1 (SLM 1)
அடிப்படை சம்பளம் : ரூபா 105,765/-
ஆண்டு ஊதிய உயர்வு : ரூபா 1,900/-
கொடுப்பனவுகள் உட்பட மொத்தச் சம்பளம் தோராயமாக ரூபா 182,000/- (p.m.)

**வயதெல்லை**
மேலுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்கள் 45 வயதுக்கு குறைந்தவராக இருத்தல் வேண்டும் (அரச திணைக்களங்கள் அல்லது அரச கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த வயதெல்லை பொருந்தாது)

தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் இலங்கை துறைமுக அதிகாரசபையினால் ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட மற்றும் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படவிருக்கும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றல் வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அதிகாரசபையின் எந்த ஒரு பிரிவு அல்லது துறைகளிலும் மற்றும் இலங்கை துறைமுக அதிகாரசபையின் தேவைக்கு அமைவாக நாட்டின் எந்த ஒரு பாகத்திலும் பணியாற்றல் வேண்டும்.

வயது, கல்வி, தொழில் தகைமைகள் மற்றும் அனுபவத்தை நிரூபிக்கும் சான்றிதழ்களின் நிழல்பிரதிகளை இணைத்த விண்ணப்பங்களை 2024.04.01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் "தலைமை மனித வள முகாமையாளர், மனித வள பிரிவு, இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு 13" என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது slpahrex@slpa.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்காக இந்த அறிவித்தல் www.slpa.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

அரச திணைக்களங்கள் அல்லது அரச கூட்டுத்தாபனங்களின் அதிகாரிகளின் விண்ணப்பங்கள் அவர்களின் குறித்த திணைக்களங்கள் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்பி இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் தொடர்புடைய திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்களில் இருந்து விடுவிப்புக்கான தேவையை பெறுதல் வேண்டும்.

**தலைவர்**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## கண்டி மாநகர சபை

நீர் வேலைகள் திணைக்களத்தின் இயந்திரவியல் மற்றும் மின்னியல் வேலைகளுக்காக ஓர் ஆலோசனை சேவைக்காக பொறியிடப்பட்ட விலைமனுக்களை கண்டி மாநகர சபை (KMC) அழைக்கின்றது.

**கேள்வியின் பெயர் :** கண்டி நீர் வேலைகள் அமைப்பின் இயந்திரவியல் மற்றும் மின்சார புனரமைப்பிற்காக ஆலோசனை சேவை.

**தகைமைகள் :** பதிவு செய்யப்பட்ட பொறியியல் ஆலோசனை நிறுவனங்கள் அல்லது உள்ளக ஆலோசகர்கள்.

**ஆலோசனைக் காலம் :** 12 மாதங்கள், தற்காலிகமாக 2024.மே.01 முதல் 2025 ஏப்ரல் 30

**விலைமனுப் பிணை:** இரு. 15000 2024 ஜூலை 10 வரை செல்லுபடியாகுமாறு ஆவணங்கள் வழங்குதல் 2024 மார்ச் 18 முதல் 2024 ஏப்ரல் 09 பி.ப. 2.45

**விலைமனுவுக்கு முன்னரான கூட்டம் :** 2024 மார்ச் 26 மு.ப.10.00 க.மா.ந.ச.யில் - விலைமனுவுக்கு முன்னரான கூட்டத்தில் சமுகமளித்தல் கட்டாயமில்லை.

**கேள்விகள் மூடப்படும் மற்றும் திறக்கப்படும் திகதி / நேரம் :**
2024 ஏப்ரல் 10 மு.ப. 10.00

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள் :**
நீர் வேலைகள் பொறியியலாளர், க.மா.ந.ச

**தொ.பே:** 081 - 2223808

**மின்னஞ்சல் :** waterdepartment879@gmail.com

தகைமை மற்றும் ஆர்வமுள்ளவர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்திய பின்னர் க.மா.ந.ச நீர் வேலைகள் திணைக்களத்திலிருந்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களை சேகரித்துக் கொள்ளலாம்.

**K.K.G.I.D.P. விஜேதிலக்க,**
**மாநகர ஆணையாளர்**
**கண்டி மாநகர சபை**
**கண்டி** **2024.03.18**

# இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு

## விலைக்கோரலுக்கான வேண்டுகோள் (RFB) – பொருட்கள்

### காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை (கடன் இல. 8996-LK)

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

### இலங்கையில் ஒழுங்குமுறை அல்லாத துணை தகவல் கண்காணிப்பு (NSIM) விண்ணப்பங்களுக்கான காற்று மற்றும் மழைநீர் சென்சார் வலையமைப்பை மேம்படுத்துதல்

**ஒப்பந்த இல: SLMOI/CRES/NBRO/G/NCB/10**

1. இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு, நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையின் செலவை ஈடுசெய்வதற்காக மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியிடமிருந்து (IBRD) கடனைப் பெற்றுள்ளது என்பதுடன் இலங்கையில் ஒழுங்குமுறை அல்லாத துணை தகவல் கண்காணிப்பு (NSIM) விண்ணப்பங்களுக்கான காற்று மற்றும் மழைநீர் சென்சார் வலையமைப்பை மேம்படுத்துதல் எனும் ஒப்பந்த்தின் கீழான கொடுப்பனவுகளுக்கு இந்த கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க விரும்புகிறது.
2. இலங்கையில் ஒழுங்குமுறை அல்லாத துணை தகவல் கண்காணிப்பு (NSIM) விண்ணப்பங்களுக்கான காற்று மற்றும் மழைநீர் சென்சார் வலையமைப்பை மேம்படுத்துதல் எனும் பணிக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறையின் சார்பில் திட்டப் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு - 05, இல. 11, ஜாவத்த வீதி, காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை, பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 0112507855 தொலைநகல்: 0112058451 மின்னஞ்சல்: pdcresmpa@gmail.com மற்றும் 2024 மார்ச் 19ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 மார்ச் 19ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் 08ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மீளளிக்கப்படாத 37,000.00 இல. ரூபாவைச் செலுத்தி மற்றும் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்வதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப்பணமாகவிருத்தல் வேண்டும்.
6. நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை 2024 ஏப்ரல் 09ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். இந்த விலைமனுக்களை கொழும்பு-05, இல. 11, ஜாவத்த வீதி, காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை, செயற்றிட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு அதன் பின் உடன் திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2024 ஜுலை 09ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
8. சகல விலைமனுக்களுடனும் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள மாதிரி வடிவத்தின் பிரகாரம் 2024 ஆகஸ்ட் 06ஆம் திகதி வரை விலைக்கோரல் பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும். செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறி இணைக்கப்படாத எந்தவொரு விலைமனுவும் நிராகரிக்கப்படும்.

| லொட் இல. | ஒப்பந்தப் பெயர் | விலைக் கோரல் பிணை முறி (இல. ரூபா) |
|---|---|---|
| Lot 1 | Consumables required for air sensor station fabrication | 600,000 |
| Lot 2 | Consumables required for rainwater sensor station fabrication | 500,000 |
| Lot 3 | Triple Quadrupole Gas Chromatograph Mass Spectrometer (GC-MS/MS) | 750,000 |
| Lot 4 | Ion chromatograph | 500,000 |
| Lot 5 | Multi-Purpose Powder X-Ray Diffractometer | 800,000 |
| Lot 6 | X-Ray Florescence Spectrometer | 400,000 |
| Lot 7 | High Volume Air Samplers ($PM_{2.5}$, $PM_{10}$, TSPM) | 150,000 |
| Lot 8 | Supporting Equipment | 150,000 |
| Lot 9 | Instrument installation and sample preparation facilities | 400,000 |

9. கொழும்பு-05, இல. 11, ஜாவத்த வீதி, காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை, கூட்ட அறையில் 2024 மார்ச் 27ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
10. வேலைத்தள விஜயம் மற்றும் / அல்லது விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் தொடர்பான கிரயம் மற்றும் செலவுகள் உட்பட விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பான விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எந்தவொரு கிரயம் அல்லது செலவுகளுக்கு தொழில் வழங்குநர் பொறுப்புகூற மாட்டார்.
11. பெற்றுக்கொள்ளப்பட்ட எந்தவொரு விலைமனு அல்லது சகல விலைமனுக்களையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை திட்டப் பெறுகைக் குழு (PPC) தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**காலநிலை மாற்றத்தை எதிர்நோக்குவதற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் அணுகுமுறை,**
**இல. 11, ஜாவத்த வீதி,**
**கொழும்பு - 05.**
**தொ.பே: 011 2507855 / 011 2058452**
**2024-03-18.**

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை 2023 (2024)

### 65 - பொறியியற் தொழில்நுட்பவியல், 66 -உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் செய்முறைப் பரீட்சை

2023 (2024) க.பொ.த. (உ.தர)ப் பரீட்சைக்குரிய தொழில்நுட்பப் பாடத்துறையின் கீழ் மேற்படி பாடங்களின் எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகளுக்கான செய்முறைப் பரீட்சைகள் பின்வருமாறு நடைபெறவுள்ளன.

- **செய்முறைப் பரீட்சை நடைபெறவுள்ள திகதிகள்**
  65 - பொறியியற் தொழில்நுட்பவியல் - 2024.03.19 தொடக்கம் 2024.03.29 வரை
  66 - உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் - 2024.04.05 தொடக்கம் 2024.04.07 வரை

- **நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள 117 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளன.**
  65 - பொறியியற் தொழில்நுட்பவியல் - 41
  66 - உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் - 76

**கவனிக்கவும் : செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் பரீட்சார்த்தி தோற்ற வேண்டிய திகதி, இடம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அவற்றை எக்காரணத்திற்காகவேனும் பின்னர் மாற்றம் செய்ய முடியாது.**

02. எழுத்துப் பரீட்சைகளுக்குத் தோற்றிய பாடசாலைப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் அவர்களது விண்ணப்பப்படிவத்திலுள்ள முகவரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk ஊடாக அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

03. இப்பரீட்சை தொடர்பாக ஏதேனும் விசாரணைகள் இருப்பின் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ள முடியுமென்பதை கருத்திற் கொள்ளவும்.

தொலைபேசி இலக்கங்கள் : 011-2784208, 011-2784537, 011-2786616, 011-2785922
தொலைநகல் இலக்கம் : 011-2784422
பொதுத் தொலைபேசி இலக்கங்கள்: 011-2786200, 011-2784201, 011-2785202 } நீடிப்பு 263, 264, 265, 280, 282

நேரடித் தொலைபேசி இலக்கம் : 1911
மின்னஞ்சல் முகவரி : gcealexam@gmail.com.

**எச்.ஜே.எம்.சீ. அமித் ஜயசுந்தர**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

**6/30/Newspaper**
**பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை**
**இலங்கை பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை, பத்தரமுல்ல.**
**2024.03.18**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்
### ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் - 2024/2025
### மிஹிந்தலை இடப்பரப்பு

1. ஒரு வருடத்திற்கு மிஹிந்தலை இடப்பரப்பிற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குவதற்காக தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக திணைக்கள பெறுகைக் குழுவின் சார்பாக தலைவரினால் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. தகைமையுள்ள விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவர்களாகவும் பின்வரும் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்தவர்களாகவுமிருத்தல் வேண்டும்.
   அ. விலைமனுதாரர் இலங்கையில் வியாபார பதிவு செய்தல் கட்டளைச்சட்டம், கம்பனிகள் சட்டம் அல்லது கூட்டுறவு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒன்றாக பதிவு செய்த நிறுவனமொன்றாவிருத்தல் வேண்டும்.
   ஆ. உரித்தான சேவைகளை வழங்கும் சமூக அடிப்படையிலான நிறுவனமாக பிரதேச செயலகங்களின் கீழ் பதிவு செய்திருக்கும் நிறுவனங்களும் விண்ணப்பிக்கலாம். (சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் பிரதேச செயலகத்திலிருந்து பெற்றுக் கொண்ட தகுதித்தன்மை சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)
   இ. நிகரான கொள்ளளவுடைய அரச பல்கலைக்கழகங்கள் அடங்கலாக அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள் அல்லது பாரிய தனியார் ஆகியவற்றிற்கு ஜெனிட்டோரியல் சேவைகளை ஐந்து (5) வருடங்களுக்கு குறையாமல் (2019, 2020, 2021, 2022 மற்றும். 2023) திருப்திகரமாக வழங்கிய அனுபவம்; ஆகக் குறைந்தது மூன்று நிகரான தன்மையுடைய ஒப்பந்தமாக 30 மில்லியன் ரூபா மேலேயுள்ள ஐந்து வருடங்களிலும் அத்துடன் வருடாந்த நிதிப்புரள்வானது 40 மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
4. இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு பெற்றதும் 350,000 ரூபா பெறுமதியானதுமான விலைமனுப்பிணையாகவிருத்தல் வேண்டும் அல்லது 175,000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்துதல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2024.07.30 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை 2024.03.19 ஆம் திகதியிலிருந்து 2024.04.01 ஆம் திகதியன்று வரையும் வார நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 025-2266781 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழக பொது நிருவாக உதவி பதிவாளரிடமிருந்து பெற்று விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. விலைமனுவை சமர்ப்பிக்க முன்னர் சுத்திகரிப்பாளர்களை வேலைக்கமர்த்துவதற்கான பல்கலைக்கழகத்தின் அனைத்து தேவைப்படுத்தல்கள் தொடர்பாக தெளிவான விளக்கமொன்றை பெற்றுக் கொள்வதற்காக தள விஜயமொன்றை மேற்கொள்ளுமாறு விலைமனுதாரர்கள் பணிப்புரை வழங்கப்படுகின்றனர்.
7. 2024.03.19 ஆம் திகதியிலிருந்து 2024.04.01 ஆம் திகதி வரையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 7500 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பொது நிருவாக உதவி பதிவாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்படலாம். வரைவு விலைமனுக்கோரல் ஆவணங்கள் பல்கலைக்கழக **https://www.rjt.ac.lk/notice** என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்பதுடன் மீளளிக்கப்படாத கட்டணமானது இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பெயரில் அனுராதபுர மக்கள் வங்கியில் பேணப்படும் 008-1-8-1725841 என்ற இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கிலக்கத்திற்கு வரவு வைக்கப்படல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப்பிரதியானது இணைக்கப்படல் வேண்டும்.
8. 04/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விலைமனுக்களை சமர்ப்பிக்கும் பொது முயற்சிகளுக்கு 15% முன்னுரிமை வழங்கப்படும்.
9. 2024.04.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.
10. பூர்த்தி செய்யப்பட்ட பிரதியுடனான விலைமனுக்கள் ஒன்றில் பதிவுத் தபாலில் கீழேயுள்ள முகவரிக்கு 2024.04.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது மிஹிந்தலை, இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், நிருவாக கட்டிடம் 2 ஆம் மாடியின் பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்களை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தலைப்பான "Supply of Janitorial Services – 2024/2025 (Mihintale Premises)" என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுமென்பதுடன் விலைமனுக்கள் 2024.04.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.

**துணைவேந்தர் / தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம்,**
**மிஹிந்தலை.**
**19.03.2024**

SUNDAY OBSERVER adZ it's what you want
தினகரன் வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Badulla & Nuwaraeliya District**

Hatton - 051 22 225 63
2145 - T. P. C. Chinthaka Nanayakkara - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Hatton - 052 22 773 47
2506 - C. T. Perumal - Hatton Stores, No. 3, Main Street, Hatton.

Nuwaraeliya - 052 22 341 34
2507 - A. Rajalingam - No. 6, New Market Building, Nuwaraeliya.

Thalawakele - 071 7 236 799
2517 - G. G. L. Ravindra Kumara - No. 119, 121, Nuwaraeliya Road, Thalawakele.

Kotagala - 051 4 924 447
2555 - D. Deonis Kodikara & Sons - Rosita Bazaar, Kotagala.

Haputale - 077 7 278 899
8117 - R. M. K. Fizar Khan - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Bandarawela - 071 0 796 060
8126 - L. Eubert Silva - Nayana Book Shop, No. 343, Main Street, Bandarawela.

Kandy - 055 22 571 30
8131 - Nimal Attanayake - Per Siripura Contractor, Ex-Kandy, Kandy.

Haputale - 057 22 443 92
8139 - A. K. P. Hemawathi - Multi Centre, No. 2, Main Street, Haputale.

Lunugala - 055 22 639 84
8140 - E. M. Lal - Maduka Gold House, No. 111, Main Street, Lunugala.

Bandarawela - 057 22 301 60
8172 - K. P. Kodagoda - 'Sri Subasetha', 2nd Floor, Sinhagiri Building, Bandarawela.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்

### உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் ''1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 03" இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவு சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும. (http://www.drc.gov.lk/)
4. விலைக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்க தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
6. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையின் 5ஆம் பிரிவில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்த தரவு) வழங்கப்பட்டுள்ளன.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் / செயலாளர் அவர்களிடமிருந்து வார நாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 19-03-2024ஆம் திகதி முதல் 08-04-2024ஆம் திகதி வரை 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மீளளிக்கப்படாத 7500.00 கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
9. 09-04-2024ஆம் திகதி 10.00 மணித்தியாலயம் அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
10. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சகல விலைமனுக்களுடன் விலைமனுப் பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 26-03-2024ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பதுளை, மார்ட்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு (இல.ரூ. மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக்கோரல் பிணைத் தொகை (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஹாலிஎல பிரதேச சபை | LDSP/UP/BD/ HEPS/W/2024/1 | ஓசோன் நிறுவனத்திற்கு அருகிலுள்ள சந்தரெஸ் பிரஜாசாலை வேலைத் தளத்தில் பலநோக்குக் கட்டிடமொன்றை நிர்மாணித்தல் | 28.25 | 150 நாட்கள் | C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 282,500.00 | 03.09.2024 | உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்ட்டின் சில்வா மாவத்தை, பதுளை. 0552222407 அல்லது இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனம் |
| வெலிமட பிரதேச சபை | LDSP/UP/BD/ WPS/W/2024/2 | உள்நாட்டு உணவு விற்பனை நிலையத்தை நிர்மாணித்தல் - பொரலந்த நகரம் | 17.96 | 120 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 180,000.00 | 23.07.2024 | |
| லுணுகல பிரதேச சபை | LDSP/UP/BD/ LPS/W/2024/3 | லுணுகல நகரத்தில் தற்போதுள்ள பல நோக்குக் கட்டிடத்தை மேம்படுத்துதல் | 20.24 | 120 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 202,500.00 | 23.07.2024 | |
| தனமல்வில பிரதேச சபை | LDSP/UP/MO/ TMPS/W/2024/1 | முறையான நகர திட்டத்தின் கீழ் தனமல்வில நகரத்தில் பலநோக்கு பொருளாதார நிலையத்தை நிர்மாணித்தல் | 21.53 | 150 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 215,500.00 | 23.07.2024 | |
| தனமல்வில பிரதேச சபை | LDSP/UP/MO/ TMPS/W/2024/2 | தனமல்வில பிரிவிற்கு விவசாய உற்பத்திகளை விற்பனை செய்வதற்காக தனமல்வில வாரச் சந்தையை விற்பனை நிலையமாக அபிவிருத்தி செய்தல் - கட்டம் II | 17.32 | 120 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 173,500.00 | 23.07.2024 | |
| மெதகம பிரதேச சபை | LDSP/UP/MO/ MGPS/W/2024/2 | தற்போதுள்ள வாரச் சந்தையின் மேல் தளத்தை மேம்படுத்துதல் | 12.74 | 120 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 127,500.00 | 23.07.2024 | |

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**உள்ளூராட்சித் திணைக்களம்,**
**ஊவா மாகாணம்.**

**0552222407**

**19-03-2024**

## சாக்கடை வழிகளை மறுசீரமைப்பு செய்வதற்கான ஒப்பந்தக்காரர்களை தேர்ந்தெடுத்தல்

### தேசிய தொற்றுநோய் நிறுவனம், ஐ.டி.எச். அங்கொட

அங்கொட, ஐ.டி.எச். தேசிய தொற்றுநோய் நிறுவனத்தின் சாக்கடை வழிகள் அமைப்பின் மறுசீரமைப்பு விடயங்களுக்காக ICTAD C10 அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து 2024.04.05 பி.ப. 2.00 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமைகளை உறுதி செய்து கொண்டபின் மற்றும் மீளளிக்கப்படாத ரூ. 1000.00 ஐ செலுத்துவதன் பேரில் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும் தலைமையகத்தில் பெற்றுக்கொண்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து கணக்காளர் பணிமனையில் வைப்புச் செய்துள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்வி ஆவணங்கள் திறக்கப்படுவதுடன், அதற்காக கேள்விதாரர் அல்லது பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தொடர்புகள்:- 0112411223/4 (நீடிப்பு 270/203)**

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**தேசிய தொற்றுநோய் நிறுவனம்,**
**ஐ.டி.எச். அங்கொட.**

afc
தங்கக் கடன் சேவை
தங்க நகை ஏல விற்பனை

அலையன்ஸ் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் பின்வரும் கிளைகளில், அடமானம் வைக்கப்பட்டுள்ள 31.12.2023 அன்று முதிர்ச்சியடைந்த இதுவரை மீட்கப்படாத தங்கப் பொருட்கள், பின்வரும் தேதிகளில் காலை 09:30 முதல் கீழ்க்கண்ட இடங்களில் பொது ஏலம் மூலம் விற்கப்படும்.

தங்கக் கடன் சேவை நிலையங்கள்

| தேதி | கிளை | இடம் |
|---|---|---|
| 21-03-2024 | [illegible] | [illegible] |
| 22-03-2024 | [illegible] | |
| 25-03-2024 | [illegible] | |
| 26-03-2024 | [illegible] | |
| 27-03-2024 | [illegible] | |

ஏலத்தில் பங்கேற்கும் அனைவரும் தங்களின் தேசிய அடையாள அட்டையை கொண்டு வர வேண்டும் மற்றும் நிறுவனத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். எலாயன்ஸ் ஃபினான்ஸ் கோ. பி.எல்.சி க்கு எந்தவித அறிவிப்பும் இல்லாமல் ஏலங்களை ரத்து செய்ய, ஒத்திவைக்க அல்லது ஒன்றிணைக்க உரிமை உள்ளது.

எலாயன்ஸ் பினான்ஸ் கம்பனி பீ.எல்.சீ

அடகுச் சேவைத் தலைவர்
எலாயன்ஸ் பினான்ஸ் பீ.எல்.சீ
722, கோட்டை வீதி இராஜகிரிய
தொலை : 0115 573600

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

## பொது அறிவித்தல்

## ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிடட் உரிமம் வழங்குதல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் அலைக்கற்றையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க இணைய மற்றும் கேபிள் டெலிவிசன் சேவைகள் உள்ளடங்கலாக தரவு தொடர்பாடல் சேவைகள் வழங்குவதற்கு தொலைத்தொடர்புத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு **ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிடட்** விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதுப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க **ஐந்து வருட** காலப் பகுதிக்காக **ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிடட்டிற்கு உரிமம் வழங்குவதற்காக**, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பது சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிட்டிற்கு** அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை 2024.04.17 திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணையத்தளமான www.trc.gov.lk. இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இல. 276, எல்விடிகல மாவத்தை
கொழும்பு 08.
தொலைபேசி : 011-2689345 பெக்ஸ் : 011-2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk

SELACINE

# மூடும் திகதியை நீடித்தல்

## வரையறுக்கப்பட்ட (ஸ்ரீ லங்கா) (தனியார்) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள்

**Procurement No.: 066/T/2022**
**SUPPLY , INSTALLATION & COMMISSIONING OF VHT AIR GROUND COMMUNICATION SYSTEM AT RADAR & COMMUNICATION CENTRE, PIDURUTALAGALA**

மேலேயுள்ள விலைமனு தொடர்பாக 2024 பெப்ரவரி 02 ஆம் திகதியன்று 'டெயிலி நியுஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை விளம்பரங்களுக்கு மேலதிகமான அறிவித்தல் பின்வருமாறு.

மேலேயுள்ள விலைமனுவின் மூடும் திகதியானது 2024 ஏப்ரல் 24 ஆம் திகதி புதன்கிழமையன்று வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

2024 ஏப்ரல் 23 ஆம் திகதியானது போயா பௌர்ணமி தினமானதினால் விலைமனுக்கள் ஆவணங்கள் 2024 ஏப்ரல் 22 ஆம் திகதியன்று வரையும் எந்தவொரு வேலை நாட்களிலும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய, வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்திலிருந்து கொள்வனவு செய்யலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2024 ஏப்ரல் 23 ஆம் திகதி வரையும் **www.airport.lk** என்ற **AASL** இன் ஒன்லையினிலிருந்தும் கொள்வனவு செய்யலாம்.

ஏனைய விடயங்களில் மாற்றமில்லை.

**தலைவர்:**
**வரையறுக்கப்பட்ட (தனியார்) (ஸ்ரீலங்கா) விமானநிலையம்**
**மற்றும் விமான சேவைகள்**
**பண்டாரநாயகக் சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க**

## பெயர் மாற்றம்

பதுளை மாவட்டம் லுணுகலை பிரதேச செயலகப் பிரிவு 94 இல. 47/A, லுணுகலைகம, லுணுகலை கிராம சேவகர் பிரிவு உடபங்குவ லுணுகலை, தயாபரணி என்னும் நான், இன்று முதல் சுந்தரராஜ் நிஷான் என்னும் பெயரை பாவிப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு தெரிவிப்பதோடு உறுதி செய்கிறேன்

- சுந்தரராஜ் நிஷான்

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

# அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றி ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும் :-

| இல | பெயரும் முகவரியும் | பதவி |
|---|---|---|
| 1 | திருமதி.டி.பி தர்மசேன<br>இலக்கம் 500/85, திம்பிரிகஸ்யாய வீதி. கொழும்பு 5 | போலந்து குடியரசின் இலங்கைத் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திருமதி.ஈ.ஏ.எஸ்.டபிள்யூ. எதிரிசிங்க<br>இலக்கம் 668/5, ஜயகத் மாவத்தை ஹிம்புட்டுவெல்கொட, களனி | தாய்லாந்து இராச்சியத்திற்கான இலங்கைத் தூதுவராக பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 3 | கலாநிதி. திரு.என்.சி.குமாரசிங்க<br>இலக்கம் 474/2, சமுதுர மாவத்தை, அரங்கல,ஹோகந்தர | தேசிய நீரக வளமூலங்கள் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 4 | கலாநிதி. திரு. கித்சிரி மஞ்சநாயக்க<br>இலக்கம் 1, சுதந்திர அவென்யூ, கொழும்பு 7 | புவிச்சரிதவியல் அளவை, சுரங்கப் பணியகத்தின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |
| 5 | திரு.டபிள்யூ.ஏ.டி.எஸ். குணசிங்க<br>ரிசேச் ஸ்டேஷன், பொம்புவல, களுத்துறை | பிராந்திய அபிவிருத்தி வங்கியின் தலைவராக நியமிக்கப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, "செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே" என்ற விலாசத்திற்கு 2024 ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பரம் பாராளுமன்ற இணையதளத்திலும் இடம்பெற்றுள்ளது (www.parliament.lk)

**குழுச் செயலாளர்**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்**
**ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே**
**2024 மார்ச் 19 ஆம் திகதி**

# பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் – பதுளை

## பெறுகை அறிவித்தல்

01. பதுளை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் ஆரம்ப பராமரிப்பு சேவையை வலுவூட்டும் செயற்றிட்டத்தின் (PSSP) கீழ் பின்வரும் மருத்துவம் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்குதல், கொண்டு வந்து ஒப்படைத்தல் மற்றும் நிறுவுதலுக்காக முதன்மையாளர்கள் / தலைவர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வமான முகவர்கள் / பிரதிநிதிகளிடமிருந்து 2023 மே 12ஆம் திகதி முதல் 2023 ஜூன் மாதம் 01ஆம் திகதி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விபரங்கள் | எண்ணிக்கை | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | **Medical Items** | | | |
| | **Package No.01 Lab** | | | |
| 01. | 3 Part Hematology Analyzer | 02 | Rs.45,000.00 | Rs.3,000.00 |
| 02. | Biochemistry Semi Auto Analyzer | 04 | | |
| 03. | Dry Bath Incubator | 04 | | |
| | **Package No.02 Eye** | | | |
| 01. | Retinascope (Rechargeable) | 01 | Rs.9,000.00 | Rs.1,000.00 |
| 02. | Auto Refractometer | 01 | | |
| | **Package No.03. Medical** | | | |
| 01. | ECG Machine | 15 | Rs.60,000.00 | Rs.3,500.00 |
| 02. | Handheld Ultrasound Scanner | 05 | | |
| | **General Items** | | | |
| | **Package No.04 .Furniture** | | | |
| 01. | Counter Chairs | 10 | Rs.2,000.00 | Rs.500.00 |
| | **Package No.05. Kitchen Equipment.** | | | |
| 01. | Gas Cooker | 25 | Rs.10,000.00 | Rs.1,000.00 |
| | **Package No.06. Machineries** | | | |
| 01. | Water Purification System | 03 | Rs.40,000.00 | Rs.2,500.00 |
| 02. | Washing Machine 13 Kg | 05 | | |
| | **Package No.07 . Vehicle** | | | |
| 01. | Vehicle Repair and painting | 14 | Rs.50,000.00 | Rs.3,500.00 |

02. விலைமனு ஆவணங்களை 2024 மார்ச் 19ஆம் திகதி முதல் 2024 ஏப்ரல் மாதம் 08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பதுளை, மகியங்கனை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம்.
    - அ. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்கும் எழுத்து மூல விண்ணப்பம்
    - ஆ. பதுளை, மகியங்கனை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் சிறாப்பர் பிரிவிற்கு மீளளிக்கப்படாத வைப்புக் கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு

03. விலைமனு ஆவணங்களை அலுவலக நேரத்தினுள் பதுளை, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2024 ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பதுளை சுகாதார சேவைகள் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

06. விலைமனுக்கள் 2024 ஏப்ரல் மாதம் 09ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்விற்கு வருகை தருமாறு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

07. இயைபுடைய பெறுகை தொடர்பான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024 மார்ச் மாதம் 28ஆம் திகதி பதுளை, மகியங்கனை வீதி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர் கூடத்தில் மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

08. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை 055-2223581 அல்லது 055-2222702 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,**
**மகியங்கனை வீதி,**
**பதுளை.**
**2024-03-19.**

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு

பொது அறிவித்தல்

ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிடட் உரிமம் வழங்குதல்

1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க தொலைத்தொடர்புகள் (திருத்த) சட்டத்தின் கீழ் இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (TRCSL) ("ஆணைக்குழு") தாபிக்கப்பட்டுள்ளதுடன் இது இலங்கையில் தொலைத்தொடர்புகள் துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் வானொலி அதிர்வெண் அலைக்கற்றையை (ஸ்பெட்ரம்) முகாமை செய்வதற்கும் பொறுப்பாக உள்ளது.

2006.03.10 ஆம் திகதிய 1435/20 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிட்ட சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், புதுப்பித்தல் மற்றும் திருத்தம் செய்தல் தொடர்பான வழிகாட்டல் மற்றும் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க இணைய மற்றும் கேபிள் டெலிவிசன் சேவைகள் உள்ளடங்கலாக தரவு தொடர்பாடல் சேவைகள் வழங்குவதற்கு தொலைத்தொடர்புத் திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு 1996 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 (2) ஆம் பிரிவின் கீழ் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிடட் விண்ணப்பித்துள்ளது.

எனவே, பொது / கைத்தொழில் பிரதிநிதித்துவங்கள் / மறுப்புக்களின் கருதுப்பாட்டின் படி ஆணைக்குழுவினால் விதிக்கப்படக் கூடிய அவ்வாறான நிபந்தனைகள் மற்றும் நியதிகளுக்கு இணங்க ஐந்து வருட காலப் பகுதிக்காக ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிடட்டிற்கு உரிமம் வழங்குவதற்காக, அதிமேதகு சனாதிபதிக்கு சிபாரிசு செய்வதற்கு ஆணைக்குழு கருதுகின்றது என்பது சட்டத்தின் 17 (3) (அ) பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஏ.கே கேபிள் நெட்வேர்க் (பிரைவேட்) லிமிட்டிற்கு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான பிரதிநிதித்துவத்தை அல்லது மறுப்பினை 2024.04.17 திகதிக்கு முன்னர் மேற்கொள்ள முடியும் என மேலும் இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. உங்களுடைய பிரதிநிதித்துவம் அல்லது மறுப்பு எழுத்து மூலம் இருத்தல் வேண்டும் என்பதோடு பணிப்பாளர் நாயகம், இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு முகவரியிட்டு அனுப்பப்படுதலும் வேண்டும்.

உத்தேசிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் வரைவொன்றை பொதுமக்கள் ஆணைக்குழுவின் அலுவலக இணையத்தளமான www.trc.gov.lk. இல் பார்வையிடலாம்.

ஆணைக்குழுவின் கட்டளைப்படி

பணிப்பாளர் நாயகம்
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
இல. 276, எல்விடிகல மாவத்தை
கொழும்பு 08.
தொலைபேசி : 011-2689345 பெக்ஸ் : 011-2689341 மின் அஞ்சல் : dgtsl@trc.gov.lk

SELACINE

# கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தி திட்டமான அனுகுவழிகளுக்காக புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தலுக்கான விலைமனுக்களை இரத்துச் செய்தல்

**ஒப்பந்த இல.: RDA/KMTT/AR/GOSL/P1**

| ஒப்பந்த இல. | ஒப்பந்தப் பெயர் | இடர் நிகழ்வுகளுடனான பொறியியலாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | CIDA தரம் (நெடுஞ்சாலை) | விலைமனுப் பிணை (மில்லியன் ரூபாவில்) | ஒப்பந்தக் காலம் (நாட்காட்டி நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/KMTT/AR/GOSL/P1 | KMTT பொதி 1 இற்கான அனுகுவழிகளின் புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் | 450.0 | சி1 மற்றும் சி-2 | 7.0 | 210 |

2024 மார்ச் 18 ஆம் திகதியன்று டெயிலி நியுஸ் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழான வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் RDA/KMTT/AR/GOSL/P1 என்ற இலக்கத்தின் கீழ் கண்டி பல்வகை போக்குவரத்து முனைய அபிவிருத்தி திட்டமான 'அனுகுவழிகளுக்காக புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தலுக்காக RDA/KMTT/AR/GOSL/P1 என்ற ஒப்பந்தத்தின் கீழான விலைமனுக்களுக்கான அழைத்தல் தொடர்பாக தவிர்க்க இயலாத சூழ்நிலைகள் காரணமாக இவ்விலைமனுவானது இத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளதென உங்களுக்கு அறியத்தரப்படுகின்றது.

இதுதொடர்பாக உங்களுக்கேற்பட்டுள்ள அசௌகரியத்திற்காக வருந்துகின்றோம்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,**
**7ஆம் மாடி, 'மஹனெகும மஹமெதுர',**
**டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

# இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## 1500 KM வீதி திட்டத்தின் புனர்நிர்மாணத்திற்கான விலைமனுக்களை அழைத்தல் (IFB)

| தொ.இ | ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|---|
| 01. | RDA/SP/150KM/WP/24 | சியம்பலாகொட வெலமெத வீதியின் புனர்நிர்மாணம் |
| 02. | RDA/SP/150KM/WP/25 | கிம்புலாபிட்டிய சன்சைட் வத்தவீதியின் புணர்நிர்மாணம் |
| 03. | RDA/SP/150KM/WP/31 | உத்துரு கடஹப்பொல வீதி முதல் உத்துரு கடஹப்பொல ஸ்ரீ விஜயாராம விஹாரை வரையான வீதியின் புனர்நிர்மாணம் |

தேசிய போட்டி கேள்வி முறைமையின் கீழ் மேற்படி வேலைகளுக்கான விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 மார்ச் 19 முதல் 2024 ஏப்ரல் 5 வரை RDA இன் இணையதளம் www.rda.gov.lk&mohsl.gov.lk ஐ பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு,
மாகாணப் பணிப்பாளர் பணிமனை (மேல் மாகாணம்)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

# பெறுகை அறிவித்தல்
## மத்திய மாகாண சபை — பிரதான மற்றும் கல்வி அமைச்சு
### தேசிய போட்டி ரீதியில் கேள்வி கோரல் (NCB)

1. மத்திய மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க்காணும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமைகள் உள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து இத்தால் கேள்விகள் கோரப்படுவதுடன் குறித்த வேலைகளும் நிதி மூலாதாரமும், அதற்குரிய பொறியியல் அளவுப்பத்திரத் தொகையும் ஒப்பந்தக் காலமும் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.
2. இயைபுடைய வேலைகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரருக்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள CIDA நாளதுவரையில் தரவேற்றம் செய்யப்பட்ட பதிவு இருத்தல் வேண்டும் என்பதுடன் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளடக்கப்படாதவராக இருத்தல் வேண்டும்.
3. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதி மாகாண பணிப்பாளர், (பொறியியல் சேவைகள்), கல்விக் கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக் கட்டிடம், மூன்றாம் மாடி, யட்டிநுவர வீதி, கண்டி அலுவலகத்தில் (தொலைபேசி இலக்கம் 081-2203892) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அந்த அலுவலகத்தில் உரித்துடைய ஆவணங்களையும் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்க முடியும்.
4. உரிய கேள்வி ஆவணக் கட்டணங்களை மத்திய மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) அவர்களுக்குச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை பிரதி மாகாணப் பணிப்பாளர் - (பொறியியல் சேவைகள்) - கல்விக் கட்டிடங்கள் அலுவலகத்திற்குச் சமர்ப்பித்ததன் பின்னர் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்விப் படிவம் மற்றும் ஆவணங்களை 2024-03-19ஆம் திகதி முதல் 2024-04-08ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையான காலப் பகுதியில் பெற்றுக்கொள்ளலாம்.
5. இது சம்பந்தமான கேள்வி முன்னோடிக் கூட்டம் 2024-04-01ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பிரதி மாகாணப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்), கல்விக் கட்டிடங்கள், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக் கட்டிடம், மூன்றாம் மாடி, யட்டிநுவர வீதி, கண்டி அலுவலகத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
6. முத்திரை பொறிக்கப்பட்ட கேள்விகளை 2024-04-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி, பல்லேகலையில் அமைந்துள்ள மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சின் கணக்கிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அல்லது குறித்த நேரத்திற்கு முன்னர் பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, பிரதான மற்றும் கல்வி அமைச்சு, மாகாண சபைக் கட்டிடத் தொகுதி, பல்லேகலை, குண்டசாலை எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து கேள்விகள் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.
7. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்கு மத்திய மாகாண பிரதான மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரின் பெயரில் அட்டவணையில் தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் விதத்தில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்தில் (CGF) பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் பிணை முறியொன்று அல்லது மத்திய மாகாண பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதி நிதிப் பணிப்பாளர் அவர்களுக்குப் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை அனைத்துக் கேள்விகளுடனும் சமர்ப்பித்தல் வேண்டும்.
8. கேள்வி ஆவணங்களில் வேண்டப்பட்டுள்ள தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய தகைமைகளுடனான அனைத்து ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
9. உரிய தொழில்நுட்பம், நிதி மற்றும் ஏனைய தகைமைகளைப் பூர்த்தி செய்திராத கேள்விதாரர்களின் கேள்விப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
10. சகல கேள்விகளினதும் பெறுமதி 5 மில்லியன் ரூபாவை விஞ்சும்போது ஒப்பந்தத்தை கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெறுவதற்கு சித்திகரமான கேள்விதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனிப் பதிவாளரினால் வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
11. கேள்விகள் தேசிய போட்டி கேள்வி கோரல் முறையின் கீழ் இடம்பெறும். இதன் கீழ் கேள்வியிடப்படும் வேலைகளின் வரிகள் அற்ற மதிப்பீட்டுப் பெறுமதி 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவான வேளைகளில் 2021-02-18ஆம் திகதிய 04/2016 (iv) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA தரம் குறிப்பிடுதல் மற்றும் பிராந்திய கேள்விதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| தொ. இல | வேலை | கேள்வி இல. | மானிய மூலாதாரம் | பொறியியல் அளவுப் பத்திரப் பெறுமதி ரூபா மில்லியன் (வெட் இன்றி) | தேவையான ஆகக் குறைந்த பதிவு (CIDA) | மீளளிக்கப்படும் பிணை முறி அல்லது ரொக்கப் பணம் | | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை முறி செல்லுபடி யாகும் காலம் (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் மீளளிக்கப் படாதது (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை முறியின் பெறுமதி (ரூபா) | ரொக்கப் பண வைப்பு (ரூபா) | | | |
| 1 | மமா/க/சரசவி உயன மகா வித்தியாலயத்தில் 140'x30' மூன்று மாடி கட்டிடத்தின் இரண்டாம் மாடியின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/01 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 32,000,000.00 | C4/C5 | 640,000.00 | 320,000.00 | 210 | 119 | 8,500.00 |
| 2 | மமா/க/ஹைன்போர்ட் மாபாகந்த முஸ்லிம் வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடி கட்டிடத்தின் தரை மாடியின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/02 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 14,000,000.00 | C5/C6 | 280,000.00 | 140,000.00 | 210 | 105 | 5,000.00 |
| 3 | மமா/க/கங்கசிரிபுர ஆரம்ப வித்தியாலயத்தில் 90'x25' மூன்று மாடி கட்டிடத்தின் முதலாம் மாடியின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/03 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 19,500,000.00 | C5/C6 | 390,000.00 | 195,000.00 | 210 | 105 | 6,000.00 |
| 4 | மமா/தெல்/உடுதும்பர இரண்டாம்நிலை பாடசாலையில் 90'x30' மூன்று மாடி கட்டிடத்தின் தரை மாடியின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/04 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 8,500,000.00 | C6/C7 | 170,000.00 | 85,000.00 | 90 | 105 | 3,500.00 |
| 5 | மமா/தெல்/மீமுரே கைகாவல வித்தியாலயத்தின் இரண்டு மாடி ஆசிரியர் குழும விடுதியை நிர்மாணித்தல் - மிகுதி வேலைகள் | CPC/CMS/ACC/06/2024/07/05 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 9,000,000.00 | C6/C7 | 180,000.00 | 90,000.00 | 90 | 105 | 3,500.00 |
| 6 | மமா/வத்/கண்டி மாதிரி வித்தியாலயத்தில் 90'x25' மூன்று மாடி கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் | CPC/CMS/ACC/06/2024/07/06 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 18,000,000.00 | C5/C6 | 360,000.00 | 180,000.00 | 210 | 105 | 6,000.00 |
| 7 | மமா/நா/நாலந்த மகா வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/07 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 11,500,000.00 | C5/C6 | 230,000.00 | 115,000.00 | 90 | 105 | 4,000.00 |
| 8 | மமா/வி/மொரகங்க உல்பொத கனிஷ்ட வித்தியாலயத்தில் 50'x25' இரண்டு மாடி கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் | CPC/CMS/ACC/06/2024/07/08 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 10,000,000.00 | C5/C6 | 200,000.00 | 100,000.00 | 90 | 105 | 3,500.00 |
| 9 | மமா/வ/லியன்வென ஸ்ரீ சுதர்ம வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடி கட்டிடத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/09 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 17,500,000.00 | C5/C6 | 350,000.00 | 175,000.00 | 90 | 105 | 5,500.00 |
| 10 | மமா/க/சௌமியமூர்த்தி தொண்டமான் தமிழ் மகா வித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடி கட்டிடத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/10 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 13,500,000.00 | C5/C6 | 270,000.00 | 135,000.00 | 90 | 105 | 4,500.00 |
| 11 | மமா/ஹங்/ஸ்வர்ணதீப ஆரம்ப வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடி கட்டிடத்தின் தரை மாடியின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | CPC/CMS/ACC/06/2024/07/11 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 5,500,000.00 | C6/C7 | 110,000.00 | 55,000.00 | 60 | 105 | 2,500.00 |
| 12 | மமா/நு/க்ளெக்ஸோ தமிழ் வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடி கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணித்தல் | CPC/CMS/ACC/06/2024/07/12 | மாகாண நிலையான அபிவிருத்தி ஒதுக்கம் | 12,500,000.00 | C5/C6 | 250,000.00 | 125,000.00 | 90 | 105 | 4,500.00 |
| 13 | மமா/வத்/ஹுரிகடுவ மகளிர் வித்தியாலயத்தில் 74'x44' இரண்டு மாடி தொழில்நுட்ப ஆய்வுகூட கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/13 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 26,000,000.00 | C4/C5 | 520,000.00 | 260,000.00 | 210 | 119 | 8,000.00 |
| 14 | மமா/மா/சிறிமாவோ பண்டாரநாயக்க ஆரம்ப வித்தியாலயத்தில் 100'x30' நான்கு மாடி கட்டிடத்தின் மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/14 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 20,500,000.00 | C5/C6 | 410,000.00 | 205,000.00 | 150 | 105 | 6,000.00 |
| 15 | மமா/கலே/வீரமொஹான் ஜயமக வித்தியாலயத்தில் 90'x30' மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் | CPC/CMS/ACC/06/2024/07/15 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 13,000,000.00 | C5/C6 | 260,000.00 | 130,000.00 | 90 | 105 | 4,500.00 |
| 16 | மமா/கலே/தொலம்புகொல்ல மகா வித்தியாலயத்தில் 70'x25' மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள் - கட்டம் 1) | CPC/CMS/ACC/06/2024/07/16 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 18,000,000.00 | C5/C6 | 360,000.00 | 180,000.00 | 210 | 105 | 6,000.00 |
| 17 | மமா/ஹங்கு/மத்துரட்ட மகா வித்தியாலயத்தில் 90'x30' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/17 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 13,000,000.00 | C5/C6 | 260,000.00 | 130,000.00 | 90 | 105 | 4,500.00 |
| 18 | மமா/ஹங்கு/அக்ரம் ஆரம்ப வித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/18 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 28,000,000.00 | C4/C5 | 560,000.00 | 280,000.00 | 210 | 119 | 8,000.00 |
| 19 | மமா/கொத்/மல்தெனிய மகா வித்தியாலயத்தில் 90'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/19 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 8,000,000.00 | C6/C7 | 160,000.00 | 80,000.00 | 90 | 105 | 3,000.00 |
| 20 | மமா/கொத்/ஸ்ரீமத் அனகாரிக தர்மபால ஆரம்ப வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/20 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 25,000,000.00 | C4/C5 | 500,000.00 | 250,000.00 | 210 | 119 | 7,000.00 |
| 21 | மமா/தெனு/மெனிக்திவெல ஆரம்ப வித்தியாலயத்தில் 70'x25' இரண்டு மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/21 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 6,000,000.00 | C6/C7 | 120,000.00 | 60,000.00 | 90 | 105 | 3,000.00 |
| 22 | மமா/நு/யதன்சைட் தமிழ் வித்தியாலயத்தில் 90'x25' மூன்று மாடிக் கட்டிடத்தை நிர்மாணித்தல் (மிகுதி வேலைகள்) | CPC/CMS/ACC/06/2024/07/22 | கல்வி அமைச்சு - அண்மைய பாடசாலையே சிறந்த பாடசாலை செயற்றிட்டம் | 22,000,000.00 | C5/C6 | 440,000.00 | 220,000.00 | 210 | 119 | 7,000.00 |

**அமைச்சின் செயலாளர் மற்றும் பெறுகைக் குழுத் தலைவர்,**
**பிரதான மற்றும் கல்வி அமைச்சு,**
**மாகாண சபைக் கட்டிடத் தொகுதி,**
**பல்லேகலை, குண்டசாலை.**
**தொலைபேசி / தொலைநகல் இல. 081-4481322 / 081-2424938**

# இலங்கை துறைமுக அதிகாரசபை

## திருத்த அறிவித்தல்

சிலோன் டெய்லி நியுஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளில் 2024 பெப்ரவரி 29 மற்றும் மார்ச் 01 ஆம் திகதி வெளியான ஆரம்பத்தில் 2024.03.21 ஆம் திகதி திறப்பதற்கு இருந்த கீழ் குறிப்பிடப்பட்ட கேள்விமனுவின் இறுதித் திகதி இலங்கை துறைமுக அதிகாரசபை சார்பில் திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் திருத்தப்பட்டுள்ளது.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | இறுதித் திகதி என குறிப்பிடப்பட்டது | புதிய இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|
| CMS/LP/24/PT/04/001 | கி.கொ.மு. இல் பரிந்துரைக்கப்பட்ட நிர்வாகக் கட்டிடத்திற்காக மின் விளக்கு பொருத்துதல் | 2024/03/21 13.30 மணி | 2024/03/28 13.30 மணி |

மற்ற நிபந்தனைகள் மாற்றமின்றி நீடிக்கும்

**வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகாரசபை**
**இல. 45, லெய்டன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01.**
**தொலைபேசி இலக்கங்கள் - 2482231, 2483338, 2482832, 2482409, 2483024, 2482652**

# கேள்வி கோரல்

## சுகாதார அமைச்சு

## 2024/2025ஆம் ஆண்டிற்காக அரச வைத்தியசாலைகளுக்கு பச்சை உணவுப் பொருட்களை வழங்குதல்

01. கொழும்பு-10, ஸ்ரீ சங்கராஜ மாவத்த, இல. 26, மெடி ஹவுஸ் கட்டிடத்தின் முதலாம் மாடியில் அமைந்துள்ள சுகாதார அமைச்சின், அமைச்சு பெறுகைக்குழுவின் தலைவரால் இங்கு 4ஆம் பந்தியின் கீழ் குறிப்பிடப்படும் வைத்தியசாலைகள் 38 இற்காக 2024/2025ஆம் ஆண்டு சார்பாக நோயாளிகள் மற்றும் கனிஷ்ட ஊழியர் குழாமிற்கு பச்சையான உணவை தொடர்ந்துது வழங்குவதை உறுதி செய்யக்கூடிய வழங்குநர்களிடமிருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.
02. இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர் ஒரு வைத்தியசாலை அல்லது அதற்கு மேற்பட்ட தரத்திற்கு சுகாதார அமைச்சின் பிரதம கணக்காளருக்கு ஒவ்வொரு வைத்தியசாலைக்கு மீளளிக்கப்படாத கீழே அட்டவணையில் ஒவ்வொரு வைத்தியசாலையுடனும் சம்பந்தப்பட்ட குறிப்பிடப்பட்டுள்ள கேள்வி ஆவணக் கட்டணமாக செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் எழுத்துமூல வேண்டுதல் மற்றும் தமது தேசிய அடையாள அட்டையின் பிரதியை சமர்ப்பித்த பின்னர் 2024.03.19 முதல் 2024.04.08 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரையான காலத்திற்குள் சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் இருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
03. அந்தந்த வைத்தியசாலையுடன் சம்பந்தப்பட்ட உணவு மதிப்பீடு பற்றிய விபரங்களை கேள்வி மாதிரிப் பத்திரத்துடன் விநியோகிக்கப்படும்.
04. ஒரு வைத்தியசாலைக்கு மேற்பட்ட அளவில் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பின் அதற்காக வேறு வேறாக கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

| தொ. இல. | வைத்தியசாலையின் பெயர் | பெறுகை இலக்கம் | கேள்வி ஆவணக் கட்டண பெறுமதி (ரூ) | கேள்விப் பிணை பெறுமதி (ரூ) |
|---|---|---|---|---|
| 01. | இலங்கை தேசிய வைத்தியசாலை - தூய மரக்கறி மற்றும் மரக்கறி வழங்குதல் | MH/PB/05/RF/01/2024 | 20,000.00 | 1,451,470.00 |
| 02. | இலங்கை தேசிய வைத்தியசாலை - உலர் உணவுப் பொருட்கள் வழங்குதல் | MH/PB/05/RF/02/2024 | 35,000.00 | 2,347,695.00 |
| 03. | இலங்கை தேசிய வைத்தியசாலை - இறைச்சி மற்றும் முட்டை வழங்குதல் | MH/PB/05/RF/03/2024 | 3,500.00 | 259,970.00 |
| 04. | இலங்கை தேசிய வைத்தியசாலை - பேக்கரி உற்பத்தி வழங்குதல் | MH/PB/05/RF/04/2024 | 1,000.00 | 10,575.00 |
| 05. | இலங்கை தேசிய வைத்தியசாலை - பொதி செய்யப்பட்ட உணவுப் பொருட்கள் வழங்குதல் | MH/PB/05/RF/05/2024 | 20,000.00 | 1,191,096.00 |
| 06. | மாவட்ட வைத்தியசாலை - கந்தானை | MH/PB/05/RF/06/2024 | 3,500.00 | 178,287.00 |
| 07. | சுவாச நோய்களுக்கான தேசிய வைத்தியசாலை - வெலிசர | MH/PB/05/RF/07/2024 | 12,500.00 | 770,911.50 |
| 08. | விஜயகுமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலை - சீதுவை | MH/PB/05/RF/08/2024 | 3,500.00 | 157,098.00 |
| 09. | மாவட்ட பொது வைத்தியசாலை - நீர்கொழும்பு | MH/PB/05/RF/09/2024 | 3,500.00 | 413,362.00 |
| 10. | கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம | MH/PB/05/RF/10/2024 | 20,000.00 | 1,199,624.00 |
| 11. | வாதம் மற்றும் புனர்வாழ்வு வைத்தியசாலை - ராகம | MH/PB/05/RF/11/2024 | 3,500.00 | 385,774.00 |
| 12. | டி சொய்சா மகளிர் மருத்துவமனை | MH/PB/05/RF/12/2024 | 3,500.00 | 284,739.50 |
| 13. | அபேக்ஷா வைத்தியசாலை - மஹரகம | MH/PB/05/RF/13/2024 | 12,500.00 | 839,166.00 |
| 14. | தேசிய மனநோய் சுகாதார நிறுவகம் I - முல்லேரியாவ | MH/PB/05/RF/14/2024 | 35,000.00 | 2,157,343.00 |
| 15. | தேசிய மனநோய் சுகாதார நிறுவகம் II - முல்லேரியாவ | MH/PB/05/RF/15/2024 | 12,500.00 | 680,369.00 |
| 16. | கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை - களுபோவில | MH/PB/05/RF/16/2024 | 20,000.00 | 1,064,528.50 |
| 17. | மாவட்ட பொது வைத்தியசாலை - நுவரெலிய | MH/PB/05/RF/17/2024 | 12,500.00 | 923,333.00 |
| 18. | பொது வைத்தியசாலை - மொனராகலை | MH/PB/05/RF/18/2024 | 12,500.00 | 575,084.00 |
| 19. | தேசிய தொற்றுநோய் வைத்திய நிறுவனம் - அங்கொடை | MH/PB/05/RF/19/2024 | 3,500.00 | 411,515.00 |
| 20. | தொழுநோய் வைத்தியசாலை - ஹெந்தளை | MH/PB/05/RF/20/2024 | 1,000.00 | 90,145.50 |
| 21. | லேடி ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலை - கொழும்பு-08 | MH/PB/05/RF/21/2024 | 20,000.00 | 1,065,188.00 |
| 22. | தேசிய கண் வைத்தியசாலை - கொழும்பு-10 | MH/PB/05/RF/22/2024 | 12,500.00 | 503,368.00 |
| 23. | மாவட்ட பொது வைத்தியசாலை - ஹம்பாந்தோட்டை | MH/PB/05/RF/23/2024 | 12,500.00 | 666,136.50 |
| 24. | மாவட்ட பொது வைத்தியசாலை - மாத்தறை | MH/PB/05/RF/24/2024 | 12,500.00 | 894,956.50 |
| 25. | போதனா வைத்தியசாலை - கராபிட்டிய | MH/PB/05/RF/25/2024 | 20,000.00 | 1,375,828.50 |
| 26. | பொது வைத்தியசாலை - களுத்துறை | MH/PB/05/RF/26/2024 | 12,500.00 | 842,486.50 |
| 27. | போதனா வைத்தியசாலை - மஹமோதர | MH/PB/05/RF/27/2024 | 3,500.00 | 199,729.50 |
| 28. | போதனா வைத்தியசாலை - குருநாகல் | MH/PB/05/RF/28/2024 | 20,000.00 | 1,747,414.50 |
| 29. | கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலை - முல்லேரியாவ | MH/PB/05/RF/29/2024 | 3,500.00 | 401,833.50 |
| 30. | நெவில் பெர்னாண்டோ போதனா வைத்தியசாலை | MH/PB/05/RF/30/2024 | 3,500.00 | 421,295.50 |
| 31. | காசல் வீதி மகளிர் மருத்துவமனை | MH/PB/05/RF/31/2024 | 3,500.00 | 431,673.00 |
| 32. | போதனா வைத்தியசாலை - மட்டக்களப்பு | MH/PB/05/RF/32/2024 | 20,000.00 | 1,196,601.00 |
| 33. | சிரிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை- பேராதனை | MH/PB/05/RF/33/2024 | 3,500.00 | 284,851.00 |
| 34. | போதனா வைத்தியசாலை - அநுராதபுரம் | MH/PB/05/RF/34/2024 | 20,000.00 | 1,714,460.00 |
| 35. | போதனா வைத்தியசாலை - பேராதனை | MH/PB/05/RF/35/2024 | 12,500.00 | 669,297.00 |
| 36. | போதனா வைத்தியசாலை - இரத்தினபுரி | MH/PB/05/RF/36/2024 | 20,000.00 | 1,547,574.50 |
| 37. | மாவட்ட பொது வைத்தியசாலை - எம்பிலிப்பிட்டிய | MH/PB/05/RF/37/2024 | 12,500.00 | 575,499.50 |
| 38. | போதனா வைத்தியசாலை - பதுளை | MH/PB/05/RF/38/2024 | 20,000.00 | 1,391,440.00 |

05. மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ள நிதிநிறுவனத்திலிருந்து காப்புறுதி நிறுவனத்திலிருந்து இல. 385, சுவசிரிபாய, வண. பத்தேகம விமலவங்ச ஹிமி மாவத்த, கொழும்பு-10 முகவரியில் உள்ள சுகாதார அமைச்சு செயலாளரின் பெயருக்கு எழுதப்பட்ட கேள்வி பிணைமுறியொன்றை கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த தினம் முதல் 119 நாள் காலத்திற்கு செல்லுபடியாகுமாறு பெற்றுக்கொண்டு சமர்ப்பித்தல் வேண்டும். (2024.04.09 முதல் 2024.08.05 வரை செல்லுபடியதல் வேண்டும்.)
06. விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் **“சுகாதார அமைச்சின் கீழ் நடாத்தப்படும் ............................ வைத்தியசாலைக்கான பச்சை உணவுப் பொருட்களை வழங்குதல் - 2024/2025”** என்று தெளிவாகக் குறிப்பிட்டு 2024.04.09 மு.ப. 10.00 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், அமைச்சு பெறுகை (சீ) கமிட்டி, சுகாதார அமைச்சு, மெடி ஹவுஸ் கட்டிடம், முதலாம் மாடி, இல. 26 ஸ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு-10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அம்முகவரியில் அமைந்துள்ள பெறுகைப் பிரிவிற்கு பிரவேசிக்கும் இடத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
07. 2024.04.09 மு.ப. 10.00 இற்கு கேள்வி ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும். கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
08. பூர்த்தியற்ற கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் இணைத்து அனுப்பப்படும் எழுத்துமூல சான்றுகளை முறையாக உறுதி செய்யாத கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
09. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை அமைச்சு பெறுகைக்குழுவிற்கு உரியது.
10. கேள்வி ஆவணங்களை காசு செலுத்தாமலேயே சுகாதார அமைச்சின் பெறுகைப் பிரிவில் சாதாரண அலுவலக நேரங்களில் பரீட்சிக்கலாம்.
11. இது பற்றிய மேலதிக தகவல்களை சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் (பெறுகை)/ சிரேஷ்ட உதவிச் செயலாளர் (பெறுகை) இடம் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இல: 0112112713/ 0112112714/ 0112112715/ 0112112717(.

**தலைவர், அமைச்சு பெறுகை (சீ) குழு,**
**சுகாதார அமைச்சு,**
**மெடி ஹவுஸ் கட்டிடம், முதலாம் மாடி,**
**இல. 26, ஸ்ரீ சங்கராஜ மாவத்த, கொழும்பு-10.**

# INVITATION FOR BIDS (IFB)

**DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE**

## VENGALACHEDDIKULAM PRADESHIYA SABHA

## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a **grant** from the **European Union** towards the cost of **Local Development Support Project**, and intends to apply part of the proceeds of this **grant** to payments under the Contract for Work as described below:
2. The **Chairman, Provincial Project Procurement Committee (PPPC)** on behalf of the **Vengalacheddikulam Pradeshiya Sabha** now invites sealed bids from eligible and qualified bidders for the work as described below:

| No. | Contract No. | Contract Name | Employer's Estimated Cost (Rs. Mn) | CIDA Grade & Specialty | Contract Period (Days) | Bid Security Amount (Rs.) | Bid Validity Period up to | Bid Security Validity Period up to |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/NP/VAV/VCKPS/2024/PT3/01 | Construction of Sales Outlets at Rahumadnagar, Sooduventhapulavu | 25.33 | C5 or above Building Constructions | 147 | 380,000.00 | 4-Aug-2024 | 1-Sep-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty and grade as stated above with the Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements to qualify for contract award are included in Section 5 (Bidding Data and Contract Data) in the Bidding Document.
6. Interested bidders may obtain further information from **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Medawachchiya Road, Cheddikulam, Vavuniya (T.P No: 0242260914, Fax No: 0242260913)** and inspect the bidding documents at **Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Medawachchiya Road, Cheddikulam, Vavuniya** from **19-Mar-2024** until **7-Apr-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on submission of a written application to the **Secretary, Vengalacheddikulam Pradeshiya Sabha, Mannar - Medawachchiya Road, Cheddikulam, Vavuniya** from **19-Mar-2024** until **7-Apr-2024** between **09:00 Hrs and 15:00 Hrs** on normal working days upon payment of a non-refundable fee of **Rs.7,500.00.** The method of payment will be **by cash.**
8. Bids shall be delivered in duplicate to **Chairman, Provincial Project Procurement Committee (PPPC), Local Development Support Project (LDSP), Department of Local Government (NP), Elders' Home Complex, Kaithady** at or before **14.00 Hrs on 8-Apr-2024**. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
9. All bids shall be accompanied by a **Bid Security** as stated in the Table above.

**Chairman,**
**Provincial Project Procurement Committee (PPPC),**
**Local Development Support Project (LDSP),**
**Department of Local Government (NP),**
**Elders' Home Complex,**
**Kaithady.**

19-Mar-2024

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 20 எண்ணிக்கையான வளிச்சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல்

### கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில தெஹிவளை

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் இந்த வைத்தியசாலையின் பல்வேறு பிரிவுகளுக்கு வளிச்சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

(1) இது தொடர்பில் ஆர்வம் காட்டுவோர் விலைமனு ஆவணக் கட்டணமாக 2,000.00 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் காசாளர் பிரிவிற்குச் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையும் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-03-19ஆம் திகதி முதல் 2024-04-01ஆம் திகதி வரையான பொதுவான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை இந்த வைத்தியசாலையின் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

(2) விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை - வளிச்சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்தல் - 2024-04-02’’ எனக் குறிப்பிட்டு 2024-04-02ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை, களுபோவில, தெஹிவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையின் கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். 2024-04-02ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

(3) விலைமனுக்களை இரு பிரதிகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனக் குறிப்பிட்டு வெவ்வேறான உறைகளில் இட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டுச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(4) விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவ்விடத்திலேயே விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் அவ்வேளையில் கலந்து கொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

(5) விலைமனு ஆவணங்களை இலவசமாக கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரின் அலுவலகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

(6) அரசாங்க ஒப்பந்தங்கள், நிபந்தனைகளை மீறி அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ள நபர்களுக்கு விலைமனு விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

(7) குறித்த விலைமனுவை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

(8) மேலதிக விபரங்களுக்கு கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை கணக்காளரைத் தொடர்பு கொள்ளவும். (தொலைபேசி: 0112763038)

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை,**
**களுபோவில, தெஹிவளை.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# தொடரை இழந்தது இலங்கை



பங்களாதேஷுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் 4 விக்கெட்டுகளால் தோல்வியை சந்தித்த இலங்கை அணி இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் தொடரை 1–2 என இழந்தது.

இதில் இலங்கை சார்பில் ஜனித் லியனகே பெற்ற கன்னி ஒருநாள் சதம் வீணானதோடு காயத்துக்கு பதில் மாற்று வீரராக துடுப்பெடுத்தாட களமிறங்கிய பங்களாதேஷ் இளம் வீரர் தன்சீத் தமீம் அந்த அணியின் வெற்றிக்கு உதவினார்.




சட்டக்ராமில் பகல் ஆட்டமாக நேற்று (18) நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி ஆரம்பத்திலேயே மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் சவாலான இலக்கொன்றை நிர்ணயிக்க முடியாமல் போனது.

மத்திய வரிசையில் வந்த லியனகே கடைசி வரை நின்று பிடித்து ஆடி 102 பந்துகளில் 11 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 101 ஓட்டங்களை பெற்றார். எனினும் வேறு எந்த வீரரும் 37 ஓட்டங்களை தாண்டவில்லை.

முதல் இரு விக்கெட்டுகளையும் 12 ஓட்டங்களுக்கு பறிகொடுத்த இலங்கை கடைசி வரை முக்கிய இடைவெளிகளில் விக்கெட்டுகளை இழந்தது. இதனால் அந்த அணி 50 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 235 ஓட்டங்களையே பெற்றது.

பங்களாதேஷ் சார்பில் பந்துவீச்சில் தக்சின் அஹமட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு முஸ்தபிசுர் ரஹ்மான் மற்றும் மஹிதி ஹசன் மிராஸ் தலா 2 விக்கெட்டுகளை பதம்பாத்தனர்.




இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த பங்களாதேஷ் அணியின் ஆரம்ப விக்கெட்டுகளை லஹிரு குமாரவால் சாய்க்க முடிந்தது. பங்களாதேஷ் அணி 113 ஓட்டங்களில் முதல் நான்கு விக்கெட்டுகளை இழந்தபோதும் உபாதையால் போட்டியின் நடுவில் விலகிய சௌம்யா சார்கருக்கு பதில் மாற்று வீரராக ஆரம்ப துடுப்பாட்ட வரிசையில் வந்த தன்சீத் தமீம் சிறப்பாக துடுப்பெடுத்தாடி பங்களாதேஷ் அணியின் வெற்றியை நெருங்கச் செய்தார். 81 பந்துகளுக்கு முகம்கொடுத்த அவர் 9 பௌண்டரிகள் மற்றும் 4 சிக்ஸர்களுடன் 84 ஓட்டங்களை பெற்றார்.

இதன்மூலம் பங்களாதேஷ் அணி 40.2 ஓவர்களிலேயே 6 விக்கெட்டுகளை இழந்து 237 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஒருநாள் போட்டிகளில் தனது சிறந்த பந்துவீச்சை வெளிப்படுத்திய லஹிரு குமார 8 ஓவர்களில் 48 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை பதம்பாத்தார்.

அடுத்து இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் எதிர்வரும் மார்ச் 22 ஆம் திகதி சில்ஹட்டில் ஆரம்பமாகவுள்ளது.

## ஆப்கான் வான் தாக்குதலில் 8 பெண்கள், குழந்தை பலி

### பாக். மீது தலிபான் குற்றச்சாட்டு



ஆப்கானிஸ்தானில் வான் தாக்குதல் நடத்தி எட்டு பெண்கள் மற்றும் ஒரு குழந்தையை கொன்றதாக பாகிஸ்தான் மீது தலிபான்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பாகிஸ்தானுடனான எல்லைக்கு அருகில் இருந்த வீடுகள் மீது நேற்று (18) அதிகாலையில் இந்த பொறுப்பற்ற தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக தலிபான் அரசின் பேச்சாளர் சபிஹுல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பாகிஸ்தான் உடன் எந்த பதிலும் அளிக்கவில்லை. எனினும் கடந்த சனிக்கிழமை அடையாளம் காணப்படாத ஆயுதக் குழுவொன்றினால் ஏழு துருப்பினர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுக்கப்படும் என்று பாக். ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரி எச்சரித்த நிலையிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

இதில் வடக்கு வசிரிஸ்தானில் ஆப்கான் எல்லைக்கு அருகில் இருக்கும் இராணுவ சோதனைச்சாவடி ஒன்றின் மீதே சனிக்கிழமை தாக்குதல் இடம்பெற்றுள்ளது. அந்தத் தாக்குதல் ஆப்கானிஸ்தானில் இருந்து வந்ததாக பாகிஸ்தான் குறிப்பிட்டது. இவ்வாறான தாக்குதல்கள் அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சனிக்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலுக்கு பதிலடியாகவே ஆப்கானின் கோஸ்ட் மற்றும் பக்திகா மாகாணங்களில் நேற்று தாக்குதல்கள் நடத்தப்பட்டதாக உள்ளூர் அரச அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

2021 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சிக்கு வந்தது தொடக்கம் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் இடையிலான பதற்றம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் 5ஆவது தவணைக்கு அமோக வெற்றி

ரஷ்ய ஜனாதிபதி தேர்தலில் விளாடிமிர் புட்டின் தனது ஐந்தாவது தவணைக்காக அமோக வெற்றியீட்டியுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) நிறைவடைந்த தேர்தலில் தனக்கு எதிராக மூன்று வேட்பாளர்கள் போட்டியிட்டபோதும் எந்த எதிர்ப்பும் இன்றி புட்டின் 87 வீத வாக்குகளை வென்றுள்ளார்.

ரஷ்ய பாதுகாப்பு பிரிவான கே.ஜி.பியின் முன்னாள் லெப்டினன்ட் கேணலான 71 வயது புட்டி 1999 இல் அதிகாரத்துக்கு வந்த நிலையில், உக்ரைன் மீதான படையெடுப்பு மேற்குலகின் கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் ரஷ்யாவில் தனது பிடியை மேலும் இறுக்கியுள்ளார்.



இதன்படி அடுத்த ஆறு ஆண்டுகளும் அவர் பதவியில் இருந்தால் கடந்த 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றில் ரஷ்யாவில் நீண்ட காலம் ஆட்சியில் இருந்த ஜோசப் ஸ்டாலினின் சாதனையை முறியடிப்பார்.

எனினும் அரசியல் எதிர்ப்பாளர்கள் கைது செய்யப்பட்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு நடத்தப்பட்ட இந்தத் தேர்தல் சுதந்திரமானது மற்றும் நியாயமானதாக இல்லை என்று அமெரிக்கா, ஜெர்மனி, பிரிட்டன் மற்றும் மற்ற நாடுகள் குறிப்பிட்டுள்ளன.

இதில் கம்யூனிஸ வேட்பாளர் நிகொலாய் கரிடோனோவ் 4 வீதத்துக்கும் குறைவான வாக்குகளுடன் இரண்டாவது இடத்தை பெற்றதோடு புதுமுகமாக போட்டியிட்ட விளாடிஸ்லோவ் டவன்கோல் மூன்றாவது இடத்தையும் தீவிர தேசியவாதியான லியோனிட் ஸ்லுட்ஸ்கி நான்காவது இடத்தையும் பெற்றனர்.

தேர்தல் வெற்றிக்குப் பின்னர் மொஸ்கோவில் ஆதரவாளர்கள் முன் பேசிய புட்டின், உக்ரைனில் ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிப்பதாகவும் ரஷ்யாவின் இராணுவத்தை பலப்படுத்துவதாகவும் உறுதி அளித்தார்.

# காசாவின் அல் ஷிபா மருத்துவமனையை இஸ்ரேலிய படை மீண்டும் சுற்றிவளைப்பு



### உயிரிழப்புகள் பதிவு: மக்களை வெளியேறவும் உத்தரவு

காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல் ஷிபாவில் இஸ்ரேலிய இராணுவம் நேற்று (18) பாரிய சுற்றிவளைப்பு ஒன்றை நடத்தியதோடு இதனால் பெரும் உயிர் சேதங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் கட்டடம் ஒன்றில் தீ பரவியதாகவும் பலஸ்தீன சுகாதார நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்த மருத்துவமனையை ஹமாஸ் மூத்த தலைவர்கள் பயன்படுத்துவதாக உளவுத் தகவல் கிடைத்ததை அடுத்து முக்கியம் வாய்ந்த இந்த சுற்றிவளைப்பை நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. மருத்துவமனை வளாகத்துக்குள் படையினர் நுழைந்ததும் சூடு நடத்தப்பட்டதாகவும் அது கூறியது.

இந்த மருத்துவமனையை சூழ டாங்கிகள் நிறுத்தப்பட்டிருப்பதாக அங்கிருப்பவர்கள் ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளனர்.

போரினால் இடம்பெயர்ந்த ஆயிரக்கணக்காக மக்கள் இந்த மருத்துவமனை வளாகத்தில் அடைக்கலம் பெற்றிருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பரில் இந்த மருத்துவமனை வளாத்தில் இஸ்ரேல் நடத்திய சுற்றிவளைப்பு சர்வதேச அளவில் கடும் கண்டனத்திற்கு காரணமானது.

தற்போது முன்னெடுத்துள்ள சுற்றிவளைப்பை கண்டித்திருக்கும் காசாவின் ஹமாஸ் அரச ஊடக அலுவலகம், 'டாங்கிகள், ஆளில்லா விமானங்கள் மற்றும் ஆயுதங்களுடன் அல் ஷிபா மருத்துவ வளாகத்திற்குள் ஊடுருவியதாகவும் அங்கு சூடு நடத்தியது ஒரு போர் குற்றமாகும்' என்றும் தெரிவித்துள்ளது.

இதன்போது மருத்துவமனை வளாகத்திற்குள் நடத்திய தாக்குதலில் பல டஜன் பேர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவ வட்டாரங்களை மேற்கோள்காட்டி பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

மருத்துவமனை வளாகத்தின் வாயில் பகுதியில் தீ பரவியதால் அங்கு இடம்பெயர்ந்து இருக்கும் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட பலரும் மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. அங்கு சுமார் 30,000 இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் நிலையில் தொலைத்தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இஸ்ரேலியப் படை விசேட சத்திரசிகிச்சை கட்டிடம் மற்றும் அவசர வரவேற்பு கட்டடத்திற்குள் ஊடுருவி அங்கு நகரும் அனைவர் மீதும் சூடு நடத்தி இருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. ஜன்னல் பகுதியை நெருங்கும் அனைவர் மீதும் இஸ்ரேலிய துருப்புகள் சூடு நடத்தியதால் காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் மருத்துவ குழுக்களுக்கு முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக வபா குறிப்பிட்டுள்ளது.

இதில் பலர் கொல்லப்பட்டிருப்பதாக மருத்துவமனைக்கு அருகில் இருப்பவர்களிடம் இருந்து தகவல் கிடைத்தது என்று காசா சுகாதார அமைச்சு கூறியது. 'கடுமையான துப்பாக்கிச் சூடு மற்றும் பீரங்கி தாக்குதல்கள் காரணமாக யாரையும் மருத்துவமனைக்குள் அழைத்துச் செல்ல முடியாதுள்ளது' என்று அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.



போருக்கு முன்னர் காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையாக இருந்த அல் ஷிபா, வடக்கு காசாவில் பகுதி அளவு மாத்திரம் இயங்கும் ஒரு மருத்துவ பராமரிப்பு நிலையமாக மாறியுள்ளது.

'திடீரென்று வெடிப்புகள் மற்றும் குண்டு சத்தங்கள் கேட்டதோடு, உடன் டாங்கிகள் வர ஆரம்பித்தன. அவை மேற்குப் பாதையான அல் ஷிபாவை நோக்கி வந்த நிலையில் துப்பாக்கி மற்றும் வெடிப்புச் சத்தங்கள் அதிகரித்தன' என்று மருத்துவமனையில் இருந்து ஒரு கிலோமீற்றர் சுற்று வட்டத்தில் இருக்கும் இரு குழந்தைகளின் தந்தையான முஹமது அலி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்தார்.

இந்நிலையில் காசா நகரில் உள்ள இந்த மருத்துவமனையை சூழ இஸ்ரேல் இராணுவம் புதிய துண்டுப்பிரசுரத்தை வீசியுள்ளது.

'ரிமாலில் இருப்பவர்கள் மற்றும் இடம்பெயர்ந்த அனைவரும் மற்றும் அல் ஷிபா மற்றும் அதற்கு அருகாமையில் இடம்பெயர்ந்திருக்கும் அனைவருக்குமானது: நீங்கள் ஆபத்தான போர் வலயத்தில் உள்ளீர்கள். பயங்கரவாத கட்டமைப்பை அழிப்பதற்கு இஸ்ரேலிய பாதுகாப்பு படை குடியிருப்பு பகுதியில் கடுமையாக செயற்படுகிறது' என்று அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொதுமக்கள் கரையோர வீதியை பயன்படுத்தி தெற்கு காசாவில் உள்ள அல் மவாசிக்கு செல்லும்படி அந்த அறிவித்தலில் உத்தரவிடப்பட்டுள்ளது.

இஸ்ரேல் தனது இராணுவ இலக்குகளை அடைய முடியாததன் குழப்பம், அவநம்பிக்கையை வெளிப்படுத்துவதாகவே இந்த மருத்துவமனை மீதான சுற்றிவளைப்பு உள்ளது என்று ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. 'பாதுகாப்பு இன்றி இருக்கும் பொதுமக்களை இலக்கு வைப்பதைத் தவிர, எந்த ஒரு இராணுவ அடைவையும் எட்ட முடியாத குழப்பம் மற்றும் அவநம்பிக்கையை அவர்கள் வெளிப்படுத்த ஆரம்பித்துள்ளனர்' என்று ஹமாஸ் கூறியது.

அல் ஷிபா மருத்துவமனை மாத்திரம் அன்றி இடம்பெயர்ந்த குடும்பங்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றிலும் சுற்றிவளைப்பு தேடுதலை நடத்திய இஸ்ரேலிய இராணுவம் பலரை கைது செய்ததாக குடியிருப்பாளர்கள் மற்றும் ஹமாஸ் ஊடகம் குறிப்பிட்டது. கடற்கரை அகதி முகாம் ஒன்றின் விளிம்பிலும் டாங்கிகள் செயற்பட்டு அருகில் இருக்கும் சில கட்டடங்கள் மீது செல் குண்டுகளை வீசியதாகவும் குடியிருப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

**13,000 சிறுவர்கள் பலி**

காசாவில் தொடர்ந்து தாக்குதல்கள் நீடித்து வரும் நிலையில் கடந்த 24 மணி நேரத்தில் குறைந்தது 81 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு மேலும் 116 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது. இந்தக் காலப்பிரிவில் எட்டு படுகொலை சம்பவங்கள் இடம்பெற்றதாகவும் அது சுட்டிக்காட்டியது.

இதன்படி கடந்த ஐந்து மாதங்களுக்கு மேலாக இடம்பெற்று வரும் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 31,726 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 73,792 பேர் காயமடைந்துள்ளனர். இதில் சுமார் 8,000 பேர் காணாமல்போயிருப்பதாக நம்பப்படும் நிலையில் இவர்கள் உயிரிழந்த நிலையில் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

கொல்லப்பட்ட பலஸ்தீனர்களில் 70 வீதத்துக்கும் அதிகமானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்கள் என்று சுகாதார அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி போர் வெடித்தது தொடக்கம் காசாவில் இஸ்ரேல் 13,000க்கும் அதிகமான சிறுவர்களை கொன்றிருப்பதாகவும் மேலும் பலர் அழக்கூட சக்தி இல்லாத அளவுக்கு ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதியமான யுனிசெப் குறிப்பிட்டுள்ளது.

'மேலும் ஆயிரக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர் அல்லது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை எங்களால் தீர்மானிக்க முடியவில்லை. அவர்கள் இடிபாடுகளுக்கு அடியில் சிக்கியிருக்கலாம். உலகில் வேறு எந்த மோதலிலும் இந்த அளவு சிறுவர்களின் உயிரிழப்பை நாம் கண்டதில்லை' என்று யுனிசெப் பணிப்பாளர் நாயகம் கெதரின் ரசல், சி.பி.எஸ். நியுஸ் தொலைக்காட்சிக்கு குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் ஹமாஸுடனான போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைக்காக இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட் தலைவரின் தலைமையில் இஸ்ரேலிய தூதுக் குழு ஒன்று கட்டார் சென்றிருக்கும் நிலையில் இந்தப் பேச்சுவார்த்தைக்கு குறைந்தது இரண்டு வாரங்கள் எடுத்துக் கொள்ளும் என்று இஸ்ரேலிய அதிகாரிகளை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இதில் காசாவில் தொடர்ந்து பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 100 இஸ்ரேலிய பணயக்கைதிகளில் 40 பேரை விடுவிப்பதற்கு பகரமாக ஆறு வார போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த இஸ்ரேல் எதிர்பார்ப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கட்டாரில் இருக்கும் ஹமாஸ் பிரதிநிதிகள் காசாவை தளமாகக் கொண்ட அந்த அமைப்பின் உறுப்பினர்களுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதில் இருக்கும் சவால்கள் பேச்சுவார்த்தையை தாமதப்படுத்துவதாக இஸ்ரேலிய அதிகாரி குறிப்பிட்டுள்ளார். ஏற்கனவே காசாவில் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்தும் வகையில் ஹமாஸ் அமைப்பும் கடந்த வாரம் போர் நிறுத்த பரிந்துரை ஒன்றை செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 மார்ச் மாதம் 19ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.